# இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

முதலாம் பாகம்

(கி. பி. 1505 வரை)

EME

பு. இளையதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

## முதலாம் பாகம்

## (கி. பி. 1505 வரை)

ஆக்கியோன்:
**மு. இளையதம்பி B. A. (Lond.)**
பயிற்றப்பட்ட ஆங்கில முதலாம் தராதரப் பத்திரமுடையவர்.
(சரித்திர ஆசிரியர், காரைநகர் இந்துக்கல்லூரி)

அச்சுப்பதிப்பு:
**ஸ்ரீ லங்கா அச்சகம்,**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு — 1955
இரண்டாம் பதிப்பு — 1957
மூன்றும் பதிப்பு — 1961
நான்காம் பதிப்பு — 1967
ஐந்தாம் பதிப்பு — 1968

பதிப்புரிமை: மு. பொன்னையா அவர்களுக்குரியது.

விலை ரூபா 2-25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சகோதரன்

அருளம்பல வைத்தியர் அவர்களுக்கு

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பாடசாலைகளில் மத்திய வகுப்புகளிற் தமிழ்மொழி மூலம் சரித்திரம் கற்பிப்பதற்குத் தகுந்த புத்தகங்களில்லாமையால் அக்குறையை நிவிர்த்தி செய்யலாமெனக் கருதிச் சிறிது காலத்துக்கு முன்பு இரண்டாம் பாகத்தை (1505--1796) வெளிப்படுத்தியுள்ளேன். இப்பொழுது முதலாம் பாகமாகிய இந்நூல் (கி. பி. 1505 வரை) அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தில் கி. பி. 1505 வரையுள்ள இலங்கைச் சரித்திரத்தையும் உலக சரித்திரத்தையும் தெளிவாகவும் சுருக்கமாகவும் இலகுவான வசன நடையில் எழுதியுள்ளேன். அநேக படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு பாடத்தின் கீழ் அப்பியாசங்களும் வினுக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படுமென்று கருதுகிறேன். இப்புத்தகத்தில் எவ்விதமான பிழைகள் காணப்படினும் அவைகளைக் குறித்து அனுப்பினுல் அடுத்த பதிப்பைத் திருத்தங்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்த உதவியாயிருக்கும்.

இப்புத்தகத்தை எழுதுவதற்கு உதவியாயிருந்த நூல்கள் (1) C. C. மென்டிஸ் எழுதிய **"நம்முன்னேரளித்த அருஞ்செல்வம்"** (2) ஞானப்பிரகாச சுவாமி எழுதிய **"யாழ்ப்பாண வைபவ விமர்சனம்"** (3) வேலுப்பிள்ளை எழுதிய **"யாழ்ப்பாண வைபவ கௌமுதி"** (4) யோன் எழுதிய **"யாழ்ப்பாணச் சரித்திரம்"** (5) **F. C.** கப்போல்ட் எழுதிய **"The Adventure of man"** என்பனவாம். இந்நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றேன். மேலும் இந்நூலுக்கு மதிப்புரை எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சீ. ஸ்ரீநிவாசன் (அதிபர், உரும்பராய் இந்துக்கல்லூரி) அவர்களுக்கும், இப்புத்தகத்தை அச்சிடுவித்து வெளிப்படுத்திய யாழ்ப்பாணம் ஸ்ரீ லங்கா புத்தகசாலை அதிபர் அவர்களுக்கும், இந்நூலைச் செவ்வனே அச்சிட்டுதவிய ஸ்ரீ லங்கா அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

கொட்டடி,
யாழ்ப்பாணம்.
25-11-55.

மு. இளையதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம தி ப் பு ரை

## உரும்பராய் இந்துக்கல்லூரி அதிபர்
## திரு. சீ. ஸ்ரீநிவாசன் M. A. அவர்கள்
## உதவியது.

**திரு. மு. இளையதம்பி** அவர்கள் எழுதிய "இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்" இரண்டாம் பாகத்தின் முன்னுரையில் நான் கூறியபடி இப்பாகத்திலும் அவர் சரித்திரபாடத்தைத் தெளிவாகவும், உற்சாகத்தோடு படிக்கத் தூண்டும்படியாகவும் எழுதியிருக்கிறார். சுயபாஷையில் புத்தகங்கள் இல்லையே என்ற குறை இவரின் முயற்சியால் நிவிர்த்தியாகும் என்ற நம்பிக்கை இப்பொழுது பலமடைந்திருக்கிறது. இன்னும் இவரை ஊக்கப்படுத்தி வேறு நூல்கள் எழுதச் செய்வது கடமையாகும்.

உரும்பராய் இந்துக்கல்லூரி, **சீ. ஸ்ரீநிவாசன்**
**25-11-55**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## இலங்கைச் சரித்திரம்


| பாடம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பூர்வீக இலங்கை ... | 1 |
| 2. | சிங்களரின் வருகை ... | 4 |
| 3. | பௌத்த சமயமும் அது இலங்கைக்கு வந்த வரலாறும் | 9 |
| 4. | தமிழரின் வருகை ... | 14 |
| 5. | எல்லாளனும் துட்டகெமுனுவும் ... | 18 |
| 6. | கீர்த்திபெற்ற சிங்கள மன்னர்கள் ... | 25 |
| 7. | குப்தர் ஆளுகையும் இலங்கையிலேற்பட்ட கலை வளர்ச்சியும் | 30 |
| 8. | நிர்வாக அமைப்பும் வாழ்க்கை முறையும் ... | 35 |
| 9. | சிங்கள அரசர்கள் (கி. பி. 460 — 496) ... | 40 |
| 10. | யாழ்ப்பாணம் ... | 44 |
| 11. | தென்னிந்தியாவில் பல்லவரின் ஆட்சி ... | 49 |
| 12. | இலங்கையில் சோழ அரசர்களின் ஆதிக்கம் | 52 |
| 13. | சோழ அரசர்களுக்குப் பின் ஆண்ட சிங்கள அரசர்கள் | 56 |
| 14. | நிர்வாக முறையும் மக்களின் வாழ்க்கையும் | 61 |
| 15. | பிற்காலச் சிங்கள அரசர்களும் சிங்கள அரசின் வீழ்ச்சியும் | 64 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சரித்திரம்


| பாடம் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கல்வியின் மறுமலர்ச்சி | ... | 65 |
| 2. | நதிதீரங்களின் நாகரிகம் | ... | 73 |
| 3. | ,, ,, (தொடர்ச்சி) | ... | 79 |
| 4. | ஹீப்ருக்கள் | ... | 81 |
| 5. | கிரேக்கர் | ... | 84 |
| 6. | உரோமர் | ... | 91 |
| 7. | பாரசீகர் | ... | 97 |
| 8. | கிறிஸ்து சமயம் | ... | 100 |
| 9. | இஸ்லாம் | ... | 105 |
| 10. | சிலுவை யுத்தங்கள் | ... | 111 |
| 11. | உலக யாத்திரிகர்களும் பிரபல இரு அரசர்களும் | | 115 |
| 12. | இங்கிலாந்து தேசம் | ... | 128 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

## கி. பி. 1500 வரை

### முதலாம் பாடம்

### பூர்வீக இலங்கை

இந்தியாவும் இலங்கையும் ஒரே நிலப்பரப்பாய் இருந்தனவென்றே சரித்திர ஆராய்ச்சியாளர் கூறு கின்றனர். தற்போதுள்ள இந்துசமுத்திரம் பரந்த நிலப்பரப்பா யிருந்ததென்றும், அது குமரிகண்டம், லெமூரியாக் கண்டம், தமிழகம் என்ற பெயர்களை யுடையதென்றும் அறிகின்றேம். அது காலகதியில் கடலான தென்பர். தென் இந்தியா, இலங்கை, மாலைதீவு, சுமத்திரா, யாவா என்பன அக்கண் டத்தின் சில பகுதிகளாம். இப்பொழுது, இலங்கை, தென்னிந்தியாவிலிருந்து பாக்குநீரிணையாற் பிரிக் கப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள சில சாதியினரே இலங்கையி லிருந்தனர். இவர்களுள் இயக்கர், நாகர், வேடர் என்பவர்கள் பூர்வ காலத் தில் இலங்கையில் வசித்தனர் என்பது பலருடைய கொள்கை. இயக்கர் இலங்கையின் மத்திய பகுதி யிலும், தென்பகுதியிலும், நாகர், வடபகுதியிலும், வடமேற்குப் பகுதியிலும் வாழ்ந்தனர். இயக்கரிலும் பார்க்க நாகர் சீர்திருத்த முடையவர்களா யிருந்த னர். இயக்கர்களுடைய அரசனே இராவணனுவான். பழைய காலத்திலே வசித்த சாதியினர் யாதேனும்

மு — 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிவைத்திராதபடியால், அவர்கள் எங்கிருந்து வந்தனரென்றும், எப்பொழுது இலங்கைக்கு வந்தனரென்றும் சொல்ல முடியாமலிருக்கிறது. ஆனால், அவர்கள் பாவித்த சில ஆயுதங்களையும் வேடரிருக்கின்ற மலைக் குகைகளினருகே வரைந்திருக்கின்ற சிலவற்றையுங்கொண்டே வேடர்களே அவ்விடங்களில் வசித்தனரென யூகிக்க இடமுண்டு.

வேடர் குறுகிய தோற்றமும் நீண்ட தலையும், முகமும், சுருள்மயிரும் உடையவராவர். வேட்டையாடுதலே இவர்களுடைய முக்கிய தொழிலாகும். வில்லையும் அம்பையுங் கொண்டு காட்டு மிருகங்களைக் கொன்று அவைகளின் இறைச்சியை உண்டு வந்தனர். மழைக் காலங்களில், குகைகளிலும், கோடை காலங்களில், தண்ணீர் குடிக்க வரும் மிருகங்களைக் கொல்வதற்காக ஆற்றங்கரைகளிலும் வசித்து வந்தனர். இவர்கள் மரப்பட்டையையும், இலைகளையும் உடையாகப் பாவித்தனர். கரடு முரடான கற்களை ஆயுதமாக உபயோகித்தனர். இவர்கள் மரணத்தின்பின் ஏற்படக்கூடிய வாழ்க்கையில் நம்பிக்கையுடையர். நோய், கஷ்டம் நேரிட்டகாலத்தில் இறந்தவர்களின் ஆவிகளிடமிருந்து உதவியைத் தேடினர். மலைநாட்டுச் சிங்களவரிற் சிலர் வேடரை விவாகஞ் செய்தபடியால், வேடரிலநேகர் சிங்களப் பாஷையைப் பேசுவதோடு பயிரிடுந் தொழிலையும் கையாளத் தொடங்கினர். இப்பொழுதும் வேடரென்ற ஒருவகைச் சாதியினர், வடமத்திய, கீழ், ஊவா மாகாணங்களிலுள்ள காடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீவுக்குப் பலர் பல்வேறு பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். தமிழர் ஈழமண்டலமென்றும், சிங்களர் சிங்கள துவீபமென்றும், அராபியர் செரென் துவீபமென்றும், கிரேக்கர் தாமிரபருணியென்றும் பெயரிட்டனர். செரென்டிப்சீலியோ என்பனவும் பிற பெயர்களாம். விவிலிய நூலிலே கூறப்படும் ஓபீர் என்பதும் இலங்கையையே குறிக்கிறது.

## வினாக்கள்

1. லெமூரியாக் கண்டம் என்பது யாது? அக்கண்டத்தின் பகுதிகளாகத் தற்போது காணப்படும் நாடுகள் யாவை?

2. கீழே காணப்படும் வாக்கியங்களிற் சரியான பதங்களின் கீழ் ஓர் அடையாளமிடுக.

   (i) இந்துசமுத்திரம் பரந்த நிலப்பரப்பா யிருந்த காலத்தில் அது குமரிகண்டம், ஆசியா, ஆபிரிக்கா, லெமூரியாக்கண்டம்; தமிழகமென் றழைக்கப்பட்டது.

   (ii) பூர்வ காலத்தில் இயக்கர், ஆங்கிலேயர், நாகர், சீனர், வேடர் இலங்கையில் வசித்தனர்.

   (iii) இத்தீவுக்கு ஈழமண்டலம், இந்தியா, செரென்துவீபம், சிங்களதுவீபம், செரென்டிப், அரேபியா, ஓபீர் என்ற பல பெயர்களுமுண்டு.

3. வேடரைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக.

4. இலங்கையின் எப்பகுதிகளில் இயக்கர், நாகர், வேடர் வசித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பாடம்


# சிங்களரின் வருகை

இலங்கையில் முதற்குடியேறியவர்கள் வேடரா யிருந்தும் அவர்கள் இலங்கையின் நாகரிகத்துக்கு ஒரு துணையும் புரியவில்லை. அவர்கள் சிங்களருடன் கலந்து விவாகஞ் செய்ததல்லாது மார்க்கம், பழக்க வழக்கங்கள் முதலிய விஷயங்களிற் சிங்களர் அவர்க ளிடமிருந்து ஒன்றும் கற்றுக்கொள்ளவில்லை.

சிங்களரைப்பற்றியும் அவர்களுடைய வருகை யைப்பற்றியும் கர்ணபரம்பரையான கதையொன் றுண்டு. பழைய காலத்தில் வங்கநாட்டு இளவரசி ஒருத்தி தன் அரண்மனையை விட்டு வெளியேறிக் காட்டு மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்த ஒரு வியாபாரக் கூட்டத்தோடு சென்றாள். வழியில் ஆண் சிங்கமொன்று அவளைக் கண்டதும், தனது குகைக்கு அவளை எடுத்துச் சென்றது. அங்கே அவளை அது மணந்துகொண்டது. பின்பு அவளுக் குச் சிங்கபாகு என்னும் ஆண் குழந்தையும் சிங்க சீவலி என்ற பெண் குழந்தையும் பிறந்தார்கள். சிங்கபாகு வளர்ந்தவுடன் தனது தாயையும் தங் கையையும் கூட்டிக்கொண்டு தாயினுடைய நாட் டுக்கு ஓடிவிட்டான். அவர்களைப் பின்தொடர்ந்து வந்த சிங்கத்தை அவன் கொன்று லாலா என்ற நாட்டுக்கு அரசனானான்.

சிங்கபாகுவின் மூத்தபுத்திரன் பெயர் விசயன். அவன் துட்டர்களோடு கூடிச் சனங்களைத் துன் புறுத்தினபடியால் சிங்கபாகு அவனையும் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய தோழர்களேயும் கப்பலேற்றித் திரும்பி வராவண்ணம் எங்கேயாகுதல் போய்ச் சேரும்படி விட்டான். முதல், இந்தியாவின் கரையொன்றில் வந்து இறங்கி அவ்விடமிருந்து இலங்கையை வந்து சேர்ந்தனர். இலங்கையில் விசயன், குவேனியென்ற இயக்கியை மனைவியாக்கினுன். சிறிது காலத்திற்குப் பின் அவன் அவளை விலக்கிவிட்டுப் பாண்டிநாட்டு இளவரசி ஒருத்தியை விவாகஞ் செய்தான். சிங்க பாகுவின் வமிசத்தவர்களாகையால் விசயனும் அவனது பரம்பரையாரும் சிங்களரென அழைக்கப்பட்டனர். இலங்கைக்கும் சிங்களதுவீப மென்ற பெயர் வழங்கலாயிற்று. சிங்களர் என்றபெயரை விளக்கிக் காட்டுவதற்காக, சிங்கபாகுவைப் பற்றிய நூதனக் கதை கற்பனை செய்யப்பட்டதென்று எண்ணுவதற்கு இடமுண்டு. ஆனுல், அக்கால வழக்கப்படி சிங்களர் ஒரு சிங்கத்தின் உருவத்தைக் கம்பத்திற் செதுக்கி வழிபட்டு வந்திருக்கலாம். ஆரியமொழிக் கலப்புச் சிங்களத்திற் காணப்படுகின்றபடியால் அது ஆரியபாஷை யெனக் கூறப்படுகின்றது.

இந்தியாவின் கிழக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலுமிருந்து வெளிப்போந்த சிங்களர், மன்னுருக்கு அணித்தாயுள்ள மாதோட்டமென்னுமிடத்திலிறங்கி மல்வத்துஓயா வழியாக உட்புகுந்து தற்போதுள்ள வடமாகாணம், வடமேல்மாகாணம், வடமத்திய மாகாணம் என்ற பகுதிகளிற் குடியேறினர். இலங்கையின் தென்கிழக்குப் பகுதிகளிலும் குடியேறினர். அவை வளவகங்கை, கிரிண்டிஓயா, குமுக்கன்ஓயா, மாணிக்ககங்கை ஆறுகளின் வெளிகளாகும். களனி கங்கைப் பகுதியிற் குடியேறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர்கள் காலஞ்செல்ல உள்நாட்டுப் பக்கமாயுஞ் சென்றனர். கி. மு. 500 வருஷங்களுக்கு முன்னரே சிங்களர் இலங்கைக்கு வந்தனர்.

சிங்களருடைய வருகையினால் இலங்கை அதிக பயனைப் பெற்றது. முதன் முதல் இலங்கையிற் பயிரிடுந்தொழிலைப் புகுத்தியவர்கள் சிங்களராவர். நெல்லைப் பயிரிட்டவர்களும் அவர்களே. சனங்களுக்கிடையில் ஏற்படும் விவாதங்களைத் தீர்ப்பதற்கும், குளங்களுக்கு அணைகட்டுவதற்காகவும் கிராம சபைகளை ஏற்படுத்தினர். **கன்சபா** என்ற கிராம சபை பழைய சபைகளிலிருந்து தோன்றிய ஒன்றாகும். இவைகளைவிட இரும்பின் உபயோகத்தையும் அவர்களே இலங்கைக்குக் கொண்டுவந்தனர்.

## வினாக்கள்

1. சிங்களரைப்பற்றிக் கர்ணபரம்பரையாய் வழங்கிக்கொண்டு வருகின்ற கதை யாது?

2. விசயன் இலங்கைக்கு வரநேர்ந்த வரலாற்றை விபரிக்குக.

3. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

   (i) விசயன், குவேனி என்ற ..........(நாகர் சாதிப் பெண்ணை, இயக்கர் சாதிப்பெண்ணை) மனைவியாக்கினான்.

   (ii) ..........(சிங்கபாகுவின், இயக்கரின்) வமிசத்தவர்களாகையால் விசயனது பரம்பரையார் சிங்களரென அழைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) இந்தியாவிலிருந்து வெளிப்போந்த சிங்களர்.........(மாதோட்டத்தில், திருகோணமலையில்) வந்திறங்கினர்.

(iv) .........(கி. மு. 500, 2000 வருடங்களுக்கு முன் சிங்களர் இலங்கைக்கு வந்தனர்.


4. சிங்களர் வருகையால் இலங்கை யடைந்த பயன்கள் யாவை?

5. இலங்கைப் படமொன்று வரைந்து அதிற் சிங்களர் வந்திறங்கிய இடத்தையும், குடியேறிய பகுதிகளையும் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்ரும் பாடம்

# பௌத்த சமயமும் அது இலங்கைக்கு வந்த வரலாறும்



சிங்களரிற் பெரும்பான்மையோர் புத்த சமயத்தவர்களா யிருக்கிருர்கள். இவர்கள் இலங்கையிற் குடியேறி ஏறக்குறைய 250 வருடங்களுக்குப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தசமயம் இலங்கையிற் பரவத்தொடங்கியது. கௌதமபுத்தரே புத்த சமயத்தை உண்டாக்கியவராவர். ஆகையால் அவரைப்பற்றி அறிதல்வேண்டும்.

கி. மு. 563 வரையில் கௌதமபுத்தர் நேபாளத்திற்குத் தெற்கேயுள்ள கபிலவஸ்து என்ற இடத்தில் சாக்கியகுலத்தில் வைகாசி மாதப் பௌர்ணமியிலன்று பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சித்தார்த்தர் என்றபெயரைக் கொடுத்தனர். கௌதமர் என்பது அவருடைய கோத்திரப் பெயராம். "புத்தர்" என்ற சொல்லுக்கு ஞானோதயம் பெற்றவர் என்ற பொருள்படும். அவருடைய தந்தையார் பெயர் சுத்தோதனன், தாயார்பெயர் மாயாதேவி. பெற்றார் ஐசுவரியமுடையவர்களா யிருந்தபடியால் ஒருவிதமான குறைவுமின்றி வளர்ந்து சகல கலைகளையும் செவ்வனே கற்றுணர்ந்தார். இருபதாவது வயதில் யசோதரை என்ற அரசிளங் கன்னிகையை விவாகஞ் செய்தார். அவர்களுக்கு இராகுலன் என்ற மைந்தன் பிறந்தான். அவர் ஒருநாள் வயோதிபனொருவனையும், இன்னொருநாள் நோயாளி ஒருவனையும், இன்னொருநாள் பிணத்தையுங் கண்டு, மனிதன் மூப்புப் பிணி சாக்காடு என்னும் துன்பத் துக்காளாயிருக்கிறான் என்றெண்ணினார். துன்பத்தினின்று எப்படி நீங்கலாமென்ற யோசனையுண்டாகி இல்லறவாழ்வைத் துறந்து தனது அரண்மனையை விட்டு ஒரு நள்ளிரவில் ஓடினார். பின்பு இரண்டு துறவிகளிடம் உபதேசம் பெற்றும் அவர் திருப்தியடையவில்லை. அதன்பின் ஆறுவருஷ காலம் கடுந்தவம்புரிந்தும் அது அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. கடைசியாக அவர் காயா சேத்திரத்தில் ஓர் அரசமரத்தின்கீழ் நிட்டைகூடி இருக்கும்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திற் துன்பமுண்டாவதற்குக் காரணமும் அதனினின்று நீங்கும் வழியும் அவர் மனதிற் புலப்பட்டது. ஆசையே துன்பத்திற்குக் காரணமென்றும், அதை நீக்கினல் துன்பமும் நீங்கி விடுமென்றும் அறிந்தார். அவர் இந்த உண்மையை அறிந்த நாள் வைகாசி விசாகத்தினமாகும். கி. மு. 483-ல் வைகாசி மாத பௌர்ணமியில் புத்தர் பரிநிர்வாணம் அடைந்ததும், அவருடைய சீடர்கள் அவருடைய போதனைகளை உலகெங்கும் பரப்பினர்.

இலங்கையிற் புத்த சமயம் நன்கு பரவுமென அறிந்த புத்தபெருமான் இலங்கைக்கு மூன்றுமுறை வந்தாரென்று பழைய சரித்திரங்கள் கூறுகின்றன. இலங்கையிற் புத்தசமயம் பரவுவதற்குப் பல ஏதுக்களுமிருந்தன. வடஇந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட சமுத்திரகுப்த மௌரியனின் (கி. மு. 321) பேரனுன அசோகன் (கி. மு. 274—237) அதிக ஆர்வத்தோடு புத்தசமயத்தை எங்கும் பரப்பினுன். அசோகச் சக்கரவர்த்தி புத்த சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் தனது மகன் மகிந்தனையும் மகள் சங்கமித்தாவையும் இலங்கைக்கு அனுப்பினுன். மகிந்தன் மிகுந்தலையில் வந்திறங்கினுனென்றும், சிறிது காலத்துக்குப்பின் சங்கமித்தா, புத்த பெருமான் ஞான ஒளி பெற்றபொழுது நிட்டை கூடியிருந்த அரச மரத்தின் கிளை யொன்றையுங் கொண்டு சம்புத்துறையில் வந்திறங்கினுளென்றும் சொல்வர். தற்போது அனுரதபுரத்திலுள்ள லோக மகாபாயா என்ற கட்டிடத்திற் கருகாமையிலுள்ள அரசமரம் அக்கிளையிலிருந்து முளைத்ததென்று கூறப்படுகின்றது. இவர்கள் இருவரும் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் பிக்கு சங்கத்தையும் பிக்குனி சங்கத்தையும் தாபித்தனர். அக்காலத்தில் அனுரதபுரியைத் தலைநகராக அமைத்துத் தேவநம்பியதீசன் (247—207 கி. மு.) அரசு செலுத்தினான். இரண்டு நூற்றாண்டுகளுக்குள் புத்தசமயம் இலங்கையின் பல பாகங்களிலும் பரவியது. அவ்வண்ணம் பரவியதற்குக் காரணங்கள் பலவுள. தேவநம்பியதீசன் சமயப் பிரசாரர்களை வரவேற்றான். சிங்களருடைய பாஷையும், மகிந்தனுடைய தாய்மொழியும், ஒற்றுமையுடையனவா யிருந்தபடியாற் சனங்களுக்கு மதப்பிரசாரஞ் செய்யச் சுலபமாயிருந்தது. இனி, அக்காலத்தில் இலங்கையில் நிலையுள்ள சமயம் ஒன்று மில்லை. சிங்களர் விவசாயிகளா யிருந்தபடியால் அவர்களுக்கு மத போதனைகளைக் கேட்பதற்குப் போதிய நேரமிருந்தது. விகாரைகள் எல்லாம் சமயக்கல்வி கற்கும் தானங்களாக விளங்கின.

பௌத்தசமயம் பரவியதால் இலங்கையிற் பல நன்மைகள் ஏற்பட்டன. நூல்களை வரிசையாக எழுதும் வித்தையைச் சிங்களருக்குப் பிக்குகள் தான் கற்பித்தார்கள். பௌத்த சமய நூல்களும் கொண்டு வரப்பட்டன. அக்காலத்தில் இச்சமய நூல்களைவிட வேறு கிடையா. பாளி என்ற புதுப் பாஷையும் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. சமய நூல்கள் இப்பாஷையிற்றான் எழுதப்பட்டிருந்தன. இலங்கையிற் பௌத்த சமயம் பரவியபடியாற் சிற்பக்கலையும் மேலோங்கியது. கற்களில் உருவங்கள் செதுக்கவும், நல்ல ஓவியங்களைத் தீட்டவும் பழகிக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாக்கள்

1. கௌதம புத்தரைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக?

2. புத்தர் உலகத்துக்குக் காட்டிய பிரதான உண்மையாது?

3. இலங்கையிற் புத்தசமயம் பரவிய வரலாற்றைப் பற்றி விபரிக்குக.

4. இந்தியாவில் அரசுபுரிந்த எவ்வரசன் புத்த சமயத்தை இலங்கையிற் பரப்புவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்தான்?

5. தேவநம்பியதீசன் செய்த விசேஷ தொண்டுகள் யாவை?

6. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

   (i) நூல்களை வரிசையாக எழுதும் வித்தையைச் சிங்களருக்குப் ———— கற்பித்தனர்.

   (ii) இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட புதுப்பாஷை ——— எனப்படும்.

   (iii) பௌத்த சமயம் பரவியபடியால் ———— கலை மேலோங்கியது.

   (iv) ——— உருவங்களைச் செதுக்கவும் பழகிக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் பாடம்

## தமிழரின் வருகை


தமிழரிற் பெரும்பான்மையோர் யாழ்ப்பாணத்திலும், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களிலும் வசிக்கிறார்கள். பூர்வகாலத்தில் இலங்கையின் வடபாகத்தில் நாகர் சாதியினர் வாழ்ந்து வந்தமையால் யாழ்ப்பாணம் நாகதீபம் என்ற பெயரைப் பெற்றது.

இலங்கைக்கு அரசனான விசயன் புத்திரரில்லாது இறக்க அவனுடைய மந்திரி, விசயராசன் சகோதரனுடைய மகன் பாண்டுவசுவனைக் கொண்டு வந்து அரசனாக்கினான் (கி. மு. 500 வரையில்)*. பின்பு இவனுடைய வமிசத்திலுள்ளவர்கள் பரம்பரையாக அநேககாலம் ஆண்டு வந்தனர். மனுநீதி கண்ட சோழ அரசனுடைய மகன் குழக்கோட்டு மன்னன் யாத்திரை செய்துகொண்டு திருகோணமலைக்கு வந்தான். அங்கே கோணேசர் கோயிலைத் தரிசித்துக்கொண்டு, தம்பலகாமத்தில் பழுதடைந்திருந்த கோணேசர் கோயிலைத் திருத்திவைத்தான். அக்காலத்தில் இலங்கை முழுவதையும் அரசாட்சி செய்த பாண்டுமகாராசன் மணற்றிடர் என்றழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்திற்கு வந்தான். அரசன் யாழ்ப்பாணம்வர அவனது மனைவி குழக்கோட்டனை இலங்கையினின்று துரத்தும்படி சேனைத் தலைவர்கள் சிலரை அனுப்ப அவர்கள் அவ்விடம் போனார்கள்.

---

* சில சரித்திர ஆராய்ச்சியாளர் இவ்வரசனுடைய காலம் கி. பி. 435 என அபிப்பிராயப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுடைய சேனையைக் கண்டு திகிலடைந்து தாங்கள் இராணி அனுப்பிய தூதர்களென அறிவித்தனர். திருப்பணிக்கு வேண்டிய பொருட்களேதும் தேவையோ வென அவர்கள் விசாரித்தபொழுது அரசன் சகல வஸ்துக்களும் தன்னிடமிருக்கின்றன வென்று இராணியிடம் அறிவிக்கும்படி சொன்னான். அவர்கள் இராணியிடம் தாங்கள் கண்டவற்றை யெல்லாம் சொன்னார்கள். குழக்கோட்டு மகாராசன் திருப்பணியை முடித்து, ஏழுநாட்டு வயல் நிலங்களைக் கோயிலுக்கு ஈந்து அவைகளைப் பயிரிடும்படி வன்னியர்களையும் அழைப்பித்து இருத்தித் தன் நாட்டிற்குத் திரும்பினான். பின்னர் ஆலயப் பணிவிடைகள் செவ்வனே நடந்தன. சிறிது காலஞ் செல்ல 59 வன்னியர்கள்வந்து குடியேறினர். குடிகள் வரவரப் பெருகிக்கொண்டு போயின. வன்னியர்கள் ஒற்றுமைக்குறைவினால் கலகஞ் செய்தனர். ஈற்றில் அவர்கள் ஒருமித்துத் தங்களில் ஏழுபேரைத் தெரிந்து அவர்களை ஏழுவன்னி நாடுகளுக்கும் தலைவராக்கினர். அவர்கள் சந்ததியிலுள்ளவர்கள் பின்பு ஆண்டனர். வன்னியர்கள் ஆண்டபடியால் அதற்கு வன்னிநாடென்ற பெயர் உண்டானது. காலஞ்செல்லச் செல்ல வன்னியர்கள் அதிகார முடையவர்களாயிருந்தனர். அக்போதி இலங்கைக்கு அரசனாயிருந்த காலத்தில், வன்னியர்களின் அதிகாரத்தைக் குறைத்துவிட, அவ்வன்னியர்கள் நாட்டதிகாரிகளாய் ஆண்டு வந்தனர்.

## வினாக்கள்

1. தமிழர் இலங்கையில் எவ்விடங்களில் வசிக்கிறார்கள்?
2. நாகதீப மென்பது யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விசயராசனின் பின் யார் இலங்கையை ஆண்டார்?
4. குழக்கோட்டன் செய்த திருப்பணி யாது?
5. வன்னியர்கள் இலங்கையிற் குடியேறிய வரலாற்றை எழுதுக?
6. குழக்கோட்டனை இலங்கையிலிருந்து துரத்த முடியாமலிருந்ததற்குக் காரணமென்ன?
7. வன்னியர்களின் அதிகாரம் குறைந்ததற்குக் காரணம் யாது?
8. இலங்கைப் படமொன்று கீறி, அதிற் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

தமிழர் வசிக்கின்ற இடங்கள், வன்னியர்கள் குடியேறிய இடங்கள், திருகோணமலை.

9. கீறிட்ட இடங்களுக்கு ஏற்றசொற்கள் வைத்து நிரப்புக.

(i) ———மன்னன் கோணேசர் கோயிலைத் திருத்தி அமைத்தான்.

(ii) பாண்டுவசுவன் மனைவி குழக்கோட்டனை——————துரத்தும்படி ———அனுப்பினள். அவர்கள் அவனுடைய சேனையைக் கண்டு———.

(iii) ———ஏழுநாட்டு———கோயிலுக்கு ஈந்தான்.


(iv) வன்னியர்கள் ——— குறைவினுல் ——— செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் பாடம்


# எல்லாளனும் துட்டகெமுனுவும்



தேவநம்பியதீசனுடைய காலத்திற்குப் பின் ஆறு அரசர்கள் முறையே ஆண்டனர். இவர்களுடைய காலத்தில் இருமுறை தமிழர்கள் படையெடுத்து வந்தனர். இரண்டாம்முறை எல்லாளன் என்ற தென்னிந்தியமன்னன் படையெடுத்து வந்து, அக்காலத்தில் இலங்கையை அரசாண்ட அசேலன் என்பவனைத் தோற்கடித்து, அனுரதபுரியை இராசதானியாக்கி வடபகுதியிலுள்ள இராச்சியத்துக்கு கி. மு. 145 - ல் அரசனானன்.

அக்காலத்தில் கவந்தீசன் என்ற சிங்கள மன்னன் தென்கிழக்குப் பகுதியிலுள்ள உறுகுணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியத்துக்கு அரசனுயிருந்தான். அவனுக்குத் துட்டகெமுனு, சத்ததீசன் என்னும் இரு புத்திரர்களிருந்தார்கள். இவர்களுள் துட்டகெமுனு என்பவன் சிறுபராயந்தொட்டு தமிழரை இலங்கையினின்று துரத்தவேண்டுமென்ற எண்ணமுடையவனுயிருந்தான். அவனுக்குப் பன்னிரண்டு வயதாய் இருந்தபொழுது அவனுடைய தந்தையாகிய கவந்தீசன் தமிழருக் கெதிரே சண்டைசெய்யக்கூடாதென்று வாக்குறுதிபண்ணும்படி கேட்க அவன் அதற்கு மறுத்துவிட்டான். பின்பு அவன் தனது படுக்கையில், கால்களை முடக்கிக்கொண்டு படுத்திருப்பதைக் கண்ட தாயார் ஏன் அப்படிப் படுத்திருக்கிருய் என்று அவனை வினவ, மகாவலிகங்கைக்கு அப்புறத்தில் தமிழரும், இந்தப் பக்கத்தில் சமுத்திரமு மிருக்கும்பொழுது தான் சுகமாகப் படுத்திருக்க இடமில்லையே யென்று சொன்னுன்.

பதினறு வயதானவுடன் துட்டகெமுனு போர் வீரர்களையும் திரட்டிக்கொண்டு தமிழருக்கெதிரே சண்டை செய்யப் புறப்பட்டான், அவனுடைய தந்தை அவனைத் தடுத்தவுடன் கோபங்கொண்டு உறுகுணையைவிட்டு விலகி மலைநாடாகிய மலையரட்டைக்குப் போயிருந்தான். அவன் அங்கேயிருக்குங் காலத்தில் கவந்தீசன் இறந்தான். அவன் வருவதற்கு முன்னே அவனுடைய தம்பியாகிய சத்ததீசன் தலைநகராகிய மாகமத்துக்குப் போய் தந்தையினுடைய அந்தியக் கிரிகைகளை முடித்துவிட்டு, தான் அரசனுனன். இருவருக்குமிடையில் நடந்த சண்டையில் துட்டகெமுனு வெற்றி எய்தி உறுகுணை இராச்சியத்திற்கு அரசனுயமர்ந்தான் (இ. மு. 101).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீக்கிரத்தில் தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும்பொருட்டு ஒரு பெரிய சேனையுடன் தலைநகராகிய மாகமத்திலிருந்து அனுரதபுரியை நோக்கிப் புறப்பட்டான். வழியில் புத்தலை என்னுமிடத்திற் தங்கி அப்பாற் செல்லுகையில் மகியன்கானு என்ற இடத்திற் தமிழருக்கும் சிங்களருக்குமிடையில் முதற்சண்டை நடைபெற்றது. அதில் வெற்றி பெற்றுக்கொண்டு செல்லும்போது வழியிலிருந்த தமிழரின் கிராமங்களைக் கைப்பற்றினுன். வழியில் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. தமிழரின் சேனையும் தாக்கியது. நான்கு மாதங்களாக டிம்புலாகலையிற் தங்கிப் பின்பு ஆற்றைக் கடந்தான். விஜித நகரத்தைக் கைப்பற்றியபின் ககாலை என்ற இடத்தில் எதிர்த்து தமிழரோடு சண்டைசெய்து அனுரதபுரியை அடைந்தான். அவ்விடத்திற்சண்டை நடைபெற்றது. ஈற்றில் துட்டகெமுனுவும் எல்லாளனும் நேரிற் சண்டைசெய்தனர். எல்லாளன் அந்தச் சண்டையிலிறக்க, அவனிறந்த இடத்தில் அவனுக்கு ஒருசமாதி கட்டுவித்து அவன்மரியாதை காட்டினுன். அவ்வழியே செல்வோர் பிற்காலத்திலிருந்த சிங்கள அரசர்கள்கூட வாத்தியங்களை நிறுத்திச் செல்வாராயினர். சிங்களர் தமிழரைத் தோற்கடித்த வீரனுகத் துட்டகெமுனுவைப் பாராட்டினர். 44 வருடகாலமாக நடைபெற்ற தமிழரசு துட்டகெமுனுவாற் கைப்பற்றப்பட்டது (கி. பி. 101).

துட்டகெமுனு புத்த சமயத்துக்குப் பெரிய சேவை புரிந்தான். ருவான்வெலிசாயா, லோகமகாபாயா என்ற புத்த கோயில்கள் இவனுற் கட்டப்

பட்ட தலங்களிற் சிறந்தனவாம். ரூவான்வெலி சாயா கட்டிமுடிவதன் முன் துட்டகெமுனு இறந்து விட்டான். அவனது தம்பி சத்ததீசன் அதைக் கட்டி முடித்தான்.

துட்டகெமுனுவுக்குப் பின் அவனது தம்பி யாகிய சத்ததீசன் (கி. பி. 77-59) ஆண்டு வந்தான். அவனுடைய மகன் வலகம்பா (கி. பி. 43-39) அரசு நடாத்திய காலத்தில் பாண்டிய இராச வமிசத் தினர் இலங்கையைக் கைப்பற்றி வலகம்பா என்ப வனைத் துரத்திவிட்டு, இராச்சியத்தைப் பிடித்து ஐந்துபேர்கள் முறையே ஆண்டனர். பதினன்கு வருஷங்களின் பின்பு மீண்டும் இராச்சியத்தைக் கைப்பற்றி அனுரதபுரியிலிருந்து ஆண்டான். புத்த சமயம் இவ்வரசன் காலத்தில் அதிகம் வளர்ச்சி யுற்றது. அனுரதபுரியில் அபயகிரி விகாரையைக் கட்டுவித்தான். இவ்வளவு காலமும் கேள்வியளவில் மாத்திரமிருந்த பௌத்த சமய நூல்கள் இவன் காலத்தில் எழுதிவைக்கப்பட்டன. பௌத்த பிக்கு கள் இலங்கையின் விசேஷ சம்பவங்களையும் அர சர்களைப்பற்றிய விஷயங்களையும் எழுதத் தொடங்கினர். தென்னிந்தியாவிலுள்ள தமிழர்கள் இலங்கைக்கு வந்த காலங்களில் முருகன் வழிபாட் டையும், பத்தினி வழிபாட்டையும் இந்நாட்டிற் பரப்பிக் கோயில்களையும் கட்டிவிட்டனர். தமிழகம் பண்டைக் காலத்தில் நாகரிகத்திலும் கல்வியிலும் மார்க்க விஷயங்களிலும் முதிர்ச்சி யடைந்திருந் தது. கிரேக்கர் முதலிய ஐரோப்பியர் தமிழகத்தோடு வியாபாரஞ் செய்தனர். இருவர் பாஷைகளிலு முள்ள சொற்கள் கலந்துகொண்டன.

## வினாக்கள்

1. கி. மு. 145-ல் இலங்கையின் ஒரு பகுதியைக் கைப் பற்றி அரசாண்ட தமிழ் அரசன் யாவன்?
2. கவந்தீசன் எப்பகுதியை ஆண்டான்? அவனுடைய மக்கள் யாவர்?
3. துட்டகெமுனு சிறுபராயத்திலே என்ன தீர்மானஞ் செய் தான்? அவனுடைய தந்தையின் விருப்பமென்ன?
4. துட்டகெமுனு உறுகுணையினின்று நீங்கி மாயரட்டைக்குச் சென்றதற்கு நியாயமென்ன?
5. துட்டகெமுனுவுக்கும் அவனுடைய தம்பிக்கும் இடையில் ஏற்பட்ட சண்டைக்குக் காரணமென்ன? யார் யார் வெற்றி பெற்றனர்?
6. எல்லாளனுக்கும் துட்டகெமுனுவுக்கு மிடையில் நடந்த சண்டையைப்பற்றி விபரிக்குக?
7. ஏற்ற பதங்கள் வைத்து ஒவ்வொரு வசனத்தையு மெழுதுக:
   (i) துட்டகெமுனுவுக்கும் எல்லாளனுக்கு மிடையில் நடந்த சண்டையில் ——— (எல்லாளன், துட்ட கெமுனு) வெற்றி பெற்ருன்.
   (ii) தமிழரைத் தோற்கடித்த வீரனுக ——— (துட்ட கெமுனுவை, சத்ததீசனே) சிங்களர் பாராட்டினர்.
   (iii) எல்லாளன் —— (12, 44) வருஷங்களாக அனு ரதபுரியிலிருந்து அரசாண்டான்.
   (iv) ——— (புத்த சமயத்துக்கு, இந்து சமயத்துக்கு) துட்டகெமுனு அதிகசேவை செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) கி. பி. 43 ன் பின் ——— (பாண்டியர், சோழர்) வலகம்பாவைத் துரத்திவிட்டு அரசைக் கைப்பற்றி னர்.

(vi) ——— (தமிழர், சிங்களர்) முருகன் வழிபாட்டை யும், பத்தினி வழிபாட்டையும் இங்நாட்டிற் பரப் பினர்.

8. இலங்கைப் படமொன்று வரைந்து அதில் துட்டகெமுனு அனுரதபுரி மார்க்கமாகச் சென்றபாதையைக் குறிப்பிட்டு அதிலுள்ள பிரதான இடங்களையும் காட்டுக.

9. எல்லாளனைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரும் பாடம்

# கீர்த்திபெற்ற சிங்கள மன்னர்கள்


கி. பி. முதலாம் நூற்ருண்டிற் கூடக்கன்ன தீசன் என்பவன் அனுலா என்ற அரசியைக் கொன்று அரசனுனன். இவன் அனுரதபுரியை இராசதானியாக்கி 22 வருஷகாலம் ஆண்டான். இவன் அனுரதபுரியிற் கட்டுவித்த மதிலை வசபன் (கி. பி. 127-171) என்ற அரசன் உயர்த்திக் கட்டுவித்தான்.

வசபன் நாட்டிற்கு அதிக நன்மைகளைச் செய்தான். அநேக புத்தகோயில்களைக் கட்டுவித்தான். இராசமாளிகை யொன்றையுங் கட்டினன். பயிரிடுந் தொழில் விருத்தி யடையத் தக்கதாகப் பதினெரு குளங்களையும் பன்னிரண்டு கால் வாய்களையும் வெட்டுவித்தான். எருவாவி என்பது இவ்வரசன் வெட்டுவித்த குளங்களி லொன்ருகும். இது அனுரதபுரிக்குத் தென்கிழக்கே யுள்ளது.

அக்காலத்திலும் அரிசியே இலங்கை மக்களுடைய பிரதான உணவுப் பொருளாயிருந்தது. ஆகையால் நெல் ஏராளமாக விளைவிக்கப்பட்டது. இருவகையான நீர்ப்பாய்ச்சும் முறைகளைப் பழகிக் கொண்டனர். மலைகளுக் கிடையிலுள்ள பள்ளத் தாக்குகளிலிருந்து மதகுகளை வைத்துத் தண்ணீர் வெளியே பாயச்செய்து அதை வயல் நிலங் களுக்குச் செல்லக்கூடிய வசதிகளை ஏற்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட ஆறுகளை அணையிட்டு மறித்துக் கால் வாய்கள் வழியாக ஆற்றுநீரை வயல்களிற் பாயத் தக்கதாகச் செய்தனர். இம்முறைகள் விவசாயத் திற்கு அதிக பயன்பட்டபடியாற் சனங்கள் கால் வாய்கள் வெட்டுவதற்கும் அணை கட்டுவதற்கும் வேண்டிய வேலைகளை அதிக ஊக்கத்துடன் செய் தனர். அபயவாவி, நுவரவாவி, திசவாவி, இவ் வாறே கட்டப்பட்டன. வசபன் இன்னும் அநேக குளங்களைக் கட்டுவித்தான்.

வசபனிலும் பார்க்க மகாசேனன் (கி. பி. 334-362) அதிகசேவை செய்தவனென்றே எண்ண வேண்டும். இவ்வரசன் வசபனுக்கு ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்குப் பின் அரசுபுரிந்தான். மின் னேரியாக்குளம் போன்ற 16 பெரிய குளங்களை வெட்டுவித்தான். இக்குளம் ஒரு கால்வாய்மூலம் அம்பன் கங்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மகா சேனன் கட்டுவித்த குளங்கள் விவசாயத் தொழில் விருத்தியடைவதற்கு மிகவும் உதவியாயிருந்தன. குடிகள் சந்தோஷமாக வாழ்ந்தனர். அவன் இறந்தபின் சனங்கள் அவனை ஒரு தெய்வமாக வழிபட்டனர்.

ஆனால் மகாசேனன் மகாவிகாரைப் பிக்குகளை ஆதரியாமல் விட்டபடியால் அவர்கள் அனுரத புரியை விட்டு விலகி மலைநாட்டுக்கும் உறுகுணைக் குஞ் செல்ல லோவமகாபாயக் கட்டிடமும் ஏனைய கட்டிடங்களும் அழிந்துபோயின. பின்பு மகா சேனன் அபயகிரி விகாரைக் கட்டிடங்களைக் கட்டு வித்தான். அக்காலத்தில் இலங்கையிற் பௌத்த சமயத்திற் காணப்பட்ட பல பிரிவுகளே இவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் காரணமாம். மகாவிகாரைப் பிக்குகள் தேரவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இவ்வரசன் ஜேதவனாராம விகாரையையும் கட்டுவித்தவனாவான். பண்டைக் காலத்திருந்த அரசருள் இவன் ஓர் சிறந்தவனாக மதிக்கப்படுகின்றான்.

அக்காலத்தில் பௌத்த சமயத்திற் பல பிரிவுகளிருந்தன. மகாவிகாரைப் பிக்குகள் தேரவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 'திரிபிடகம்' என்ற புத்தர் போதனையைப் பின்பற்றினார்கள். புத்தர்பெருமான் ஒவ்வொருவரும் புத்தருடைய நிலையை எய்துதல் முடியாதென்றும், மனவடக்கம், தியானம் முதலியவற்றால் நிர்வாணநிலையை யடையலா மென்றும் சீஷர்களுக்குப் போதித்தனர். தேரவாதக் கட்சியினர் இவ்வுண்மைகளைப் பின்பற்றினர். கிறீஸ்துவுக்குப்பின் முதலாம் நூற்றாண்டில் புத்தசமயக் கிளர்ச்சி ஒன்று இந்தியாவில் உண்டானது. அது மகாயான பௌத்த சமயமெனப் பெயர்பெற்றது. அக்கொள்கையை யுடையவர்கள் எல்லோரும் புத்தருடைய நிலையைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்பதாம். இலங்கையிலும் இது பரவியது. இது மகாசேனன் காலத்திலேற்பட்டது. சங்கமித்தன் என்ற பிக்கு இலங்கைக்கு வந்து மகாயான பௌத்த சமயத்தைப் பரப்பினான்.

### வினாக்கள்

1. வசபன் நாட்டிற்குச் செய்த நன்மைகளென்ன?
2. பண்டைக் காலத்திலுள்ள நீர்ப்பாய்ச்சும் முறையை விபரிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மகாசேனன் விவசாய விருத்திக்காகச் செய்து முடித்த வேலைகளென்ன?

4. மகாவிகாரையிலுள்ள பிக்குகள் அனுராதபுரியை விட்டு விலகியதற்குக் காரணமென்ன?

5. அக்காலத்தில் பௌத்த சமயத்திற் பிளவுகள் ஏற்பட்டதற்குக் காரணமென்ன?

6. தேரவாதக் கட்சியினருக்கும் மகாயானக் கட்சியினருக்குமிடையிலுள்ள வேறுபாடுகள் யாவை?

7. சுருக்கமான குறிப்புகள் எழுதுக:
திரிபிடகம், சங்கமித்தன், லோவமகாபாயா, நிர்வாணநிலை, அணைகட்டு.

8. இலங்கைப்படமொன்று கீறி அக்காலத்திலுள்ள அரசர்கள் வெட்டுவித்த குளங்களைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் பாடம்

# குப்தர் ஆளுகையும் இலங்கையிலேற்பட்ட கலைவளர்ச்சியும்

மகாசேனன் சிங்காசனமேறிய காலத்தில் வட இந்தியாவின் கிழக்குப் பகுதியில் சமுத்திரகுப்தன் அரசனானன் (கி. பி. 335—385). சந்திர குப்த மௌரியனின் பேரனான அசோகனின் பின்னர் மௌரிய இராச்சியம் குன்றியது. கி. பி. 335 ல் சமுத்திர குப்தன் அரசனாக வந்தவுடன் அயல்நாடுகளைக் கைப்பற்ற முயன்றான். கிருஷ்ணா நதிவரையுள்ள நாடுகளை வென்றான். வெல்லப்பெறாத நாடுகளும் திறை செலுத்தின. சிங்களதுவீபமும் அதே வகையில் மரியாதைபுரிந்து வந்ததென்று கூறியிருக்கிறான். அவன் சங்கீதத் தேர்ச்சி யுடையவனும் கவிபாடும் வன்மையுடையவனாயு மிருந்தான். அவனுக்குப்பின் ஆண்ட அரசர்கள் காலத்திற் பெரிய புலவர்களும் சிற்பிகளும் ஓவியக் கலைஞரும் இருந்தார்கள். இக்காலத்திலேயே புராணங்களும் 'இராமாயணம்', 'மகாபாரதம்' என்ற காவியங்களும் எழுதப்பட்டன. மனுதர்ம சாஸ்திரமும் எழுதப்பட்டது. நீதிச் சட்டங்களும், ஒவ்வொரு சாதியாரும் அனுட்டிக்க வேண்டிய ஒழுங்குகளும், பண்டைக் காலக் கல்விப் பயிற்சி முறையும் இந் நூலிற் கூறப்பட்டிருந்தன.

அக்காலத்திலிருந்த ஓவியங்களை மேற்கு இந்தியாவிலுள்ள அஜந்தாக் குகைகளில் இன்றைக்குங் காணலாம். விஜயன் என்றொருவன் இலங்கைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லை யென்றும், இலங்கையிலுள்ள இராக்கதரை அழிக்கும்பொருட்டுச் சிங்களன் என்ருெரு அரசன் இத்தீவுக்கு வந்தானென்றும் இந்திய வரலாருென்று கூறுகிறது.

குப்தர் காலத்தில் எழுந்த கற்சித்திரங்களும் மிகச்சிறந்தனவாம். அனுரதபுரி, இஸ்ருமுனி என்ற இடங்களிற் காணப்படும் சித்திரவேலைகள் குப்த காலத்திலுள்ள சிற்ப முறைப்படியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

கி. பி. 362 ல் மகாசேனனின் மகனுன கீர்த்தி ஸ்ரீமேவன் அரசனுனன். இந்தியாவிலிருந்து புத்தருடைய தந்ததாது இவன் காலத்தில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. இவன் அதை வைத்து ஓர் ஆலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டை செய்வித்தான். பின்பு ஆண்டுதோறும் அதை அபயகிரி விகாரைக்கு விழாவெடுத்துச் செல்ல ஒழுங்கு செய்தான், பின் ஆண்ட சிங்கள அரசர்களும் அத்தந்த தாதுவை விசேஷச் சின்னமாகப் பாதுகாப்புச்செய்து வந்தனர். பிற்காலத்தில் கண்டியை ஆண்ட கடைசியரசன் தனது அரண்மனைக் கணித்தாகத் தலதா மாளிகை என்ற தந்ததாதுக்கோவிலை அமைத்தான், அது இன்றும் காணப்படுகிறது. கீர்த்தி ஸ்ரீமேவன் ஆரம்பித்த தந்தவிழா இன்றும் பெரஹராவெனக் கொண்டாடப்படுகிறது. இவனுடைய காலத்திலும் இந்தியாவில் சமுத்திரகுப்தன் அரசு செலுத்தி வந்தான். கீர்த்தி ஸ்ரீமேவன் புத்தகாயா என்ற க்ஷேத்திரத்தில் யாத்திரிகருக்காக ஒருவிகாரையைக் கட்டுவித்தான். இப்படியான போக்கு வரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினுல் இந்தியாவிலுள்ள சீர்திருத்தங்கள் இலங்கையிலும் பரவின.

குப்தர் காலத்திருந்த காளிதாசர், சகுந்தலை என்ற நாடகத்தை எழுதியுள்ளார். இந்நாடகாசிரியர் 'இருதுசங்கம்' 'இரகுவம்சம்' 'மேகதூதம்' என்ற நாடகங்களையும் எழுதியுள்ளார். குமாரதாசன் என்ற கவி 'ஜானகீஹரண' என்ற நூலை இரகுவம்சத்தைத் தழுவி எழுதியிருக்கின்ருர்.

கீர்த்தி ஸ்ரீமேவனுடைய பேரனுன புத்ததாசன் ஓர் சிறந்த அரசவைத்தியனுவான். இவன் வைத்தியத்திலும் சத்திர சிகிச்சையிலும் பேர்பெற்றவன். பிராணிகளிடத்தும் அன்புள்ளவன். இவனுடைய மகன் மகாநாமன் அரசாண்ட காலத்தில் புத்தகோசன் என்ற இந்தியப் பிக்கு இலங்கைக்கு வந்தார். இவர் 'விசுத்தி மார்க்கம்' என்ற நூலைப் பாளி மொழியில் எழுதினுர். பின்பு 'திரிபிடகத்தை' பாளிப் பாஷையில் மொழி பெயர்த்து வைத்தார். இலங்கையிலுள்ள இலக்கியத்துக்குப் புத்துயிர் கொடுத்தார். 412ல் பாகியன் என்ற சீனதேசத்துப் பௌத்த பிக்கு இலங்கைக்கு வந்தார்.

பாகியன் சீனுவிலிருந்து மத்திய இந்தியாவுக்கு வந்துசேர 6 வருடங்கள் சென்றன. இந்தியாவிலிருந்து கப்பலேறிப் பதினுன்கு நாட்களில் இலங்கையை அடைந்தார். இலங்கையில் இரண்டு வருடகாலம் தங்கியிருந்து சீனுவுக்குத் திரும்பினுர். அவர் தன்னுடைய பிரயாணத்தைப்பற்றி எழுதிவைத்த குறிப்புக்களிற் தான் தரிசித்த விகாரைகளைப்பற்றியும், கோபி பாலைவனத்தின் தாங்கொணு உஷ்ணத்தைப்பற்றியும் எழுதி இருக்கிறுர். இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5000 பிக்குகளுக்குமேல் வாழ்ந்தார்களென்றும், அபயகிரி விகாரையில் 5000 பிக்குகள் இருந்தன ரென்றும், அங்கு 20 அடி உயரமுள்ள ஒரு புத்த விக்கிரக மிருந்ததென்றும், அனுரதபுரியிலுள்ள வெள்ளரசைப்பற்றியும், தந்ததாது விழாவைப் பற்றியும் எழுதியிருக்கின்றார்.**

## வினுக்கள்

1. மேல்வரும் வசனங்களிற் கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

(i) சமுத்திரகுப்தன் அயல் நாடுகளைக் ——— முயன் ருன்.

(ii) சமுத்திரகுப்தனுக்கு —— திறை கொடுத்தது.

(iii) குப்தர் ஆட்சிக் காலத்தில் ——, ——, ——, இருந்தார்கள். —— சாஸ்திரமும் எழுதப்பட்டது. அக்காலத்திலிருந்த ஓவியங்களை —— குகைகளில் இன்றைக்கும் காணலாம். ——, —— காணப் படும் சித்திர வேலைகள் குப்தகாலத்திலுள்ள சிற்ப முறைப்படியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

(iv) ——அரசனுயிருந்த காலத்தில் இந்தியாவிலிருந்து புத்ததாது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. பின் ஆண்ட அரசர்களும் அத்தந்த தாதுவை ஒரு விசேஷ —— பாதுகாத்தனர்.

(v) கீர்த்தி ஸ்ரீமேவன் புத்தகாயாவில் ஒரு ——— கட்டுவித்தான்.

(vi) காளிதாசர் ——, ——, என்ற நாடகங்களை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vii) —— சிறந்த அரச வைத்தியனுவான்.

(viii) பாகியன் ——, —— தங்கியிருந்தான்.

2. சமுத்திரகுப்தனைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு.

3. குப்த காலத்தில் இலங்கையி லேற்பட்ட கலை வளர்ச்சியைப்பற்றி விபரித்து எழுதுக.

4. சுருக்கமான குறிப்புகள் எழுதுக:
காளிதாசன், புத்ததாசன், புத்தகோசன், பாகியன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## எட்டாம் பாடம்

# நிர்வாக அமைப்பும் வாழ்க்கைமுறையும்

மகாவம்சத்திற் காணப்படும் சில ஆதாரங்களைக்கொண்டும் அக்காலத்தில் இந்தியாவிலிருந்த நிலைபரங்களைக்கொண்டும் இலங்கையிலுள்ள அரசியல் முறையைப்பற்றி ஒருவாறு அறியக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் கீர்த்தி ஸ்ரீமேவன் காலந்தொட்டு மூன்று பெரும்பகுதிகளிருந்தன. அவை பிகிற்றி அல்லது இராசரட்டை, உறுகுணை, மாயரட்டை என்பனவாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசனுல் ஆளப்பட்டது. அக்காலத்தில் அனுரதபுரியே இலங்கையின் தலைநகராக இருந்தது. ஆனுல் 18 வருஷங்களாக, காசியப்பன் சிகிரியாவிலிருந்து அரசாண்டான். பொல்லனறுவையும் பிரதான இராசதானியாக விளங்கியது.

அக்காலத்து அரசர்கள் பிரஜைகளைக் காப்பது தங்கள் முக்கிய கடமையென்றெண்ணினர். அவர்களுக்குப் போதிய அதிகாரமிருந்தபோதிலும் நாட்டு வழக்கங்களுக்கு மாருகவோ அல்லது சனங்களுக்கு விரோதமானவைகளைச் செய்யவோ விரும்பவில்லை. படையின் உதவியைக்கொண்டே அரசாண்டான். அரசனுக்காகப் போர்புரியும் போர்வீரர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. சேனைத் தலைவனுன சேனுதிபதி அரசனுக்கு உதவியா யிருந்தபோதிலும் அதிக அதிகாரமும் வன்மையுமுடையவனுக இருந்தான். வல்லமை குறைந்த அரசனை நீக்கி சேனுதிபதி தானே அரசை அபகரித்தலுமுண்டு. அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கடமைகளையுஞ் செய்து முடிப்பதற்குக் கஷ்டமாயிருந்தபடியால், பல உத்தியோகத்தர்களை நியமித்தான். அவ்வுத்தியோகத்தர்கள் சேர்ந்த ஒரு சபையுடன் முக்கிய விஷயங்களைப்பற்றி ஆலோசிப்ப துண்டு. நாட்டு வழக்கத்தின்படி அரசுரிமை ஆண் சகோதரர்களுக்கும், அவர்களுக்குப்பின் அரசனின் ஆண் மக்களுக்கு முண்டு.

நிலங்களின் விளைபொருட்களே நாட்டின் பிர தான ஐஸ்வரியமாகும். அரசசேவை புரிபவர் களுக்கும் நிலங்கள் ஈயப்பட்டன. தேவாலயங் களுக்கு, விகாரைகளுக்குத் தேவையான செல வுக்கும், புத்தகுருமாருடைய சீவியத்திற்கும் நிலங் களே அளிக்கப்பட்டன.

சமுதாயத்துக்கு அடிப்படையாக வுள்ளது கிராமமாகும். ஆனால், அக்காலத்திற் போக்குவரவு வசதிகள் மிகக் குறைவு. மக்கள் தங்களுடைய பாதுகாப்புக்காகவும் தங்களுடைய, முயற்சிகளைச் சுலபமாகச் செய்வதற்காகவும் ஒருமித்து வாழ்ந் தனர். அதற்காகப் பல்வேறு சபைகளை உண்டாக் கினர். அவைகளுள் கன்சபாவே சிறந்ததாகும். சனங்கள் கிராமத் தலைவர்களைக்கொண்ட கன்சபாக் களை நிறுவி அவைகள்மூலம் கிராம விஷயங்களை நடத்திவந்தனர். மக்கள் ஒவ்வொரு குழுவை அல்லது கூட்டத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தனர். அதன்மூலம் தங்கள் வசதிகளையும் பாதுகாப்பையும் பெற்றனர். வரிகள் இக்கூட்டங்களால் அரசனுக்குக் கொடுக்கப்பட்டன. விவசாயமே சனங்களின் முக்கிய தொழிலாகும். ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவின் தொழிலைச் செய்தான். பொது நன்மையைக்கருதி மக்கள் வாழ்ந்தனர். அரசன் தெய்வீகசக்தி யுடையன் என்று கருதப்படவில்லை. நெற்பயிரே பிரதானமாகப் பயிரிடப்பட்டது. இலங்கையின் வடபாகத்திலும், தென்கிழக்குப் பாகத்திலுமே சனங்கள் அதிகமாகக் குடியேறி யிருந்தபடியால் அவ்விடங்களில் நெற்பயிரிடுவதற்குச் சில வசதிக் குறைவுகள் காணப்பட்டன வருஷத்தில் நான்கு மாதங்கள் வரையிற்தான் மழை பெய்வதுண்டு. வரட்சிக் காலங்களில் அதிக கஷ்டங்களுண்டு. மழைக் காலங்களில் ஓடுகின்ற சிற்றருவிகளுக்கிடையே வரம்புகளைக் கட்டிக் குளங்களாக அமைத்துப் பள்ளத்தாக்குகளிலுள்ள வயல்களுக்கு மக்கள் நீர்ப்பாய்ச்சினர். பெரும் ஆறுகளிலும் அணைகளைக்கட்டி நீர்ப்பாய்ச்சினர். அனுரதபுரியில் அபயவாவி திசவாவி முதலிய குளங்கள் கட்டப்பட்டன. குளங்கள் கட்டப்பட்டும், பஞ்சம் இடையிடையே ஏற்பட்டது. துட்டகெமுனு, வலகம்பா, குட்டநாகன், ஸ்ரீசங்கபோ என்ற அரசர்களின் காலத்தில் பஞ்சங்கள் ஏற்பட்டு மக்களுக்கு அநேக கஷ்டங்களை உண்டாக்கின. ஆறுகளைத் தடுத்து அணைகட்டும் முறையைச் சிங்களரே முதன்முதல் உபயோகித்தனர். கால்வாய்களைத் திறந்து இடையிடையே கதவுகளை அமைத்து அவர்கள் தேவையான இடங்களுக்குத் தண்ணீரைப் பாய்ச்சினர். மின்னேரியா, திசவாவி என்பன இவ்வகையில் அமைக்கப்பட்ட குளங்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்றபதங்கள் வைத்து எழுதுக.
   (i) பழைய காலத்தில் இலங்கையின் மூன்று பெரும் பகுதிகளிருந்தன. அவை ———, ———, ——— என்பனவாம்.
   (ii) அக்காலத்தில் ——— இலங்கையின் தலைநகரமாக இருந்தது.
   (iii) ——— உதவியைக்கொண்டே அரசர்கள் ஆண்டார்கள்.
   (vi) வல்லமை குறைந்த அரசனிடமிருந்து சேனாதிபதி —— கைப்பற்றுவதுமுண்டு.
   (v) அரசசேவை புரிபவர்களுக்கு —— ஈயப்பட்டன.
   (vi) சமுதாயத்துக்கு அடிப்படையாகவுள்ளது ——.
2. கன்சபா என்பது யாது? அது செய்த முயற்சிகளென்ன?
3. விவசாயத் தொழில் செய்வதற்கு என்ன கஷ்டங்களிருந்தன? அவைகளை எப்படி நீக்கினர்.
4. மக்களின் வாழ்க்கை முறையை விபரித்து எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் பாடம்

# சிங்கள அரசர்கள்

(கி. பி. 460—496)

மகாநாமனுடைய காலத்திற்குப் பின்பு பாண்டிநாட்டிலுள்ள தமிழர்கள் சிலர் சிங்கள அரசனைக் கொன்று இராசரட்டையை வென்றூர்கள். அப்பகுதியிலிருந்த சிங்களத் தலைவர்கள் உறுகுணைக்கு ஓடிச் சிலகாலஞ் செல்லத் திரும்பி வந்து தாதுசேனன் என்ற ஒருவன் தலைமையின்கீழ் இழந்த இராசரட்டையைக் கைப்பற்ற முயன்றனர். ஈற்றில் தாதுசேனன் வெற்றிபெற்றுத் தமிழரைத் துரத்திவிட்டுத் தான் இலங்கைக்கு அரசனுனன். அவன் 460-ல் சிங்காசனமேறி ஆட்சிபுரிந்த 18 வருட காலத்திலும் நாட்டின் நன்மைக்காகப் பல திருத்தங்களைச் செய்தான். தமிழரால் அழிக்கப் பட்ட புத்தகோயில்களைப் புதுப்பித்ததுமன்றிப் பல புதிய கோயில்களையும் கட்டினுன். காலவாவி முதலிய பல குளங்களைக் கட்டி நீர்ப் பாய்ச்சுவதற்கான வசதிகளை ஏற்படுத்தினுன்.

தாதுசேனன் தனது தாயாரைத் தீயிலிட்டு விடவேண்டு மெனக் கட்டளையிட்டதினுல் அவனது சேனுபதி கோபங்கொண்டு அவனது இளையமகனுன காசியப்பனை, தந்தையைச் சிறைப்படுத்தி, சிங்காசன மேறும்படி தூண்டினுன். தாதுசேனனின் மூத்தமகனுன முகலன் படைத்துணை யில்லாதபடியால் இந்தியாவுக்கு ஓடிவிட்டான். காசியப்பன் விரும்பியபடி செல்வமனைத்தையும் தந்தை கொடுக்

காதபடியால், சேனுதிபதியின் தூண்டுகோலுக் கிணங்கி அவனைக் கொல்லும்படி கட்டளை யிட்டான். தருணம் பார்த்திருந்த சேனுதிபதி தாதுசேனனை ஒரு கட்டிடச் சுவரில் உயிரோடு வைத்துக் கட்டிக் காசியப்பனுக்குத் தீராத பழியை உண்டாக்கிவிட்டான். சனங்கள் காசியப்பனை வெறுத்து, முகலன் எப்பொழுது வருவானென்று எதிர் பார்த்தனர். அதை யுணர்ந்த அரசன் உடனே அனுரதபுரியை விட்டு நீங்கிச் சிகிரியாவை இராச தானியாக்கி, அரண்செய்து கொண்டான். கி. பி. 478 தொடக்கம் 18 வருஷகாலம் அங்கிருந்து அர சாண்டான். முகலன் இந்தியாவிலிருந்து ஒரு சேனை யுடன் வந்து காசியப்பனைத் தோற்கடித்து அனுரத புரியை இராசதானியாக்கி ஆளத் தொடங்கினுன்.

காசியப்பன் தந்தையைக் கொன்ற பாதகச் செய்கையால் எல்லோராலும் வெறுக்கப்படக் கூடியவனு யிருந்தாலும், இலங்கையை ஆண்ட அரசர்களுள் அவனைத் திறமை யுடையவனுகக் கருத வேண்டும். இன்றைக்கும் சிகிரியாவுக்குப் போய் அம்மலையைப் பார்க்கின்றவர்கள் திகிலடைகின் றனர். அம்மலையின் உச்சியில் தனது அரண்மனையை யும் கோட்டையையுங் கட்டி அதிலிருந்து ஆட்சி புரிந்தான். அதில் ஏறுவதற்காக வளைந்த பாதை ஒன்று காணப்படுகின்றது. இந்தக் கோட்டை நகரைச் சுற்றி இரண்டுமைல் சுற்றளவுள்ள மதி லைக் காணலாம். இம்மலையின் அடித்தளத்தில் ஒரு சிங்கத்தின் உருவத்தை அமைத்தான். இதன் கார ணத்தால் இம்மலை சிகிரியா அல்லது "சிங்ககிரி" என்று அழைக்கப்படுகிறது. அம்மலையின் ஒருபாகத் தில் அஜந்தாக் குகைகளிற் காணப்படும் சித்திரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஒத்த அப்சர ஸ்திரீகளின் ஓவியங்கள் தீட்டப் பட்டிருப்பதை இன்றுங் காணலாம்.

காசியப்பன் காலந்தொட்டு பத்தாம் நூற்றுண்டு இறுதிக் காலம்வரை இலங்கையை ஆண்ட மன்னர்களுள் முதலாம் இரண்டாம் அக்போதி மன்னர்கள் சிறந்தவர்களாவர். முதலாம் அக்போதி (கி. பி. 568—601) பல குளங்களை வெட்டுவித்தான். அவைகளிற் பெருங்குள மெனப்படும் குருந்துவாவியைக் கட்டினுன். இவ்வரசனின் மருமகன் இரண்டாவது அக்போதி மின்னேரியாக் குளத்தையும் கிரிந்தலைக் குளத்தையும் இவை போன்ற 12 குளங்களையுங் கட்டினுன். இக்குளங்களைக் கட்டிய அரசர்கள் விவசாயத்தை விருத்தி செய்தனர். போதிய பொருள்களைத் தேடித் தாது கோபங்களையும் விகாரைகளையும் அவர்கள் கட்டினுர்கள்.

## வினுக்கள்

1. தாதுசேனன் செய்த சேவைக ளென்ன?
2. தாதுசேனன் உயிரிழக்க நேரிட்ட சம்பவத்தை எழுதுக.
3. காசியப்பனைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக.
4. சிங்ககிரி என்பது யாது? அங்கே எவற்றைப் பார்க்கலாம்?
5. அக்போதி மன்னர்கள் செய்த வேலைகள் யாவை
6. கீழே காணப்படும் வாக்கியங்களிற் சரியான பதங்களின் கீழ் அடையாள மிடுக.

   (i) பாண்டியர், சோழர் இராசரட்டையைக் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) பாண்டிய மன்னரால் அழிக்கப்பட்ட புத்தகோயில் களை, இந்து ஆலயங்களைத் தாதுசேனன் திருத்தி யமைத்தான்.

(iii) தாதுசேனனின் மூத்தமகனை முகலன், காசியப் பன் இந்தியாவுக்கு ஓடினன்.

(iv) சேனுதிபதி, காசியப்பன், தாதுசேனனை, ஒரு கட்டிடச் சுவரில் உயிரோடு வைத்துக் கட்டினன்.

(v) சிகிரியாவின், சிவனெளிபாதமலையின் ஒரு பாகத் தில் அப்சர ஸ்திரீகளின் ஓவியங்கள் தீட்டப்பட் டிருக்கின்றன.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாம் பாடம்


# யாழ்ப்பாணம்

கி. பி. 794-ல் விசயராசன் வமிசத்திலுள்ள உக்கிரசிங்கன் என்பவன் பெரியசேனையுடன் வந்து போராடி இலங்கையில் அரைவாசியைப் பிடித்துக் கொண்டு கதிரைமலையிலிருந்து அரசாண்டான். கதிரைமலை என்பது கந்தரோடை என்ற இடமென்று சரித்திர ஆராய்ச்சியாளர் அபிப்பிராயப் படுகின்றனர். இவனுடைய காலத்திலேயே தொண்டைநாட்டரசனாகிய தொண்டைமான் கரணவாய் வெள்ளப்பரவை யென்ற இடங்களிலிருந்து உப்பை விலைக்கு வாங்கி மரக்கலங்களிற் கொண்டு போகிறதற்குக் கடலோடு சேர்ந்த ஆழமான வாய்க்கால் ஒன்றை வெட்டுவித்தான். அது இன்றைக்கும் தொண்டைமானாறென வழங்கி வருகிறது. அக்காலத்தில் சோழஇராசனின் மகள் மாருதப்புரவல்லி என்பவள் கீரிமலைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தன் நோய் நீங்கப்பெற்று இருக்கும்பொழுது உக்கிரசிங்கன் அவளுடைய பேரழகைக்கண்டு அவளைத் தன் மனைவியாக்கினான். கதிரைமலையை விட்டுச் செங்கடகநகரியை* இராசதானியாக்கி ஆண்டுவந்த காலத்தில் இரு புத்திரர்கள் பிறந்தார்கள். நரசிங்கனென் றழைக்கப் பட்ட வாலசிங்கன் என்ற மகனுக்கு செய்துங்கவரராசசிங்கன் என்று பெயர்கொடுத்து முடிசூட்டினான். சிறிது காலத்துக்குப்பின் அவன் இறந்தான்.

---

* வல்வெட்டித்துறை என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துங்கவரராசசிங்கன் அரசு செலுத்தி வருங் காலத்தில் சோழநாட்டிலிருந்து கவிவீரராகவன் என்னும் ஒரு கவிவாணன் வந்தான். அவன் அந்த கனு யிருந்தபோதிலும் கவி பாடுவதிலும், யாழ் வாசிப்பதிலும் திறமைவாய்ந்தவனுகக் காணப்பட்டான். அவன் வரராசசிங்கன் பேரிற் பாட்டுகள் பாடி இராசசபையிலிருந்து யாழ் வாசித்துப் பாடினுன். அந்த இனிமையான பாக்களைக் கேட்ட அரசன் அளவிறந்த மகிழ்ச்சி எய்தினுன். அரசன் அவனுக்கு உபகாரமாக இலங்கையின் வடபாகத்தைக் கொடுத்தான். அவன் அந்த உபகாரத்தை ஏற்று யாழ்ப்பாண மெனப் பெயரிட்டு ஆளத் தொடங்கினுன். யாழ்பாடி வடதேசத்திலிருந்து தமிழ்க் குடிகளைக் கொண்டுவந்து யாழ்ப் பாணத்தி லிருத்தினுன். அவன் வயோதிப வயது வரையும் அரசாண்டு இறந்தான். பின்பு யாழ்ப் பாணம் சிறிதுகாலம் அரசனில்லாது இருந்தது. உடனே பாண்டிமளவனென்னும் ஓர் பிரபு சோழ நாட்டுக்குப் போய் அங்கே மாருதப்புரவல்லிக்கு மகன் முறையான சிங்கையாரியன் என்னும் அரச குமாரனைக் கண்டு அவனை யாழ்ப்பாணத்தை ஏற்று அரசெய்யும் பொருட்டு வேண்டினுன். சிங்கையாரியன் அதற்கிணங்கிப் புவனேகபாகு என்னும் மந்திரியையும், கங்காதரக் குருக்களையும் கூட்டிக்கொண்டு மற்றும் பரிவாரங்களுடன் யாழ்ப் பாணத்தில் வந்திறங்கினுன். அவன் நல்லூரை இராசதானியாக்கி (கி. பி. 900 வரையில்) அங்கே அரண்மனையைக் கட்டி அருகில் ஏரி ஒன்றையும் உண்டாக்கி அதில் யமுனை நதித் தீர்த்தத்தையுங் கலந்துவிட்டான். பல கோயில்களும் கட்டினுன்.

அவைகளில், சில வீரமாகாளியம்மன் கோயில், சட்டநாதீசுரன் கோயில் என்பனவாம். பின்பு சிங்கையாரிய மகாராசன் தமிழ் நாட்டரசர்களுக்கு எழுதித் தமிழ்க் குடிகளை அழைப்பித்தான். இவ் வரசனுக்கு ஒரு கை கூழங்கையா யிருந்தபடியால் அவனைக் கூழங்கைச் சக்கரவர்த்தி என்று அழைத் தார்கள். கி. பி. 947-ல் கந்தசுவாமிகோவில் கட்டி முடிக்கப்பட்டது. அரசன் தான் வயோதிபப் பருவ மடைந்ததும் தனது மகன் குலசேகரசிங்கையாரிய னுக்கு முடிசூட்டினான். அவனிறந்த பின் முடிசூட் டப்பட்ட மகன் ஆண்டான். இவனுக்குப் பின் இவ னுடைய மகன் குலதுங்கசிங்கையாரியன் அரசாண் டான். இவ்வரசனின் மகன் விக்கிரமசிங்கையாரிய னுடைய காலத்தில் சிங்களருக்கும் தமிழருக்கு மிடையில் சமயசம்பந்தமான கலகம் உண்டானது. அரசன் உடனே சிங்களருக்குத் தலைவனுயிருந்த பஞ்சிவண்டாவையும் அவனோடு சேர்ந்த 67 சிங் களரையும் கொன்றான். அதன் பின் சிங்களக் குடிகள் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டன. இவ னுக்குப்பின் தமிழர் பரம்பரையாக ஆண்டு வந்தனர்.

## வினாக்கள்

1. உக்கிரசிங்கன் என்பவன் யார்? அவனுடைய இராச தானி யாது?

2. தொண்டைமான் இலங்கைக்கு வந்ததற்குக் காரண மென்ன?

3. உக்கிரசிங்கன் யாரை மணந்தான்? மாருதப்புரவல்லி யாழ்ப்பாணம் வரவேண்டிய சந்தர்ப்பம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. யாழ்பாடியைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக.

5. யாழ்ப்பாணத்தில் குடியேறிய தமிழர் எங்கிருந்து வந்தனர் ?

6. மேல்வரும் வசனங்களிற் கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து நிரப்புக.

(i) சிங்கையாரியன்——வமிசத்தைச் சேர்ந்தவன். அவன் யாழ்ப்பாணம் வரும்பொழுது——என்னும் மந்திரியையும், —— குருக்களையும் கூட்டிக் கொண்டு வந்தான். கி. பி. —— வரையில் 'நல்லூரை' இராசதானியாக்கி அரசாளத் தொடங்கினான். அவன் கட்டிய கோயில்கள் ——, இன்னும் பலவாம். —— குடிகளை இருத்தியவர்களி லிவனுமொருவன். இவன் —— சக்கரவர்த்தி என்றும் அழைக்கப்பட்டான்.

(ii) கி. பி. —— கந்தசுவாமி கோயில் கட்டி முடிக்கப்பட்டது.

(iii) —— பின் தமிழர் பரம்பரையாக ஆண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராம் பாடம்

# தென்னிந்தியாவில் பல்லவரின் ஆட்சி

கி. பி. ஆறுவது நூற்றாண்டினிறுதிக் காலந் தொட்டு இருநூறு வருடகாலமாகப் பல்லவ அரசர்கள் சோழஇராச்சியத்தை ஆண்டனர். நரசிங்கவர்மன் (கி. பி. 635—668) என்பவனே அவர்களுட் பெரிய அரசனுவான். இந்தியாவிற் போர் செய்த காலத்திற் தனக்கு உதவிசெய்த மானவர்மனை இலங்கைக்கு அரசனுக்கினுன். இவ்வரசன் மகாபலிபுரத்தில் ஏழு பெரும்பாறைகளைக் குடைந்து கோயில்கள் அமைத்தான். அக்கோயில்களில் அழகிய சிற்பவேலைகளை இன்றுங் காணலாம். இலங்கையிற் காணப்படும் சிற்பங்களும் பல்லவ முறையைத் தழுவியே ஆக்கப்பட்டன. இஸ்ருமுனியாவிற் காணப்படுகின்ற சிற்பங்களை இன்றுங் காணலாம். கி. பி. எட்டாவது நூற்றாண்டில் பல்லவ இராச்சியம் நிலைகுலைந்தது. அதன்பின் சோழர் ஆதிக்கம் பரவியது. முதலாவது பராந்தகன் (கி. பி. 907—949) என்ற சோழமன்னன் பாண்டிய மன்னர்களைத் தோற்கடித்துப் பின்பு இலங்கையை அரசாண்ட ஐந்தாவது காசியப்பனேடும் (கி. பி. 912-923) மூன்றுவது உதயனேடும் (கி. பி. 945—953) சண்டை செய்தான். இராசராசசோழன் என்ற பெரும்புகழ் படைத்த சோழமன்னன் பாண்டியஇராச்சியத்தையும், கலிங்கத்தையும் வென்றுன். இவன் காலத்தில் ஐந்தாவது மிகுந்து இலங்கையை ஆண்டான். இவனுடைய வீரர்கள் செய்த குழப்பங் காரணமாக இவன் உறுகுணைக்கு ஓடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞன். இதை அறிந்த சோழ மன்னனின் மகன் இராசேந்திரன் இலங்கைக்கு வந்து போர்செய்து மிகுந்துவைக் கைதுசெய்து இந்தியாவுக்கு அனுப்பினன். சோழர் பொல்லனறுவையை இராசதானியாக்கினர். அவ்விடத்திலுள்ள சிவாலயம் சோழ சிற்ப முறைப்படியே கட்டப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் தொடர்புடைய காலத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது காலம் சோழர் தங்களாட்சியை நிலை நாட்டிய காலமாகிய கி. பி. 1017 தொடக்கம் 1070 வரையும், இரண்டாவது காலம் மூன்றும் விஜயபாகுவின் ஆளுகைக் காலம் (1232—1236) தொட்டுப் போத்துக்கீசர் இலங்கைக்கு வந்தகாலம் (1505) வரையும் எனலாம். 1017 தொடக்கம் 1235 வரையும் பொல்லனறுவை, தலைநகரமாக விருந்தது. சோழர் காலத்திலுமல்லாது, பின் ஆண்ட சிங்கள அரசர்களும் பொல்லனறுவையைத் தலைநகராக்கினர்.

## வினுக்கள்

1. பல்லவர் எவ்வளவு காலமாகச் சோழஇராச்சியத்தை ஆண்டனர்?
2. இலங்கையில் பல்லவருடைய செல்வாக்கு இருந்ததற்குக் காரணமென்ன ?
3. பல்லவ முறையைத் தழுவிய சிற்பங்கள் இலங்கையில் எவ்விடங்களிற் காணப்படுகின்றன.
4. பல்லவர் காலத்தின்பின் யாருடைய ஆதிக்கம் இலங்கையிற் பரவியது ?
5. பொல்லனறுவையிற் காணப்படும் சிவாலயம் யாருடைய காலத்திற் கட்டப்பட்டது ?
6. பொல்லனறுவை எப்பொழுது தலைநகரமானது ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பன்னிரண்டாம் பாடம்

# இலங்கையில் சோழ அரசர்களின் ஆதிக்கம்

இலங்கையில் வட இந்தியாவின் தொடர்பு பத்தாம் நூற்றாண்டின்பின் குறைந்துவிட்டது. பின்பு தென்இந்தியாவின் ஆதிக்கம் பரவத்தொடங்கியது. அக்காலத்தில் தென்னிந்தியாவில் சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு என்று மூன்று தமிழ் நாடுகள் இருந்தன. இலங்கை இந்நாடுகளோடு தொடர்புடையதாக விருந்தது. சோழ அரசர்களும் பாண்டிநாட்டரசர்களும் இலங்கையிற் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி அரசாட்சிபுரிந்தபடியால், அவர்களுடைய காலத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி அறிதல்வேண்டும். கி. பி. 1017-ல் சோழர் இலங்கையைக் கைப்பற்றி 1070 வரையும் இந் நாட்டில் அரசுபுரிந்தார்கள். இதற்கு முன்பும் பாண்டியர், சோழர் சிறிதுகாலம் அரசுபுரிந்திருந் தும் அவர்கள் ஆதிக்கம் பலமடையவில்லை. ஆனல், 1017-ல் இலங்கை தன் சுதந்திரத்தை இழந்து சோழ இராச்சியத்தின் ஒரு பகுதியா யமைந்தது. அவர்கள் பொல்லனறுவையை இராசதானியாக்கி ஆளத் தொடங்கினர். சோழர் தமிழருக்கே உயர்ந்த உத்தியோகப் பதவிகளைக் கொடுத்தனர். இந்துமதத்தை ஆதரித்தனர். இலங்கையிலுள்ள ஐசுவரியத்திலொரு பகுதி சோழ நாட்டுக்கே கொண்டுபோகப்பட்டது. சோழ அரசர், போர் செய்வதற்கும், இந்து ஆலயங்கள் கட்டுவதற்கும் அந்தப் பொருளைச் செலவு செய்தனர். முதலாம் இராசேந்திர சோழனுடைய காலத்தில் (கி. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1014—1044) சிங்களர் பாண்டிய அரசர்களுக்கு உதவி கொடுத்துச் சோழனுடைய ஆதிக்கத்தைக் குறைக்கலா மென்று எத்தனித்தும் சித்தியடைய வில்லை. 1029-ல் ஐந்தாம் மகிந்தனின் மகன் விக்கிரமபாகு சோழ அரசனை இந்நாட்டிலிருந்து துரத்துவதற்கு முயற்சி செய்தான். பின்பும் மூவர் எத்தனித்தும் ஒருவரும் சித்தி எய்தவில்லை. கடைசி



யாக லோகேஸ்வரா என்ற சிங்களச் சேனாதிபதி ஒருவன் உறுகுணையை 1049-ல் கைப்பற்றிக் கதிர்காமத்திலிருந்து ஆளத்தொடங்கினான். ஆறு வருடங்களாக ஆளும்பொழுது மலைநாட்டைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்த கீர்த்தி என்பவன் உறுகுணையையும் தன்வசப்படுத்தினான். இவன் விஜயபாகு என்ற பெயருடன் ஆளத் தொடங்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ அரசனைத் துரத்த வேண்டுமென்று தீர் மானஞ் செய்தான். இதையறிந்த சோழர் தங்கள் சேனை ஒன்றை உறுகுணையைப் பிடிப்பதற்கு அனுப் பினர். விஜயபாகு மலைநாட்டுக்கு ஓடி ஒளித்தான். இராசரட்டையில் உண்டான குழப்பத்தை அடக்கு வதற்குச் சோழர்களின் சேனை அவ்விடஞ் சென் றது. அவ்விடத்திலிருந்து மீண்டும் வந்த சேனை அவனாற் தோற்கடிக்கப்பட்டது. அச்சண்டையிற் சித்தி எய்திய பின் விஜயபாகு பொல்லனறுவை யைக் கைப்பற்றினான். இச்செய்தியைக் கேள்வி யுற்ற வீரராசேந்திரன் என்ற சோழதேசத்து அர சன் 1067-ல் ஒரு சேனையொன்றை இலங்கைக்கு அனுப்பினான். அனுரதபுரியில் நடந்த சண்டையில் விஜயபாகு தோற்கடிக்கப்பட்டதும் உறுகுணைக்கு ஓடினான். பின்பு விஜயபாகு மறுபடியும் யுத்தத் துக்கு ஆயத்தஞ்செய்து மேற்கிலிருந்தும் கிழக்கி லிருந்தும் தெற்கிலிருந்தும் மூன்று சேனைகளை அனுப்பி அனுரதபுரி, மாந்தோட்டை, பொல்ல னறுவை என்ற பிரதான இடங்களைக் கைப்பற்றி னான். 1070-ல் சோழஅரசர் ஆளுகை முடிவடைந் தது. அவன் பொல்லனறுவைக்கு விஜயராசபுரம் என்ற வேறொரு பெயர்கொடுத்து அங்கிருந்து ஆளத் தொடங்கினான்.

## வினாக்கள்

1. மேல்வரும் வசனங்களிற் கீறிட்ட இடங்களுக்கு அடைப் புக் குறிகளுக்குள் இருக்கின்ற பதங்களில் ஏற்ற பதத்தை வைத்து அவைகளை எழுதுக.

   (i) கி. பி. 1017 —— சோழர் இலங்கையைக் கைப் பற்றினர். (1017, 1070, 1040).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) ——பின் இலங்கை சுதந்திரத்தை இழந்து சோழ இராச்சியத்தின் ஓர் பகுதியாய் அமைந்தது, (1070, 1017).

(iii) ——என்ற சேனுபதி உறுகுணேயைக் கைப்பற்றிக் கதிர்காமத்திலிருந்து அரசாண்டான். (சோழர், லோகேஸ்வரா).

(iv) சோழரைத் துரத்த வேண்டுமென்று —— முயற்சிகள் செய்தான். (விஜயபாகு, கீர்த்தி).

2. இலங்கையில் சோழருடைய ஆளுகையைப்பற்றி எழுதவும்.

3. சோழருடைய ஆதிக்கம் கி. பி. 1070-ன் பின் பலம் குன்றியதற்கு நியாயமென்ன?

4. சோழரைத் துரத்துவதற்கு முயற்சிசெய்த சிங்கள அரசர்கள் யாவர்? எவ்வரசன் வெற்றி பெற்ருன்?

5. விஜயராசபுரம் என்பது யாது? யார் அந்தப் பெயரைக் கொடுத்தார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மூன்ருும் பாடம்

## சோழ அரசர்களுக்குப் பின் ஆண்ட சிங்கள அரசர்கள்

முதலாம் விஜயபாகு கி. பி. 1070 தொடங்கி 44 வருஷகாலம் ஆட்சிபுரிந்தான். தனது இராசதானியாகிய பொல்லனறுவையைச் சுற்றி மதில் கட்டி அரண்செய்தான். சோழரைத் துரத்திச் சிங்களர் ஆட்சியை நிலைநாட்டியவன் என்ற கௌரவம் இவனுக்குண்டு. பின்பு சோழருக்குப் பகைவரான பாண்டியருடனும், கலிங்கருடனும், சளுக்கிய அரசனுன ஆரும் விக்கிரமாதித்தனுடனும் சிநேகம் பூண்டான். பௌத்த சமயம் சீரழிந்துபோனபடியால் பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்தான். பல விகாரைகளைக் கட்டியதோடு பொல்லனறுவையில் தந்ததாதுவை வைத்து ஒரு ஆலயங் கட்டினுன். சிவனொளிபாதத்திற்கு யாத்திரை செய்தவர்களுக்காகத் தர்மசாலைகளைக் கட்டுவித்தான்.

விஜயபாகு விவசாயத்தில் அதிகம் சிரத்தை எடுத்தான். ஆறுகளில் அணைகட்டுக்களமைத்து நீர்ப்பாய்ச்சக்கூடிய வசதிகளை ஏற்படுத்தினுன். அதனுலே நெல்விளைவு நாட்டில் அதிகரித்தது. மாயரட்டை, உறுகுணை, மலையரட்டை என்னும் பகுதிகளிற் குழப்பங்கள் ஏற்பட்டன. 1085-ல் இவனுடைய சேனையிலிருந்த வேலைக்காரர் (சம்பளத்துக்காகப் போர்செய்வோர்) என்ற இந்தியப் படைவீரர்கள் கலகஞ்செய்து சேனுதிபதிகளிருவரைக் கொன்றனர். அரசன் வக்கிரகலைக்கு ஓடி ஒளித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் பின்பு அவர்களைக் கொலை செய்வித்தான். 1114-ம் ஆண்டு இறக்கும்பொழுது இலங்கை முழுவதும் ஒருவன் ஆளுகையின்கீழ் இருந்தது.

விஜயபாகு இறந்ததன்பின் அவன் தம்பியாகிய ஜயபாகு அரசனானன். அவனின் பின் விஜயபாகுவின் மகன் விக்கிரமபாகு இராச்சியத்துக்கு உரிமை யுடையவனாக விருந்தும் ஜயபாகு தனது சகோதரியின் மகன் மானாபரணனை மாயரட்டைக்கு அரசனாக்கினான். விக்கிரமபாகுவுக்கும், மானாபரணனுக்குமிடையே அநேக யுத்தங்கள் நடைபெற்றன. விக்கிரமபாகு மானாபரணனையும் அவனது தம்பிமாராகிய கீர்த்திஸ்ரீ மேகனையும், ஸ்ரீவல்லபனையும் தோற்கடித்து ஜயபாகுவையும் இராசரட்டையிலிருந்து துரத்திவிட்டுத் தான் அவ்விராச்சியத்துக்கு அரசனானான். மானாபரணன் மாயரட்டை அரசனாகவே இருந்தான். மானாபரணன் இரண்டு ஆண்டுகளின்பின் இறக்கக் கீர்த்தி ஸ்ரீமேகன் மாயரட்டைக்கு அரசனானன். ஸ்ரீவல்லபன் உறுகுணையை ஆண்டுகொண்டிருந்தான். 1137-ல் விக்கிரமபாகு இறக்க அவனுடைய மகன் இரண்டாம் கஜபாகு அரசாண்டான்.

ஆனால், மானாபரணனின் மகன் பராக்கிரமபாகு இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளத் தொடங்கினான். தனது தந்தை இறந்தவுடன் பராக்கிரமபாகு ஸ்ரீவல்லபனாகிய சிறிய தந்தையுடன் உறுகுணையிலிருந்தான். சிறிதுகாலம் மாயரட்டையில் கீர்த்தி ஸ்ரீமேகனுட னிருந்தான். இவன் தனது சிறிய தந்தையின் இராச்சியத்தைக் கைப்பற்றச் சூழ்ச்சிகள் செய்தான். அவனது சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாராகிய ஸ்ரீமேகன் இறந்தபின் மாய ரட்டைக்கு அரசனானான். பின்பு இராசரட்டையை யும் கைப்பற்றினான். இரண்டாம் கஜபாகுவுடன் போர்செய்து ஈற்றில் ஓர் உடன்படிக்கை எழுதிக் கொண்டான். 1153-ல் அவனிறக்கப்பராக்கிரமபாகு இராசரட்டைக்கும் அரசனானான். பின்பு உறுகுணை யும் அவன் ஆட்சியின் கீழ் வந்தது. பராக்கிரம பாகு இலங்கைக்குத் தனி அரசனாய் விளங்கினான்.

அவன் அரசனாயிருந்த காலத்தில் அவன் பிற நாடுகளிற் செய்த இரு யுத்தங்கள் குறிப்பிடத் தக்கன. பர்மிய அரசனான அலாங்சிது என்பவ னோடு யுத்தஞ்செய்து வெற்றிபெற்றான். பர்மிய அரசன் யானை வர்த்தகத்தை நிறுத்தினதோடு சிங் களத் தூதுவர்களையுந் துன்புறுத்தினான். அதனால் பர்மாவுக்கு ஒரு கடற்படையுடன் போய் வெற்றி பெற்றான் என்று மகாவம்சம் கூறுகிறது. பின்பு 1167-ல் பராக்கிரம பாண்டியனுக்கு உதவிசெய்யும் பொருட்டுக் குலசேகரன் என்ற அரசனோடு போர் புரிந்து சிலவெற்றிகள் பெற்றபொழுதிலும் ஈற்றில் அதிக நஷ்டமடைய நேரிட்டது.

பராக்கிரமபாகு சிறந்த போர்வீரன். விவ சாயம் விருத்தியடைய அநேக முயற்சிகள் செய் தான். தோப்ப வாவியைத் தப்புத்தலு வாவியுடன் இணைத்து பராக்கிரமசமுத்திரம் என்ற குளத்தைக் கட்டுவித்தான். கால்வாய்கள் மூலம் அம்பன் கங் கையை இக் குளங்களோடு தொடுத்தான். பொல்ல னறுவையில் இவன் செங்கல்லாற் கட்டுவித்த அரண்மனை பல மாடங்களையும், கட்டிடங்களையு முடையது. இவ்வரசன் சமயபக்தியு முடையவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்காதிலக விகாரை, கிரிவிகாரை போன்ற பல கோயில்களை அமைத்தான். பௌத்த சமயப் பிக்குகளுக்கிடையிலிருந்த விவாதத்தைத் தீர்த்து அவர்களை ஒற்றுமைப்படுத்தினன்.**

**பொல்லனறுவையிற் பிற்காலத்தாண்ட அரசர்களுள் நிஸங்கமல்லனும் கலிங்கமாகனும் சிறந்தவர்களாம். நிஸங்கமல்லன் கலிங்கதேசத்து இளவரசன். அவன் பராக்கிரமபாகுவுக்கு மருமகனுவான். இவன் 1187 தொடக்கம் 1196 வரையில் ஆட்சி புரிந்தான். கலிங்கமாகன் (1214 - 1235) பொல்லனறுவை காலத்துக் கடைசி அரசனுவான். இவன் பௌத்த சமயிகளைத் துன்புறுத்திக் குடிகளையும் வருத்தினன். இவன் ஆட்சியின் பின் பொல்லனறுவையின் பெருமை மங்கிற்று.**

## வினக்கள்

1. முதலாம் விஜயபாகு இலங்கைக்குச் செய்த நன்மைகள் யாவை?

2. மேல்வரும் ஒவ்வொன்றைப்பற்றியும் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

   வேலைக்காரர், மானுபரணன், கீர்த்தி ஸ்ரீமேகன்.

3. கீழே காணப்படும் வாக்கியங்களிற் சரியான பதங்களின் கீழ் ஓர் அடையாளமிடுக.

   (i) மானுபரணனின் மகன், ஜயபாகு, விக்கிரமபாகு என்பவனுவான்.

   (ii) பராக்கிரமபாகு சிறிய தந்தையின் இராச்சியத்தைச் சூழ்ச்சியினுல், அவனிறந்தபின், பெற்றுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) பராக்கிரமபாகு, பிறநாடுகளில், உள்நாடுகளில் யுத்தஞ்செய்து வெற்றி பெற்றான்.

(iv) பராக்கிரமபாகு, கந்தளாய், பராக்கிரம சமுத்திரம் என்ற குளத்தை வெட்டுவித்தான்.

(v) இவ்வரசன் பல கோயில்களைக் கட்டினான். அழித்தான்.

4. பராக்கிரமபாகுவின் ஆளுகையைப் பற்றிக் கூறுக. அவன் செய்த நன்மைகள் யாவை?

5. பொல்லனறுவை காலத்துக் கடைசி அரசன் யாவன்?

6. பொல்லனறுவையின் பெருமை எப்போழுது மங்கியது?

7. பொல்லனறுவை இராசதானியாக இருந்தது என்பதற்கு என்ன சான்றுகள் உள?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினான்காம் பாடம்

# நிர்வாகமுறையும் மக்களின் வாழ்க்கையும்

முதலாம் பராக்கிரமபாகு நிர்வாக முறையை முன் இருந்ததிலும் பார்க்கத் திருத்தி அமைத்து வைத்தான். அரசசபையில் அரசிளங் குமரனை யும், சேனாதிபதியையும் பிரதான அதிகாரிகளையும் மாகாணங்களுக்குரிய தேசாதிபதிகளையும் முக்கிய வியாபாரிகளையும் அங்கத்தவர்களாக்கினான். விவசாயமே மக்களின் பிரதான தொழிலாகும். வியாபாரிகள் காசை அல்லது பொருட்களை வரிக்குப் பதிலாகக் கொடுத்தனர். இறக்கும் ஒருவருடைய அசைவுள்ள ஆதனங்களில் மூன்றிலொரு பகுதி அரசனுக்குரியதாயிற்று.

அக்காலத்தில் இந்தியாவில் கஜ ரத துரக பதாதிகள் கொண்ட சேனையே சண்டைகளைச் செய்தது. ஆனால், இலங்கை காடடர்ந்த இடமாய் இருந்தபடியால் அப்படைகளுக்குச் செல்வது கஷ்டமாயிருந்தது. அதனால் மாந்தோட்டத்திலிருந்து மாகமாவுக்குச் செல்லும் ஒரு பாதையே காணப் பட்டது. அதன்வழியே காலாட்படைகள் சென் றன. சேனாபதிகள் பல்லக்குகளிற் சென்றனர். அவர்கள் பாவித்த ஆயுதங்கள் வாள், ஈட்டி முதலி யனவாம். வில்வித்தைக்காரர் நகரங்களையும் அரண் களையும் பாதுகாப்பதற்கு வேண்டிய உதவிபுரிந் தனர். சிங்களப் போர்வீரர்களும் தென்னிந்தியப் போர்வீரர்களும் சேர்ந்த சேனைகள் சண்டை செய்தன. நகரங்களினுடைய பாதுகாப்புக்காக அகழிகளும் மதில்களும் கட்டப்பட்டன. சண் டைகள் அடிக்கடி நடைபெற்றபோதிலும் விவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயம் விருத்தியடைந்தது. முதலாம் விஜய பாகுவும் பெரியபராக்கிரமபாகுவும் குளங்களையும் கால்வாய்களையும் வெட்டி உதவிபுரிந்தனர். பராக் கிரம சமுத்திரம் விவசாய விருத்திக்குப் பெருந் துணையா யிருந்தது.

சோழமன்னரின் ஆளுகைக் காலத்தில் புத்த சமயம் குன்றியது. ஆனல், சிங்கள அரசர்கள் அதன் வளர்ச்சிக்கு உதவிபுரிந்தனர். கீர்த்தி ஸ்ரீமேகன் காலத்திற் கொண்டுவரப்பட்ட தந்த தாதுவுக்கு முதலாம் விஜயபாகுவால் கோயில் கட்டப்பட்டது. இந்துசமயம் சோழமன்னர்களின் காலத்தும் அவர்களின் பின்னும் நன்னிலை யடைந் தது. சாதிக் கட்டுப்பாட்டையும் இந்து சமயத் தவர்களே அதிகமாகக் கவனித்தார்கள்.

பொல்லனறுவையிலிருந்து அரசர்கள் ஆண்ட காலத்தில் ஓவியக்கலையும் சிறந்துவிளங்கியது. பராக் கிரமபாகு கட்டிய விகாரைகளில் 'இலங்கதிலகை' விகாரையும், 'யத்தவனராம' விகாரையுஞ் சிறந் தனவாம். பொல்லனறுவையிற் காணப்படும் சிவா லயத்திற் சோழதேசத்து ஓவியச் சிற்பக் கலைகளைத் தழுவிய வேலைப்பாடுகளிருப்பதைக் காணலாம். அக்காலத்திற் காணப்பட்ட கற்சிலைகளிற் பொல்ல னறுவையிற் காணப்படும் அகஸ்தியருடைய கற் சிலை சிறந்ததாக விளங்குகின்றது.

## வினக்கள்

1. மக்களின் பிரதான தொழிலென்ன?
2. அரசசபையின் முக்கிய அங்கத்தவர்கள் யாவர்?
3. இலங்கையில் கஜ ரத துரக பதாதிகள் சண்டை செய் வதற்கு என்ன கஷ்டங்க ளிருந்தன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காலாட் படைகள் எவ்வழியே சென்றன?

5. சண்டையில் என்ன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன?

6. நகரத்தின் பாதுகாப்புக்காக என்ன கட்டப்பட்டன?

7. எந்த அரசர்கள் விவசாயத்தை விருத்திசெய்தனர்?

8. புத்தசமயம் குன்றியதற்குக் காரணமென்ன?

9. தந்ததாதுவை வைத்து எவ்வரசன் கோயில் கட்டினன்?

10. பொல்லனறுவை அரசர் காலத்தில் என்ன சிறந்து விளங்கியது?

11. பொல்லனறுவையிற் காணப்படும் சிவாலயத்தில் யாதைக் காணலாம்?

12. அக்காலத்திலுள்ள அரசர்கள் மக்களுக்காக என்ன நன்மைகள் செய்தார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினைந்தாம் பாடம்

# பிற்காலச் சிங்கள அரசர்களும் சிங்கள அரசின் வீழ்ச்சியும்

மூன்றும் விஜயபாகுவும் (கி. பி. 1232—1236) எட்டாம் பராக்கிரமபாகுவும் (1484—1509) பிற்கால சிங்கள அரசர்களுள் சிறந்தவர்களாவர். இக்காலத்தில் வடஇலங்கையில் தமிழ் இராச்சியம் பலமடைந்திருந்தபடியால் சிங்கள அரசர்கள் பொலன்னறுவையை விட்டுத் தென்மேற்குப் பாகத்தில் வசதியான இடங்களை இராசதானியாக்கினர். அவர்களாற் தமிழ்இராச்சியத்தை அடக்கவோ அல்லது பாண்டிநாட்டிலும், விஜயநகரத்திலுமிருந்து வந்த சேனைகளை எதிர்க்கவோ முடியவில்லை. அவர்கள் தங்கள் வருமானத்தைக் கூட்டும்பொருட்டுக் கறுவா வியாபாரத்தை விருத்திசெய்தனர். அதற்குத் தகுந்த இடம் கோட்டை என்றெண்ணி 15-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் அதை இராசதானியாக்கினர்.

ஜதவர்மவீரபாண்டியன், இலங்கையிலிருந்த இரு அரசர்களில் ஒருவனைக் கொன்று அவனுடைய சேனையையும் பொக்கிஷங்களையும் கவர்ந்து தன் மீன்கொடியைத் திருகோணமலையில் நாட்டி மற்ற அரசனிடமிருந்து திறையையும் அறவிட்டான். பின்பு மறவர்மகுலசேகர பாண்டியன் (கி. பி. 1270—1310) இலங்கை முழுவதையும் தனது ஆளுகைக்குக்கீழ் கொண்டுவந்தான். சிறிது காலத்துக்குள் பாண்டிய அரசரிருவருக்குள் கலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட சேரநாட்டு அரசனுன குலசேகரன் பாண்டி நாட்டையும் சோழநாட்டையும் 1315-ல் கைப்பற்றினன். அதோடு பாண்டிஇராச்சியம் நிலைகுலைந்தது. அக்காலத்திலிருந்து கி. பி. 1565 வரையும் விஜய நகர இராச்சியம் பிரபலமாயிருந்தது. இவர்களுட் சிறந்தவன் இரண்டாம் தேவராசன் (1421—1448) ஆவான். இவன் கி. பி. 1438-ல் இலங்கைக்குப் படையெடுத்து வந்தான். இந்தியாவில் முஸ்லீங்களுடைய தொந்தரவினுல் இலங்கையிலுள்ள விஷயங்களிற் தலையிட முடியாமலிருந்தது.

தமிழ் இராச்சியம் தற்போதுள்ள வடமாகாணத்தின் எல்லைக்குட்பட்டதென்று கூறலாம். அதனுடைய தலைநகர் சிங்கைநகர் என்பர். இது வெகு காலமாகச் சுதந்திர நாடாகவிருந்தது. ஆனுல், ஆரும் புவனேகபாகுவின் காலத்தில் திறை கொடுத்து வந்தது. அக்காலத்தில் தற்போதுள்ள யாழ்ப்பாணமே தலைநகரமா யிருந்தது.

அக்காலத்திற் சிங்கள அரசர்கள் யப்பாகுவா, குருநாகல், கம்பளை, றைகமா, கோட்டை முதலிய இடங்களைத் தலைநகரமாக்கினர். தங்கள் பாதுகாப்புக்காக இவர்கள் அவ்விடங்களை நாடினர்போலத் தெரிகிறது. கி. பி. 1244-ல் மலாய சமஸ்தானத்துக் கரசனுன சந்திரபானு என்னும் புத்தவரசன் இலங்கைமீது படையெடுத்து வந்தான். இலங்கையிலுள்ள அற்புதமான ஒரு புத்த விக்கிரகத்தை அபகரிப்பதே அவனுடைய நோக்கமாகும். இலங்கைக்கு அரசனுயிருந்த இரண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமபாகு அவனுடைய சேனையைப் பின்வாங்கச்செய்ய, அவன் இந்தியாவிலிருந்து ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு மறுபடியும் வந்தபொழுது தோற்கடிக்கப்பட்டான்.

ஆறுவது பராக்கிரமபாகு (கி. பி. 1412—1474) இக்காலத்து அரசருட் சிறந்தவன். தன்னோடு பகைவரான அரசரை வென்றான். மலைநாடு, வன்னி, யாழ்ப்பாணம் இவனது ஆணையை ஏற்றுக் கொள்ளவில்லை. மலைநாட்டிலும் வன்னியிலும் வெற்றிகொண்டான். 200 ஆண்டுகளாகத் தனியரசாயிருந்துவந்த யாழ்ப்பாணத்தை அடக்க அவனால் முடியவில்லை. ஆகையால் தனது வளர்ப்பு மகனான சப்புமால் குமரய்யா என்னுமொரு இந்திய அரசிளங் குமரனை யாழ்ப்பாண இராச்சியத்தோடு போர்புரியுமாறு அனுப்பினான். 1450-ல் இவன் போருக்குக் கிளம்பித் தோற்கடிக்கப்பட்டான். இரண்டாம்முறை செய்த போரில் வெற்றிபெற்று யாழ்ப்பாணத்துக்குச் சிறிது காலம் அரசனாயிருந்தான். இவனாற் தோற்கடிக்கப்பட்ட தமிழரசனின் மகன் பரராசசேகரன் (கி. பி. 1478—1519) யாழ்ப்பாண இராச்சியத்தை இவனிடமிருந்து கைப்பற்றி அரசாண்டான்.

இக்காலத்தில் கண்டியை விக்கிரமபாகு அரசாண்டான். கோட்டையை ஆறும் புவனேகபாகு அரசாண்டான். அவனின் பின் எட்டாம் பராக்கிரமபாகு (கி. பி. 1484 — 1509) கோட்டைக்கு அரசனானான். ஆனால் சிங்களராதிக்கம் பலமிழந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொண்டுபோனது. இக்காலத்திற்றான் ஐரோப்பாவி லுள்ள போத்துக்கீசர் என்ற சாதியார் கரை யோரப் பகுதிகளைக் கைப்பற்ற முயன்றனர்.**

## வினுக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்றபதங்கள் வைத்து எழுதுக.

   (i) வடஇலங்கையிற் ——— பலமடைந்திருந்தபடி யால், சிங்கள அரசர்கள் ——— விட்டுத் தென் மேற்குப் பாகத்திற்குச் சென்றனர். அங்கே அவர் கள் ——— வியாபாரத்தை விருத்தி செய்தனர்.

   (ii) ஜனதர்மவீரபாண்டியன் தன் ——— திருகோண மலையில் நாட்டினன். சிங்கள அரசனிடமிருந்து ——— அறவிட்டான். ——— பாண்டியன் இலங்கை முழுவதையும் தனது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தான்.

   (iii) தமிழ் இராச்சியம் தற்போதுள்ள ——— எல்லைக் குட்பட்ட தென்று கூறலாம். அதனுடைய தலை நகர் ——— இது வெகுகாலமாக ——— நாடாக இருந்தது.

2. சிங்கள அரசர்கள் பொல்லனறுவை இராசதானியிலிருந்து விலகியதற்குக் காரணமென்ன?

3. அக்காலத்திலிருந்த தமிழ் இராச்சியத்தைப்பற்றி விபரித்து எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4, சந்திரபானு என்பவன் யார்? அவன் இலங்கைக்கு வர வேண்டிய காரணமென்ன?

5. ஆறுவது பராக்கிரமபாகு செய்த முயற்சிகள் யாவை?

6. பரராசசேகரனைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சரித்திரம்

## முதலாம் பாடம்

### கற்கால மனிதன்

மனிதன் உலகத்திற் தோன்றி வாழ்ந்த கதையே சரித்திர மெனப்படும். ஆதிகாலந்தொட்டு இன்றுவரையும் எவ்வண்ணம் நாகரிகம் படிப்படியாக முதிர்ச்சி யடைந்தது என்பதைப் பற்றியும், மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றியும் அறிதல் வேண்டும். சரித்திர ஆராய்ச்சிக் கப்பாற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றித் திடமாக ஒன்றுங் கூறமுடியாது. காட்டு மிருகங்களைப்போல மனிதனும் உணவு தேடி அங்குமிங்கும் அலைந்திருக்கவேண்டும். மரப் பொந்துகளிலும் குகைகளிலும் வசித்தான். அவன் மிருகங்களைக் கொன்று அவைகளின் மாமிசத்தைச் சாப்பிட்டதுமன்றி மிருகத்தின் தோலையும் இலைகளையும் அணிந்து கொண்டான்: காட்டு மிருகங்களுக்குப்பயந்து காலத்தைக் கழித்தான். அவர்கள் ஒருவரோடொருவர் பேசத் தெரியாத தன்மையினுல் சைகைகள்மூலம் தங்கள் எண்ணங்களை வெளியிட்டனர்; காலஞ்செல்ல மிருகங்களினின்று தங்களைக் காப்பாற்றுவதற்கும் தங்களுடைய மற்றும் உபயோகத்திற்கும் தேவையான கோடரி, கத்தி முதலிய ஆயுதங்களைச் செய்யப் பழகிக் கொண்டனர். அவர்கள் கரடு முரடான கற்களை ஆயுதங்களாகப் பாவித்தனர். இப்புராதன காலமே பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்காலம் எனப்படும். அக்காலத்தில் மனிதன் தன் யுக்தியைக்கொண்டு நெருப்பை உண்டாக்க அறிந்து கொண்டான். இரு கற்களைக்கொண்டோ அல்லது இரு தடிகளைக்கொண்டோ ஒன்றேடொன்றை உரோஞ்சி நெருப்பை உண்டாக்க அறிந்திருக்க வேண்டும். இது புராதன மனிதனுற் கண்டு பிடிக்கப்பட்ட விசேஷ காரியமாகும். குளிரிலிருந்து தங்களைக் காப்பாற்றவும், மிருகங்களைப் பயமுறுத்தவும் மாமிசத்தை நெருப்பில் வாட்டிச் சாப்பிடவும் அது மிகவும் உதவியா யிருந்தது. ஒவ்வொரு பழைய மார்க்கத்திலும், தீயைக் கண்டு பிடித்த பெறுபேற்றைப் பற்றிப் பல கட்டுக்கதைக ளுண்டு. இதை முதற் கண்டுபிடித்த மனிதன் மனுஷ வர்க்கத்துக்குப் பெரும்நன்மை செய்தவனெனக் கருதப்படுகின்றான். தீயைத் தெய்வமென்று பழைய மனிதன் வணங்கினுன்.

பல ஆண்டுகள் செல்ல மனிதன் கரடு முரடான கற்களை அழுத்தமாக்கிக் கத்தி, வாள் முதலிய ஆயுதங்களைச் செய்து உபயோகித்தான். முன்னிருந்தோரிலும் பார்க்க இக்காலத்தி லுள்ளவர்கள் சீர்திருத்த முடையவர்களாகக் காணப்பட்டார்கள். இது புதிய கற்காலம் எனப்படும். புதிய கற்காலத்திலுள்ள மனிதர், இறந்தவர்களுக்கு ஞாபகச் சின்னமாகக் கற்றூண்களை நாட்டினர். காலஞ்செல்ல மனிதன் செம்பினுற் கூரிய ஆயுதங்களைச் செய்ய அறிந்துகொண்டான். செம்பினுற் செய்யப்பட்ட ஆயுதங்களைக்கொண்டு, வைரமானவற்றை வெட்ட முடியாமலிருந்தபடியால், செம்பையும் தகரத்தையும் கலந்துருக்கி வெண்கலமென்னும் உலோகத்தைக் கண்டுபிடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக்கொண்டு பலமான ஆயுதங்களைச் செய்தான். அது வெண்கல காலம் என்று சொல்லப்படும்.

மனிதன் நாகரிகமற்ற நிலையிலிருந்து சிறிது நாகரிகமடையத் தனது அபிப்பிராயங்களைச் சொற்கள்மூலம் வெளியிடவும் முதன்முதல் சித்திரவேலைகளைச் செய்யவும் தெண்டித்தான். ஈட்டிகளின் முனைகளிற் சித்திரவேலைகளையும் மிருகங்களின் உருவம்போன்ற கத்திப் பிடிகளையுஞ் செய்தான். பிரான்சு, ஸ்பானிய தேசங்களிலுள்ள குகைகளிற் காணப்படும் சித்திரவேலைகள் ஏறக்குறைய 50,000 வருஷங்களுக்கு முன்னிருந்த மனிதராற் செய்யப்பட்டிருக்கக்கூடும் என்பர். தாங்கள் வணங்கிய தெய்வங்களின் உருவத்தை உண்டாக்கினர். சூரியன், சந்திரன், மழை என்பவைகளின் உதவியைப் பெறுவதற்காக மிருகங்களைப் பலியிட்டனர். இறந்தவர்களின் ஆவிகளுக்குப் பயந்து அவைகளுக்கும் பலியிட்டனர்.

பல ஆண்டுகள் செல்ல வேட்டையாடுபவர்களாயும், பின்பு மந்தை மேய்ப்பவர்களாயும் முயற்சிசெய்யத் தொடங்கினர். அப்பால் பயிரிட்டு உணவுப் பொருள்களைப் பெற்றனர். பின்பு பயிரிடும் இடங்களிற் குடியேறி வீடுகளைக் கட்டி வாழத் தொடங்கினர்.

## வினாக்கள்

1. மேல்வரும் வசனங்களில் கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

(i) புராதன மனிதன் ———, ——— வசித்தான். மிருகங்களின் ——— சாப்பிட்டு, ———, ——— அணிந்துகொண்டான். ——— பாவித்தான். இப் புராதன காலமே ——— எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) புராதன மனிதனுல் முதன்முதல் கண்டுபிடிக்கப் பட்ட விசேட காரியம். ———.

(iii) கரடுமுரடான கற்களை அழுத்தமாக்கி —— —— முதலிய ஆயுதங்களைச்செய்து பாவித்தகாலம் —— எனப்படும்.

(iv) ——, ——, —— என்பவைகளின் உதவியைப் பெறுவதற்காக —— பலியிட்டனர்.

(v) பல ஆண்டுகள் செல்ல ——, —— முயற்சி செய் யத் தொடங்கினர்.

2. பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கு முரிய வித்தியாசங்கள் யாவை?

3. வெண்கலக்காலத்தில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டன?

4. புராதன மனிதன் எவ்வண்ணம் நாகரிக மடைந்தான் என்பதை விளக்கிக் காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பாடம்

## நதிதீரங்களின் நாகரிகம்

மக்கள் தங்கள் மந்தைகளை மேய்ப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் வசதியான இடங்களிற் குடியேறினர். உணவுப் பொருட்களை விளைவிப்பதற்கு நதிகளின் பள்ளத்தாக்குகள் செழிப்புள்ளனவாகக் காணப்பட்டமையால் அவ்விடங்களில் வசித்தனர். நைல்நதிப் பள்ளத்தாக்கும் யூபரேத்திசு, தைகிரிசு நதிகளின் பள்ளத்தாக்கும், சிந்து கங்கைச் சமவெளியும், குவாங்கோச் சமவெளியும் புராதன கால நாகரிகத்துக்கு இருப்பிடமாயின

நைல்நதி சகாரா வனாந்தரத்தினூடாகப் பாய்ந்து மத்தித்தரைக் கடலுள் வீழ்கின்றது. ஆனால், அது வருடந்தோறும் மேவிப் பாய்ந்து இரு கரைகளிலுமுள்ள பரந்த நிலங்களில் வண்டல்களைச் சேர்த்துவிடுகிறது. நைல்நதி பெருகுகின்ற நாடு அதிகம் செழிப்படைகிறது. ஆகையால் எகிப்திய நாடு பண்டைக்கால நாகரிகத்தில் மேன்மை பொருந்திய தொன்றாகும். ஏறக்குறைய கி. மு.4000 வருஷங்களுக்கு முன்பே எகிப்திய நாகரிகம் உன்னத நிலையை அடைந்திருந்தது.

ஆதியில் மக்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சித்திர ரூபமான லிபிகள் மூலம் வெளிப்படுத்தினர். ஒவ்வொரு சித்திரமும் ஒரு வசனத்தையோ அல்லது ஒரு பதத்தையோ குறிக்கும். பின்னர் எழுத்துக்களைக் கண்டுபிடித்தனர். எழுத்துக்களைக் கொண்டு சொற்களை உண்டாக்கும் திறமை எகிப்தியரிடமிருந்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அக்காலத்தில் எகிப்து தேசத்திலிருந்த குருமார்கள் லிபிகள்மூலம் பல விஷயங்களைப் பற்றி எழுதியுள்ளார்கள். இதைவிட எகிப்தியர் உலோகங்களிலிருந்து ஆயுதங்களைச் செய்யவும் தெரிந்து கொண்டனர். உலகத்தின் மற்றப் பாகங்களிற் கல்லினாற் செய்த ஆயுதங்களைப் பாவித்த காலத்தில் எகிப்தியர் வெண்கலத்தினாற் செய்த ஆயுதங்களை உபயோகித்தனர். அவ்வாயுதங்கள் கட்டிடங்களைக் கட்ட மிகவும் உதவியாயிருந்தன. கட்டிடங்கள் கட்டுவதில் எகிப்தியர் அதிக முன்னேற்றமடைந்திருந்தனர். அவர்கள் கல்லறைகளையும் இறந்த அரசரைப் புதைப்பதற்காகப் பிரமீதுக்களெனப்படும் கூர்க்கோபுரங்களையுங் கட்டினார்கள். உலோகங்களை உபயோகிக்கப் பழகியதின் பின் கோயில்களையும், அரண்மனைகளையுங் கட்டவும் அவைகளிற்சித்திரங்கள் செதுக்கவும் அவர்களுக்குச் சுலபமாயிருந்தது. எகிப்தியர் அதிகம் சமய பக்தியுடையவர்களாயிருந்தனர். மனிதன் இறந்தபின் அவனது ஆவி இவ்வுலகில் செய்த நன்மை தீமைக்குத் தக்கபடி ஒரு தெய்வத்தின் தீர்ப்பைப் பெறுகிறதென்று எகிப்தியர் நம்பினர். அந்த ஆவி திரும்பவும் அந்த உடலைத் தேடிவருமென்று நினைத்து உடலில் வாசனைத் திரவியங்களைப் பூசி, அது அழிந்துபோகா வண்ணம் கல்லறைகளிற் பாதுகாத்து வைத்தனர்.

நைல்நதிக் கரைகளிலுள்ள பப்பைரஸ் என்ற ஒரு செடியிலிருந்து அழுத்தமான காகிதமுண்டாக்கி அதில் எழுதினர். இச்செடியின் பெயரிலிருந்தே பேப்பர் (காயிதம்) என்ற சொல் உண்டானது. எகிப்தியர் சிறந்த கணித நிபுணர்கள். ஒரு வருஷத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

365 நாட்களாகப் பிரித்தனர். சூரியனைக் கொண்டு நேரத்தைக் கணக்கிடும் மணிக்கூட்டையும் அவர்களே கண்டுபிடித்தனர். நெசவுத்தொழிலிலும், மண் பாண்டங்கள் செய்வதிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப்பற்றிய சம்ப




நதி தீரங்களின் நாகரீகம்

வங்கள், கல்லறைகளிற் காணப்படும் சித்திரங்களிலிருந்து அறியத் தக்கதாக இருக்கிறது. எகிப்தியர் வாணிபத்திலும் முன்னேறியிருந்தனர். போர் செய்வதிலும் திறமை வாய்ந்தவர்கள். எகிப்திய சாம்ராச்சியம் செங்கடலுக் கண்மையிலுள்ள நாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுங் கொண்டுள்ளது. 15-ம் நூற்றாண்டு வரையும் அவ்விராச்சியத்தின் அதிகாரம் நிலவிக்கொண்டிருந்தது. பார்சியாக் குடாக்கடலுள் விழும் ஆறுகளின் பள்ளத்தாக்கு, நாகரிகத்தில் முன்னேற, இது குன்றியது.

யூபரேத்திசு, தைகிரிசுநதிகளின் பள்ளத்தாக்கில் பபிலோனிய நாகரிகம் திகழ்ந்தது. இது யூபரேத்திசு நதிக்கரையிலுள்ள பபிலோனியா என்ற பட்டணத்தின் பெயரால் அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் மொசப்பொத்தேமியா என்ற பெயரைப் பெற்றது. தற்காலத்தில் ஈராக் என வழங்கிவருகிறது. ஆறுகளுக்கிடையிலுள்ள தேசம் என்பதே மொசப்பொத்தேமியா என்பதன் பொருளாகும். இப்பிரதேசத்தில் முதல் குடியேறியவர்கள் சுமேரியர் எனப்படுவர். இலங்கைத் தமிழரின் மூதாதைகள் இவர்களெனச் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சுமேரியர் ஏறக்குறைய கி. மு. 3000 வருஷங்களுக்கு முன் அவ்விடத்தில் வசித்தனர். இவர்கள் வாய்க்கால்களை வெட்டி விவசாயஞ் செய்தனர். அவர்கள் உலோகங்களினாற் செய்த ஆயுதங்களைப் பாவித்தபடியால் பெரிய கட்டிடங்களைக் கட்டத் தக்கதாக இருந்தது. எழுதும் வித்தையையும் தெரிந்து கொண்டனர். களிமண் தட்டைகள்மீது ஓர் புல் நெட்டையினால் எழுதினர். கற்கள் கிடையாதபடியால் மண் கட்டியினால் கோயில்களையும் அரண்மனைகளையும் கட்டினர். நாளொன்றை 24 மணித்தியாலங்களாகவும், மணித்தியாலமொன்றை 60 நிமிஷங்களாகவும் முதன் முதல் பிரித்தவர்கள் இவர்களாகும். இவர்கள் சிறந்த அரசியல் முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் நிறுவினர். அவர்களுடைய அரசர்களிற் சிறந்த கமுரபி என்பவனால் உண்டாக்கப்பட்ட சட்டங்கள் மிகப்பழையனவாம். இவன் கி. மு. 2100 வருடங்களுக்கு முன் அத்தேசத்தை ஆண்டான். விவசாயத்தைவிட வாணிபத்தையும், நெசவுத் தொழிலையும் விருத்திசெய்தனர். இப்பிரதேசத்தில் இன்னுமொரு நாகரிகம் தோன்றியது. அது வடக்குப் பாகத்திலுள்ள அஸீரியா என்ற நாட்டின் வீரர்களின் நாகரிகமாகும். அவர்கள் வீரம்வாய்ந்தவர்கள். இரும்பு ஆயுதங்களைப் பாவித்தனர். அவர்கள் அயல்நாடுகளைக் கைப்பற்றினர். சித்திரம், ஓவியம், இலக்கியம் அங்கே மிளிர்ந்தன. கி. மு. 606-ல் சால்டியர் என்ற சாதியார் அஸீரியாவின் தலைநகரைக் கைப்பற்றினர். இவர் காலத்தின் பின்பும் பபிலோனியா முன்னேறியது. அங்கே காணப்பட்ட தொங்குதோட்டங்கள் மிக நூதனமானவை. சால்டியர் வானசாஸ்திரத்தில் நிபுணர்களாக விளங்கினர். கி. மு. 539-ல் பாரசீக அரசனான சைரஸ் என்பவன் பபிலோனியாவைக் கைப்பற்றினான்.

## வினாக்கள்

1. உலகப்படமொன்று வரைந்து புராதன நாகரிகத்துக்கு இருப்பிடமாயுள்ள நதி தீரங்களைக் குறிப்பிடுக.

2. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

   (i) பழைய காலத்தில் ——— மக்கள் நதிகளின் பள்ளத் தாக்குகளிற் குடியேறினர். (செழிப்பாயிருந்தபடியால், வசதியாயிருந்தபடியால்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) கி. மு. ——— வருஷங்களுக்கு முன்பே எகிப்திய நாகரிகம் உன்னத நிலையை அடைந்திருந்தது. (4000, 400).

(iii) எகிப்து தேசத்திலிருந்த ——— லிபிகள் மூலம் பல விஷயங்களைப்பற்றி எழுதியுள்ளார்கள். (சனங்கள், குருமார்கள்).

(iv) எகிப்தியர் ———செய்த ஆயுதங்களைப் பாவித்தனர். (கல்லினல், வெண்கலத்திஞல்).

(v) பிரமிதுக்கள் ——— கட்டப்பட்டன. (இறந்த அரசர்களைப் புதைப்பதற்காக, அழகுக்காக).

(vi) ———, ———, செய்வதிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். (நெசவுத் தொழில். பயிரிடுந் தொழில், மட்பாண்டஞ் செய்யுந் தொழில்)

(vii) பபிலோனியா பிற்காலத்தில் ——— என்றும் இக்காலத்தில் ——— என்றும் அழைக்கப்படுகிறது (மொசப்பொத்தேமியா, சீரியா, ஈராக், ஈரான்).

3. பழைய காலத்தில் நாகரிகமடைந்த நாடுகள் யாவை?

4. எகிப்தியருடைய நாகரிகத்தின் சிறப்புகளென்ன?

5. பபிலோனியர் எவ்விஷயங்களில் முன்னேற்றமடைந்திருந்தனர்?

6. அஸீரியாவைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றும் பாடம்

# நதிதீரங்களின் நாகரிகம்

தொடர்ச்சி

பண்டைக்காலத்தில் நாகரிகமடைந்த மக்களுள் சீனரும் முன்னேற்ற மடைந்திருந்தனர். குவாங்கோச் சமவெளி புராதன சீனரின் நாகரிகத்திற்கு இருப்பிடமாயிருந்தது. விவசாயமே அவர்களுடைய முக்கிய தொழிலாகும். மண்ணிஞற் கட்டிய வீடுகளில் வசித்தனர். மூங்கில்போன்ற மரத்துண்டுகளில் எழுதிய புத்தகங்களிருந்தன. அச்சுவித்தை அவர்களிடமிருந்தே பரவியது என்று சொல்லலாம். திசையறி கருவியையும் அவர்களே கண்டுபிடித்தனர். பட்டு உற்பத்தி செய்யும் முறையையும் அவர்களே முதன்முதல் பழகிக்கொண்டனர். மருந்து வகைகளைப்பற்றி அறிந்திருந்தனர். கி. மு. 1400 வரையில் வெண்கலத்தின் உபயோகம் அவர்களுக்குத் தெரியும். கி. மு. 1000 வரையில் சீஞ பல சிறுநாடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் ஆளப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவரும் மேலான ஒரு அரசனுக்குத் திறைகொடுத்து ஆண்டனர்.

புராதன சீனருள் கொன்பியூசியஸ் புகழ் வாய்ந்தவர். அவர் ஒரு பெரும் ஞானி. இவருடைய காலத்தில் (கி. மு. 551—479) கிறீஸில் சோக்கிரதீசரும், இந்தியாவில் பௌத்தரும் வாழ்ந்தார்கள். கொன்பியூஸியஸ் இளமையிலே செவ்வனே கல்வி கற்ருர். இவர் இருபத்திரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் புராதன சீன நூல்களை ஆராய்ந்து வெளி யிட்டார். மக்கள் இவ்வுலகில் எப்படி வாழ வேண்டு மென்று போதித்தார். மக்கள் அரசனுக்குக் கீழ்ப் படிந்தும், பெற்றுரைக் கனம்பண்ணியும், அயல வர்களை ஆதரித்தும், சரியெனத் தோன்றியவை களைக் கடைப்பிடித்தும் வாழ வேண்டுமென்பதே இவருடைய முக்கிய போதனையாகும். மக்கள் எல் லோரிடத்தும் அன்புள்ளவர்களாயும் கல்வியறி வுள்ளவர்களாயுமிருக்க வேண்டுமென்று போதித் தார்.

பழைய நாகரிகம் மிளிர்ந்த இடங்களிற் சிந்து கங்கைச் சம வெளியும் ஒன்ருகும். கைபர் கணவாய் வழியாக இந்தியாவில் உட்புகுந்த மக்கள் சிந்து சம வெளியிற் குடியேறினர். அவர்கள் அங்கே வருவதற்கு முன் அப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நாகரிகத்தில் முன்னேறியவர்கள் என்பதற்குப் பல சான்றுகளுள. ஹரப்பா, மொகஞ்சதாரோ என்ற நகரங்கள் நாகரிகத்திற் சிறந்தனவாக அப்பகுதி களில் விளங்கின. வீடுகள், தெருக்கள் காணப்பட் டன. விவசாயத் தொழிலை நடத்திவந்தனர் சுகா தார முறையை அனுஷ்டித்து வாழ்ந்து வந்தனர். கைபர் கணவாய் வழியாய் வந்த ஆரியர் கிராம வாழ்க்கையை விரும்பினர். இடையராயிருந்த அவர் கள் இவ்விடங்களிற் குடியேறியபின் விவசாயிக ளாயினர். உலோகங்களினுற் செய்த பொருட்களை யும், மரத்தினுலும் மண்ணினுலுஞ் செய்த பொருட் களையும் உபயோகித்தனர். வர்த்தகமும் உன்னத நிலையிலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாலாம் பாடம்

# ஹீப்ருக்கள்

பலஸ்தீனு நாட்டில் கி. மு. 1400 வருடங்களுக்கு முன்பே நாகரிகந் தோன்றியது. பொதுவாகக் கனனைட்ஸ் என்றழைக்கப்பட்ட சாதியார் அவ்விடங்களிற் குடியேறினர். கி. மு. 1400 தொடக்கம் 1200 வரையும் அரேபியாப் பாலைநிலத்திலிருந்து ஹீப்ரு சாதியாரைச் சேர்ந்த ஒரு குழுவினர் பலஸ்தீனு நாட்டிற் குடியேறினர். அவர்களிற் சிலரை எகிப்தியர் கைதுசெய்தனர். வெகுகாலத்தின் பின் மோசஸ் என்பவரின் உதவியினுல் விடுதலையடையப்பெற்றுப் பலஸ்தீனுவுக்குள் புகுந்தனர். பல நூற்றுண்டுகளாகக் ஹீப்ருக்கள் அந்நாட்டில் ஆதியிற் குடியேறியவர்களோடு இடையருச் சண்டை புரிந்தனர். அவர்களால் ஒவ்வொரு நகரமும் கைப்பற்றப்பட்டது. அவர்கள் கூடாரங்களில் வாழ்ந்த வாழ்க்கையை அகற்றி கல்லினுற் கட்டிய வீடுகளில் வசித்தனர். அந்நாட்டுப் பூர்வமக்களை விவாகஞ் செய்து அவர்களுடன் கலந்து கொண்டனர். கி. மு. 1000 வரையில் அவர்கள் பலஸ்தீனுவில் நிரந்தர வாசிகளாயினர். பலஸ்தீனு எகிப்துக்கும் பபிலோனியாவுக்கும் இடையிலுள்ள செழிப்புள்ள நாடாகையால் அது வர்த்தகத்தை விருத்திசெய்வதற்கு வசதியாக இருந்தது. பிரதானமான வர்த்தகப் பாதைகளெல்லாம் அதனூடே செல்வதாயிற்று. தாவீது அரசனுடைய மகன் சொலமன் ஓர் வர்த்தக அரசிளங்குமரனுக விளங்கினுன். அவன் கடற் படைகளை நிறுவி வியாபாரக் கூட்டத்தினரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிடங்களுக் கனுப்பிச் செல்வத்தைப் பெருக்கினுன். அவனுடைய ஐசுவரியத்தின் காரணமாகப் பிறநாடுகள் நட்புப்பூண்டு இருந்தன.

வடக்கிலுள்ள அஸீரியா அதிகாரம் பெற்று எகிப்தியரோடு சண்டையிட்ட காலத்தில் இடையிலிருந்த இந்நாடு அதிக கஷ்டத்தை அனுபவித்தது. அஸீரியா பபிலோன் முதலிய வலிமை பெற்ற நாடுகளாற் தாக்கப்பட்டது. ஆனுல் பபிலோனியரால் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஹீப்ரூக்கள் கி. மு. 539-ல் சீரஸ் என்ற பலஸ்தீனு அரசனுல் விடுதலையாக்கப்பட்டனர். அவர்கள் எருசலேம் என்ற நகரத்தை தாபித்தனர். உரோமருடைய ஆதிக்கம் பெருத்தவுடன் இவர்களுடைய பலம் குன்றியது. அவர்களுடைய சமயக்கொள்கைகளும் கடவுளைப்பற்றிய அறிவும் சிறந்தனவாம். அவர்களுடைய சமய நூல்களைக் கொண்டுள்ள நூல் பழையேற்பாடு எனப்படும். இந்நூல் உலகத்திலுள்ள முதன்மைபெற்ற இலக்கியங்களில் ஒன்ருகும். இது ஹீப்ரூக்களிடம் கடவுளைப்பற்றிய கொள்கை வளர்ந்து வந்த வரலாற்றை விபரித்துக் கூறுகின்றது. காலஞ் செல்லச் செல்லக் கடவுளைப் பற்றி அவர்களுக்குப் பரந்த எண்ணம் உண்டானது. உலகம் முழுவதையும் உண்டாக்கியவர் கடவுள் என்றும் அவர் மக்களை நேசிக்கிற தந்தையென்றுங் கருதினர். கடவுள் ஒருவர் என்ற எண்ணம் இவர்களுக்கே முதன் முதல் உதயமாயிற்று. ஒழுக்கமும் பரிசுத்தமும் நிறைந்த வாழ்க்கையை வாழவேண்டுமென்றும், செய்த பாவங்களுக்குக் கடவுளிடம் மன்னிப்புப் பெறவேண்டுமென்றும் ஹீப்ரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானிகள் போதித்தனர். அந்த ஞானிகளுடைய போதனை உலக முன்னேற்றத்திற்கு மிகவுமுதவியா யிருந்தது.**

## வினுக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக:

(i) அரேபியாப் பாலைநிலத்திலிருந்து ——— சேர்ந்த ஒரு குழுவினர் பலஸ்தீன நாட்டிற் குடியேறினர்.

(ii) அவர்கள் ——— கட்டின வீடுகளில் வசித்தனர்.

(iii) பிரதான ——— அதனூடே செல்வதாயிற்று.

(iv) சொலமன் ——— அரசனுடைய மகன்.

(v) ஹீப்ருக்கள் ——— என்ற நகரத்தைத் தாபித்தனர்.

(vi) பழையேற்பாடு ——— நூலாகும்.

(vii) கடவுள் ஒருவர் என்ற எண்ணம் ——— உதயமாயிற்று.

2. ஹீப்ருக்கள் என்பவர்கள் யாவர்? எங்கே குடியேறினர்?

3. சொலமன் செய்த நன்மைகள் என்ன?

4. ஹீப்ருக்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் என்ன?

5. அவர்களின் சமயக் கொள்கைகள் சிறந்தனவென்பதற்கு காரணம் என்ன?

6. ஹீப்ருக்களைப் பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் பாடம்

## கிரேக்கர்

உலக நாகரிகத்திற்கு உதவியாயிருந்த புராதன மக்களுள் கிரேக்கர் சிறந்தவர்களாவர். இவர்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வியாபாரஞ் செய்யும் பொருட்டு வந்தனர். வசபனுடைய காலத்தில் இலங்கைக்கு வந்து வாசனைத் திரவியங்களையும் யானைகளையும் இரத்தினக் கற்களையும் வாங்கிச் சென்றனர். ஆரிய வகுப்பினரைச் சேர்ந்த ஒரு சாதியார். கி. மு. 2000 வருஷங்களுக்கு முன்பு கிறீஸ் நாட்டுக்குள் புகுந்தனர். இவர்களே கிரேக்கர் என்று சொல்லப்படும் சாதியார் ஆவர். இவர்கள் வெகு காலஞ் செல்லக் கடற்பிரயாணஞ் செய்யப் பழகியவுடன் சைபிரஸ், எகிப்து, ஸ்பானியா, பிரான்சு, இத்தாலி, சிசிலி முதலிய தேசங்களிற் குடியேறினர். இவ்வண்ணமாகக் குடியேறிய கிரேக்கர், சாதி அபிமானமும், பாஷை அபிமானமும், உயர்ந்த நோக்குமுடையவர்களாயுமிருந்தனர். கிரேக்க நகர இராச்சியங்களில் அதென்ஸ் முதன்மை பெற்று விளங்கியது. அவர்கள் படிப்படியாக ஜனநாயக ஆட்சியைத் தாபித்தனர். தற்கால ஜனநாயக ஆட்சிமுறையிலிருந்து அது எவ்வளவோ வித்தியாசமாயிருந்தது. சனங்கள் குறைவாயிருந்தபடியால் ஒரு மத்திய இடத்தில் எல்லோரும் கூடி ஒவ்வொரு விஷயத்திலும் பங்குபற்றித் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். அதென்ஸ் இவ்வண்ணமாக முன்னேறி வருங்காலத்தில் பாரசீய அரசர் கிறீசைக் கைப்பற்ற முயன்றனர். கி. மு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

492-ல் பாரசீயர் தோற்றுப்போய் மீளவும் 490-ல் மரதன் என்ற யுத்தத்தில் அதென்ஸாற் தோற்கடிக்கப்பட்டனர். 10 வருஷங்களின் பின்பு ஸ்பாற்ரு நகரிலுள்ளோர் பாரசீகராற் தேமோபைலா என்ற இடத்திற் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் கி. மு. 480-ல் அதென்ஸ் தேசத்தவர்கள் சலாமிஸ் என்ற கடற் சண்டையிற் பாரசீகரைத் தோற்கடித்தனர். அதென்ஸ், ஸ்பாற்ரு என்ற இரு




கிரேக்க நாகரீகம்

நகரங்களும் அரசியலை நடத்தும் முறையில் முன்னேறின. அதென்ஸ், ஜனநாயக முறையையும் ஸ்பாற்ரு மேல்மக்கள் ஆட்சிமுறையையும் தழுவின. கிறீஸிலுள்ள நகரங்கள் ஒன்றாகுதல் அத்தேசத்தில் அரசியல் ஒற்றுமையைக் கொண்டுவர முடியாமற் போனது. ஈற்றில் மசிடோனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்து அரசனுன பிலிப்பு என்பவன் கி. மு. 338-ல் கிறீஸ் முழுவதற்கும் அரசனுனன். பின்பு பிலிப்பினுடைய மகனுன பெரிய அலெக்சாந்தர் தந்தைசெய்த முயற்சியைப் பூர்த்தியாக்கினன்.

கிரேக்கர், ஓவியம், சிற்பம், கவித்திறமை, நாடகம், சாஸ்திரம், ஞானம் முதலிய துறைகளில் நிபுணர்களாகக் காணப்பட்டனர். அழகுவாய்ந்த தேவாலயங்களையும் வீடுகளையும் கற்சிலைகளையுங் கட்டினர். அக்கட்டிடங்களை பாழடைந்த நிலையில் இன்றுங் காணலாம். மற்றைய ஐரோப்பிய சாதியரும் அவர்களைப் பின்பற்றி வீடுகளைக் கட்டினர்.

ஹோமர் என்ற புலவர் எழுதிய 'இலியட்', 'ஒடிசி' என்ற காவியங்கள் இன்றும் உலகத்திற் சிறந்தவைகளாகக் கருதப்படுகின்றன. திரோய நகரத்துப் பாரிஸ் என்ற இளவரசன் கிரேக்க இளவரசி ஹெலன் என்பவளைக் கவர்ந்து தன் நகரத்திற்குக் கொண்டுபோய்விட்டான். கிரேக்க சிற்றரசர்கள் சேர்ந்து வந்து சண்டை செய்து வெற்றிபெற்ற கதையே "இலியட்" என்ற காவியத்திற் கூறப்பட்டிருக்கின்றது. திரோய் நகரப் போரை முடித்துக்கொண்டு, யூலிஸெஸ் என்பவன் கிறீசுக்கு திரும்பினன். மந்திரவித்தை தெரிந்த சேர்ஸே என்னும் மோகினி வாழ்ந்த தீவில் அவனுடைய போர்வீரர்களுக்கு நடந்த சம்பவத்தை "ஒடிசி" கூறுகின்றது.

அநேக சரித்திராசிரியர்கள் கிறீஸிலிருந்தனர். ஹெறடற்டஸ், தூசிடைடஸ் என்னும் சரித்திரப் பேரறிஞர்கள் கிறீஸிலுள்ளவர்களாவர். ஆகையால் கிரேக்கருடைய சரித்திரத்தை இன்றும் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியத்தக்கதாகவிருக்கிறது. கிரேக்கர் நான்கு வருடத்துக்கொருமுறை ஒலிம்பியா என்னுமிடத்தில் தேகாப்பியாசம் சம்பந்தமான விழாக்களைக் கொண்டாடினர். ஓட்டப் பந்தயம், ஆரம்பத்தில் நடைபெற்றது. பின்பு, பாய்தல், ஓடல், ஈட்டி எறிதல், மல்யுத்தம் ஆகியவையும் நடைபெற்றன. வெற்றி பெற்றோருக்கு 'ஒலிவ்' இலைகளாலாக்கப் பட்ட கிரீடமொன்று பரிசாகக் கொடுக்கப்பட்டது. ஏறக்குறைய கி. மு. 776-ல் இப்பந்தயம் தொடங்கி இருக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. இனிக் கி. மு. 3-ம் நூற்றாண்டில் ஆக்கிமெடிஸ் என்பவர் துலாஇயந்திரத்தின் உபயோகத்தை அறிந்து கொண்டார். இலங்கைப் படத்தை முதன் முதற் கீறியவர் தலமி என்ற கிரேக்க அறிஞராகும்.

கிரேக்கருள் பல ஞானிகளும் போர்வீரர்களும் சிறந்து விளங்கினர். கிரேக்க ஞானிகளுட் தலை சிறந்து விளங்கியவர் சோக்கிரதீஸ் என்ற ஞானியாகும். இவர் கி. மு. 400-ல் அதென்ஸில் இருந்தார். அவர் அதென்ஸ் தெருவீதிகளிலிருந்து அந் நகரவாசிகளுக்கு வாழ்க்கையின் பிரச்சினைகள் பலவற்றையும் தீர்ப்பதற்கு வழிகாட்டினர். மக்களிடையேயுள்ள தப்பிதமான கொள்கைகளை மக்கள் உணரத்தக்கதாக அவர்களுடன் ஆராய்வாகப் பேசி அவர்கள் அறியச் செய்தார். பழைய தெய்வங்களிற் சிறுவர் நம்பிக்கை இழக்கச் செய்கிறாரென்ற கிரேக்கத் தலைவர்கள் அவரை வெறுத்தனர். அவரது எழுபதாவது வயதில் அவரை விசாரணை செய்து, அவருக்கு மரண தண்டனை ஏற்படுத்தினார்கள். அவருடைய மாணுக்கரான பிளேட்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் அவருடைய போதனையைத் திரட்டி நூலாக எழுதினார். பின்பு மகா அலெக்சாந்தரின் குருவாகிய அரிஸ்டோட்டில் அவ்வேலையைச் செய்து முடித்தார். ஐரோப்பாவிலேற்பட்ட அறிவு வளர்ச்சிக்கு இவர்கள் எழுதிய நூல்களே அடிப்படையாக இருந்தன.

மசிடோனியாவுக்கு அரசனாயிருந்த பிலிப்பு என்பவனுடைய மகன் மகா அலெக்சாந்தர் பெரிய போர்வீரனும் சக்கரவர்த்தியுமாய் விளங்கினான். அக்காலத்தில் எகிப்து, பபிலோனியா, பாரசீகம், சின்ன ஆசியா, ஆப்கானிஸ்தானம், வடமேற்கு இந்தியா, பலுக்கிஸ்தானம், பாரசீகருடைய ஆதிக்கத்திலிருந்தன. இந்தப் பெரிய இராச்சியத்தைக் கைப்பற்ற அலெக்சாந்தர் விரும்பினார். சில வருடங்களில் இவைகளை வென்று பெரிய சக்கரவர்த்தியாக ஆண்டார். தான் சென்றவிடமெல்லாம் நகர சமஸ்தானங்களை ஸ்தாபித்தார். தனது முப்பத்திரண்டாவது வயதில் (கி. மு. 232) அவர் இறந்தார். அவரின் பின் அவருடைய சேனாதிபதிகள் அவ்விராச்சியத்தைப் பங்கிட்டு ஆண்டனர். இவர்கள் கிரேக்க நாகரிகத்தைப் பரப்பினர். இந்திய சிற்பம் வானசாஸ்திரம் கிரேக்க நூல்களைத் தழுவியிருக்கின்றன.

அலெக்சாந்தர் தாபித்த நகரங்களில் அலெக்சாந்திரியா மிகப்புகழ் வாய்ந்தது. அக்காலத்தில் வியாபாரப் பொருட்களெல்லாம் அலெக்சாந்திரியா வழியாக ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அதனால் அலெக்சாந்திரியா ஒரு பெரிய வர்த்தகத் தலமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினுக்கள்

1 மேல்வரும் வாக்கியங்களிற் கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

(i) கிரேக்கர் இலங்கைக்கு வந்து ——, ——, —— வாங்கிச் சென்றனர்.

(ii) கிரேக்கர் ——, ——, ——, ——, முதலிய இடங்களிற் குடியேறினர்.

(iii) —— என்ற நகர இராச்சியம் —— ஆட்சியை தாபித்தது.

(iv) கி. மு. 492-ல் —— யுத்தம் நடைபெற்றது.

(v) ——, ——, என்ற இரு நகரங்களும் அரசியலை நடத்தும் முறையில் முன்னேறின.

(vi) கி. மு. 338-ல் —— கிறீஸ் முழுவதற்கும் அரசனுஞன்.

(vii) ஹோமர் எழுதிய நூல்கள் ——, ——, என்பனவாம்.

(viii) —— நான்கு வருடங்களுக்கொருமுறை தேகாப்பியாசம் சம்பந்தமான விழாக்கள் கொண்டாடப்பட்டன.

(ix) சோக்கிரதீஸ் என்ற ஞானி வாழ்க்கையின் —— தீர்ப்பதற்கு வழிகாட்டினுர்.

(x) —— பெரிய சக்கரவர்த்தியாக விளங்கினுர்.

2. கிரேக்கர் என்ன துறைகளில் நிபுணர்களாகக் காணப்பட்டனர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
"இலியட்", "ஒடிசி", நகர சமஸ்தானங்கள், மரதன், ஒலிம்பியா.

4. மகா அலெக்சாந்தரைப்பற்றி என்ன படித்திருக்கிருய்?

5. சோக்கிரதீஸ் ஞானியார் மக்களுக்கு எவ்வண்ணம் அறிவை ஊட்டிஞர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரும் பாடம்

## உ ரோ ம ர்

இத்தாலி தேசத்திற் றைபர் என்றெரு நதி பாய்கின்றது. அதன் கரையிலே உரோமாபுரியுளது. உரோமியூலசு, றீமுஸ் என்ற இருவர் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் ஒரு பெண் ஓனுய் அவர்களை எடுத்து வளர்த்தது என்றும், உரோமியூலசு உரோமாபுரியை தாபித்தான் என்றும் கதை ஒன்றுண்டு.

கி. மு. 500 தொடங்கி ஏறக்குறைய 250 ஆண்டுகளாக அயலவர்களோடு சண்டையிட்டு உரோமர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். வட ஆபிரிக்காவிலுள்ள கார்தேஜ் என்ற இராச்சியத்தோடு இடைவிடாப் போர் புரிந்தனர். கார்தேஜின் தலைவனுன ஹனிபால் என்பவன் பெரும் சேனையுடன் புறப்பட்டு முதலில் ஸ்பானியாவைக் கைப்பற்றிக் கொண்டு பிரனீஸ் மலையைக் கடந்து அல்ப்ஸ் மலையையுங் கடந்தான். தன் சேனையுடன் இத்தாலி தேசத்திற்குட் புகுந்தான். அவன் ஆரம்பத்தில் பல வெற்றிகள் பெற்றான். அவனுக்குக் கார்தேஜ் வாசிகள் பொருமையினிமித்தம் படைத்துணை அனுப்பாதபடியால், ஈற்றில் அவன் இத்தாலியை விட்டுப் பின்வாங்க நேரிட்டது. கி. மு. 202-ல் சாமா என்ற சண்டையில் ஹனிபால் தோற்கடிக்கப்பட்டதுமன்றிக் கார்தேஜ் நகரமும் அழிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிசிலி, ஸ்பானியாவின் ஒரு பகுதி. கிறீஸ், சின்ன ஆசியா, சீரியா, பலஸ்தீனு, எகிப்து, வட ஆபிரிக்காவின் கடலோரப்பகுதி, ஹோல் (பிரான்சு), பிரித்தானியா முதலிய நாடுகளெல்லாம் ஒவ்வொன்ருக உரோமரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டன. ஆதியில் உரோமாபுரியிலுள்ள மேல் வகுப்பினரே அரசாங்கத்தை நடத்தினர். பின்பு கீழ்வகுப்பினரும் சேர்ந்து நடத்தினர். உரோம இராச்சியம் பரந்து கொண்டுபோக, சுல்லா என்ருேர் அரசியல் வீரன் மேல்மக்கள் மட்டும் கொண்டுள்ள மேற்சபை ஒன்றுக்கு அரசியலை நடத்தும் பொறுப்பை ஏற்படுத்தினுன். அவனிறந்ததன்பின் மேற்சபையின் ஆதிக்கத்தைக் குறைத்து விட்டு பொம்பே, யூலியஸ் சீசர் என்ற இரு வெற்றிகரமான சேனைத் தலைவர்கள் அரசாங்கத்தைத் தம்வசப்படுத்தினர். இருவருக்குமிடையில் ஒற்றுமையின்மை ஏற்பட்டதால் சண்டை மூண்டது. பொம்பே தோற்கடிக்கப்பட்டான். உரோமிலுள்ள சிலர் சதியாலோசனைசெய்து சீசரை கி. பி. 44-ல் கொன்றனர்.

சீசருக்குப் பின் அவனது மருமகனுன ஒகஸ்தசுசீசர் உரோம இராச்சியத்துக்குச் சக்கரவர்த்தியானுன். இவன் யூலியஸ் சீசரிலும் பார்க்க நுட்ப புத்தியும் இராச தந்திரமுமுடையவன். அரசாங்க நிர்வாக முறையைத் திருத்தியமைத்தான். தனது இராச்சியத்தின் எல்லாப் பாகங்களிலும் சமாதானத்தை நிலவச்செய்தான். இவனுடைய காலத்திற்ருன் கிரேக்கர் வியாபாரத்தின் பொருட்டு இந்தியாவுக்கு வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்க வியாபாரிகள் இலங்கைக்கும் வந்தனர். அக்காலத்தில் கிரேக்கர் உரோம இராச்சியத்தின் கீழிருந்தபடியால் உரோம நாணயங்களையே, வர்த்தகஞ் செய்த இடங்களாகிய இந்தியா இலங்கையிலும் பாவித்தனர். அவைகளிற் சில இன்றும் கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் உரோமருடைய நாகரிகம், போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் மூலமாகப் பரவியது.

உரோமர் மனத்திடமும், சிறந்த பொது அறிவும், ஆளும் வன்மையும் படைத்த வீரர். அவர்களிடமிருந்த வீரத்தன்மை, பகைவர்களை வெல்லவும், பரந்த உரோம இராச்சியத்தை செவ்வனே நடத்தவும் உதவியாயிருந்தது. அவர்கள் இராச்சியத்தின் எல்லாப் பாகங்களிலும் ஒழுங்கான அரசாங்கத்தையும் நீதிச்சட்டங்களையும், நிலைபெற்ற வாழ்க்கையையும் ஏற்படுத்தினர். அவர்கள் சென்றவிடங்களிற் சீர்திருத்தங்கள் பொலிந்து விளங்கின. தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன. நகரங்களையும் பிரமாண்டமான கட்டிடங்களையும், நாடகசாலைகளையும், மக்கள் கூடும் பொதுவிடங்களையும் தாபித்தனர். அவர்கள் ஆதிக்கத்தின் கீழமைந்த சாதியினர் எவரும் உரோமருடைய உடை, பாஷை பழக்கவழக்கங்கள், அரசியல் முறை, என்பவற்றைப் பின்பற்றினர். உரோமருடைய கட்டளைச் சட்டங்கள் நீதி செலுத்துவதற்குத் துணைபுரிந்தன. உரோம இராச்சியம் சீர்குலைந்த பின்னும் அவர்களுடைய கட்டளைச் சட்டங்கள் ஐரோப்பாவிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவின. ஒவ்வொருவனும் தான் உரோம பிரஜை என்ற அபிமானமுடையவனுயிருந்தான். இலத்தீன் மொழியே அவர்களுடைய பாஷையாகும். உரோம புரியிலிருக்கும் பாப்பரசரே இன்றைக்கும் கத்தோலிக்கத் திருச்சபைக்குத் தலைமை தாங்கியிருக்கின்றூர். இலங்கையில் உரோம — டச்சுக் கட்டளைச் சட்டங்களே நிலவி வருகின்றன. கி. பி. நான்காம், ஐந்தாம் நூற்றூண்டுகளில் கொன்ஸ்தாந்தைன், ஜஸ்டினியன் என்பவர்கள் உரோம இராச்சியம் நிலைகுலையாமற் பாதுகாத்தனர். உரோம நீதிச் சட்டங்களை ஆக்கியவன் ஜஸ்டினியனுவான். ஒல்லாந்தர் அச்சட்டங்களைப் பின்பற்றினர். ஜோன் மட்சூக்கர் என்ற ஒல்லாந்தத் தேசாதிபதியே இலங்கையில் அச்சட்டங்களைப் புகுத்திஞர்.

## வினுக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

(i) ——— உரோமாபுரியை தாபித்தான்.

(ii) கார்தேஜின் தலைவஞன ——— இத்தாலிக்குப் படையெடுத்துச் சென்று ——— என்ற சண்டையில் தோற்கடிக்கப்பட்டான். கார்தேஜ் நகரமும் ———

(iii) உரோமரின் ஆளுகைக்குட்பட்ட நாடுகள் ——— என்பனவாம்.

(iv) சுல்லா ——— அரசியலை நடத்தும் அதிகாரத்தைக் கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) ———, ———, என்ற சேனைத் தலைவர்கள் அரசாங்கத்தைத் தம் வசப்படுத்தினர்

(vi) கி. பி. 44-ல் ——— கொல்லப்பட்டார்.

(vii) ஓகஸ்தசுசீசர் ———, ——— தந்திரமுடையவன். இவனுடைய காலத்தில் ——— இலங்கைக்கு வந்தனர்.

(viii) இலங்கையில் ——— கட்டளைச் சட்டங்கள் பாவிக்கப்படுகின்றன.

2. ஐரோப்பாப் படமொன்று கீறி ஹனிபால் இத்தாலிக்குச் சென்ற பாதையையும், உரோமாபுரி, சிசிலி ஆகிய இடங்களையும் குறிப்பிடுக.

3 கிரேக்க வியாபாரிகள் இலங்கைக்கு வந்தனர் என்றதற்குச் சான்றுகள் யாவை?

4. உரோமரின் விசேஷ குணங்களென்ன?

5. உரோம நீதிச்சட்டங்களை ஆக்கியவன் யார்? யாருக்கு அவைகள் பயன்பட்டன.

6. இலங்கையில் அச்சட்டங்களைப் புகுத்தியவர் யார்?

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் பாடம்

## பாரசீகர்

கி. பி. ஐந்தாம் நூற்ருண்டு வரையில் கிரேக்கர் இலங்கைக்கு வருவதை நிறுத்திவிட, பாரசீகர் வியாபாரஞ் செய்வதற்காக இலங்கைக்கு வரத் தொடங்கினுர்கள். பாரசீகர் என்பவர்கள் ஈராக்குக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கும் இடையேயுள்ள நாட்டில் வசித்தனர். இவர்கள் ஆரிய வமிசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கி.மு. 500 வரையில் பாரசீகர் ஒரு பெரிய இராச்சியத்தை நிறுவினுர்கள். அது கிழக்கே இந்தியாவின் எல்லேவரைக்கும் தெற்கே நைல்நதி வரைக்கும் பரந்த இராச்சியமாகும். அவர்கள் ஐரோப்பாவிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலேநாட்ட எத்தனித்தனர். அது அஸீரியா இராச்சியத்திலும் பார்க்க விஸ்தீரணமுடையதாகக் காணப்பட்டது. அரசன் நீதி தவருமலும் அனுதாபங் காட்டியும் பிரஜைகளேக் காத்தும் வந்தான். அவ்விராச்சியத்திற் குட்பட்ட சாதியினர் எல்லோரும் அரசனுக்குத் திறையிறுத்ததோடு அரசனுடைய சேனேக்குப் போர் வீரரையும் திரட்டிக் கொடுத்தனர். அரசனுடைய சொல் சட்டமாகக் கவனிக்கப்பட்டது. பாரசீக சாம்ராச்சியம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணமும் ஒரு தேசாதிபதியால் ஆளப்பட்டது. அவர்கள் சிறந்த இலக்கியம், ஓவியம், சிற்பம் முதலியவைகளில் அதிக முன்னேற்றமடையாவிட்டாலும் அரசியலே நடத்துவதிற் திறமை வாய்ந்தவர்களாயிருந்தனர். வீதிகளே அமைத்தனர். வர்த்தகத்தை விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கவும் நாடுகளைக் கைப்பற்றவும் கடற்படையின் தேவையை யுணர்ந்து பெருங்கடற்படையை நிறுவினர். மேல்நாடுகளில் முதன் முதல் முறையான நாணயங்களை உண்டாக்கினவர்கள் பாரசீகர் என்றே சொல்லலாம். முதலாம் தேரியஸ் என்ற அரசன் பவுண் நாணயங்களைச் செய்து விடுத்தது மன்றி மாகாணங்களிற் தேசாதிபதிகள் வெள்ளி நாணயங்களைப் பாவிக்கவும் உத்தரவு அளித்தான். பண்டமாற்று முறை வழங்கிய அக்காலத்தில் நாணயங்களைப் பாவிக்கும் முறை சிறந்த திருத்தத்துக்கு அறிகுறியாகும்.

மகா அலெக்சாந்தர் பாரசீகரைத் தோற்கடிக்கும்வரை அவர்களின் ஆதிக்கம் குன்றவில்லை. கி. பி. ஐந்தாம் நூற்றூண்டில் மீண்டும் அவர்கள் பலமடைந்தனர். இக்காலத்திற்ருன் வியாபாரத்தின் பொருட்டு இலங்கைக்கு வந்தனர்.

பாரசீகரின் சமயம் சிறந்ததொன்ருகும். அவர்களுடைய சமயக் கொள்கைகளை யூதர் பின்பற்றியதால், பின்பு அக்கொள்கைகள் கிறீஸ்து மதத்தின் பகுதியாயின. இந்த மதத்தைப் போதித்தவர் ஸோரூஸ்டர் என்ற ஒரு சமயாசிரியராவர். தீமைக்கெதிரே எப்பொழுதும் சண்டையிடும் நன்மைக்காகிய ஒரு கடவுள் உண்டென்று போதித்தார். ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பின பக்கம் சேரலாம். ஆனல், மரணத்தின் பின் வரும் உலகத்தின் நியதி அவரவர் சேரும் பக்கத்தைப் பொறுத்தது என்று கூறினர். ஒருவராகுதல் இவ்வுலகிற் செய்யும் செய்கைகளுக்கேற்ற இறுதித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்ப்பிலிருந்து தப்பிக்கொள்ள முடியாதென வற்புறுத்தினர். இவர் கி. மு. 660 தொடக்கம் 583 வரையும் வாழ்ந்து வந்தார். இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பார்ஸி வகுப்பினர் அவருடைய போதனைகளையே இன்றும் பின்பற்றிவருகின்றனர்.**

## வினாக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்களை வைத்து எழுதுக.

   (i) பாரசீகர் ——— (ஆரிய, திராவிட) வம்மிசத்தைச் சேர்ந்தவர்கள்.

   (ii) பாரசீக சாம்ராச்சியம் ஒவ்வொரு ——— (சிறு பிரிவுகளாக, மாகாணங்களாக) பிரிக்கப்பட்டது.

   (iii) பாரசீகர் ஓவியம், சிற்பம், இலக்கியம் முதலிய கலைகளில் ——— (முன்னேற்றமடையவில்லை, முன்னேற்றமடைந்தனர்.)

   (iv) பவுண், வெள்ளி நாணயங்களை ——— (முதன் முதல், முன்னிருந்த அரசர்களைப் பின்பற்றி) பாவித்தனர்.

   (v) பாரசீகர் மறுவுலகத்தில் நம்பிக்கை ——— (உடையவர், இல்லாதவர்கள்).

2. பாரசீகர் ஏன் இலங்கைக்கு வந்தனர்?

3. பாரசீக அரசர்கள் தங்கள் இராச்சியத்துக்கு என்ன நன்மைகள் செய்தார்கள்?

4. பாரசீகருடைய சமயம் சிறந்தது என்பதற்கு நியாயங் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் பாடம்

# கிறீஸ்து சமயம்

உலகம் முழுவதற்கும் ஒரே கடவுள் உண்டு என்ற கொள்கையை முதன் முதல் தாபித்தவர்கள் ஹீப்ரூக்களே என்று முன்னொரு பாடத்தில் படித்திருக்கிறோம். ஓகஸ்தசு சீசர் உரோம இராச்சியத்தைப் பலப்படுத்திக் கொண்டு வருங்காலத்தில், பலஸ்தீனாவில் ஹீப்ரூ சமயாசாரி ஒருவர் பிறந்தார். அவர்தான் யேசுக்கிறீஸ்து. ஒரு இரட்சகர் உலகத்துக்கு வருவாரென்று ஹீப்ரூ தீர்க்கதரிசிகள் முன்னரே அறிவித்திருந்தார்கள்.

யேசு பல நன்மைகளைச் செய்தார். தீயோரைத் திருத்தி வைத்தார். மக்கள் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டுமென்றும், எல்லோரும் தூய சிந்தனையுடையவர்களாயிருக்க வேண்டுமென்றும் போதித்தார். அவர் பல அற்புதங்களையுஞ் செய்தார். ஹீப்ரூக்கள் அவரை ஒரு இரட்சகரென்று ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் சிலுவையில் அறையப்பட்டு இறக்க நேரிட்டது. அவர் மரித்தபோதிலும் அவருடைய போதனைகள் அழியவில்லை. அவருடைய சீடர்கள் அப்போதனைகளை உரோம இராச்சியமெங்கும் பரப்பினர். சீக்கிரத்தில் உரோம சக்கரவர்த்தியே கிறீஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார். பின்பு உரோம இராச்சியம் முழுவதிலும் அது அரசாங்க சமயமாகக் கைக்கொள்ளப்பட்டது.

கிறீஸ்து பிறக்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மேல்நாடுகள் கிரேக்க, உரோம தெய்வங்களில் நம்பிக்கை இழந்து விட்டனர். அவர்களுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த ஞானிகள், மனத்துக்குச் சாந்தியையும் உண்மையையும் விளக்கும் சமயமொன்றை எதிர்பார்த்தனர். மக்களின் ஒரே தந்தையாகிய கடவுளை கிறீஸ்து மூலம் அறியலாமென்பதும், பாப மன்னிப்புப் பெறலாமென்பதும், தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்கு அதிக நம்பிக்கையைக் கொடுத்தது. நாளடைவில் உயர்ந்த வகுப்பினரும் தனவந்தர்களும் நம்பிக்கை வைக்கத் தொடங்கினர். பின்பு பெரிய கொன்ஸ்தாந்தையின் என்ற சக்கரவர்த்தி, உரோம சாம்ராச்சியத்தின் அரசியற் சமயமாகக் கிறீஸ்து மார்க்கத்தை ஏற்படுத்தினர். கி. பி. நாலாம் நூற்றாண்டில் போப்பரசரைத் தலைவராயுள்ள கத்தோலிக்க கோயிலும் திருச்சபையும் உண்டாக்கப்பட்டன. உரோம இராச்சியம் நிலைகுலைந்ததன் பின்பும் போப்பரசர் உரோமாபுரியிலிருந்து மார்க்க விஷயங்களுக்குத் தலைமை தாங்கிக் கொண்டு வந்தார்.

பரிசுத்த உரோம இராச்சியத்துக்கு ஒரு சக்கரவர்த்தியும் சமய விஷயங்களுக்குப் போப்பரசரும் தலைமைதாங்கி இருந்து ஒருவருக்கொருவர் உதவியாய் ஆண்டனர். சக்கரவர்த்திகளிற் சார்ளிமேன் ஒரு சிறந்தவன். தன் ஆளுகைக்குட்பட்ட நாடுகளிற் கோயில்களையுங் கட்டி, கல்வியையும் மேலோங்கச் செய்து அரசியலையும் செவ்வனே நடத்தினான். உரோமாபுரியிலுள்ள பேதுரு ஆலயத்தில் கி. பி. 800-ம் ஆண்டில் நத்தார்த் தினத்தன்று போப்பாண்டவர் சார்ளிமேனுக்கு முடிசூட்டினர். இச்சக்கரவர்த்தி இறந்ததன் பின் பரிசுத்த உரோம இராச்சியம் மூன்றாகப் பிளவுபட்டது. அதிலொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சு, மற்ருென்று ஜேர்மனியும், மற்ருென்று இத்தாலியின் ஒரு பகுதியுமாகும். பின்பு போப்பரசருக்கும் பரிசுத்த உரோம இராச்சிய சக்கரவர்த்திக்குமிடையில் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டது.

அக்காலத்தில் மக்கள் கிறீஸ்த ஆலயத்தில் முழுவிசுவாசமுடையவர்களாய் இருந்தனர். ஆலயத்துக்கப்பால் விலகி நடப்போர்க்கு ஈடேற்றமில்லையென நம்பினர். ஆகையால் தேவாலயங்கள் மக்கள் நம்பிக்கைக்கு ஏற்றவாறு தாபிக்கப்பட்டன. பூமியில் கிறீஸ்துவின் பிரதிநிதி போப்பாண்டவரென்றே எண்ணினர். அவருக்குக் கீழமைந்த மார்க்க உத்தியோகஸ்தர்கள், ஆர்ச்பிசப், பிசப், குருமார் என்பவர்களாம். கிறீஸ்த ஆலயம் மார்க்க விஷயம் மாத்திரமல்ல; ஏனைய எவ்விஷயங்களின் உண்மையையும் அறிந்ததென மக்கள் நம்பிக்கை கொண்டனர். மக்கள் இவ்வுலக விஷயங்களிலதிக சிரத்தையெடுக்காது மறுவுலக வாழ்க்கையைப் பற்றியே சிந்திப்பாராயினர்.

ஐரோப்பிய நாடுகள் ஒன்ருேடொன்று சண்டையிட்டுச் சீர்குலைந்திருந்தன. அக்காலத்தில் பரிசுத்த வாழ்க்கையை நடத்த விரும்பினவர்கள் ஆச்சிரமங்களுக்குப் போய்ச் சேர்ந்தனர். ஆச்சிரமங்களிலிருந்த குருமார்கள் மார்க்கம், கல்வி, வைத்திய சிகிச்சை முதலிய விஷயங்களைக் கவனித்தனர். பலவகையான சித்திரங்களையும், ஓவியங்களையும் கோயில்களிலும் ஆச்சிரமங்களிலும் பார்க்கலாம். கிறீஸ்து மார்க்கத்தின் உண்மைகளை நாடகங்கள் மூலம் பாமர சனங்களுக்குத் தேவாலயங்களின் அதிகாரிகள் விளக்கிக் காட்டினர். அக்காலத்து மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கையைத் தேவாலயங்கள் திருத்தி வைத்தன என்பதற்கு ஐயமில்லை. அவைகளின் ஆதரவைக் கொண்டே ஐரோப்பிய நாகரிகம் முன்னேறியது.**

## வினாக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

(i) ——— ஓரே கடவுளுண்டென்று முதன் முதல் தாபித்தார்கள்.

(ii) ——— ஒரு தீர்க்கதரிசி. அவர் ——— பிறந்தார். ——— சிலுவையில் அறையப்பட்டு இறந்தார்.

(iii) நாளடைவில் ——— மார்க்கத்தை ஏற்றுக்கொண்டனர்.

(iv) கத்தோலிக்க திருச்சபைக்கு ——— தலைவரானூர்.

(v) ——— ஒரு சக்கரவர்த்தியும், ——— போப்பரசரும் தலைமைதாங்கி வந்தனர்.

(vi) ——— ஆண்டு ——— போப்பாண்டவர் ——— முடி சூட்டினூர்.

(vii) சிறிது காலத்திற்குப்பின் ——— முற்றுகப் பிளவு பட்டது.

(viii) பூமியில் கிறிஸ்துவின் பிரதிநிதி ——— என்றே நம்பினர்.

(ix) சந்நியாசி மடங்களிலிருந்த குருமார்கள் ——— ———, ——— முதலிய விஷயங்களைக் கவனித்தனர்.

(x) கிறீஸ்து மார்க்கத்தின் உண்மைகள் ——— மூலம் காண்பிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கிறீஸ்து செய்த நன்மைகள் என்ன?

3. கிறீஸ்துவின் போதனைகள் எங்கே பரவின? யார் பரப்பினார்கள்?

4. ஐரோப்பாவில் சமய விஷயங்களுக்கு யார் தலைமை தாங்கினார்?

5. கத்தோலிக்க திருச்சபை செய்த சேவைகள் என்ன?

6. கிறீஸ்த கோயில்கள் மக்கள் வாழ்க்கைக்கு என்ன துணை புரிந்தன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் பாடம்

## இஸ்லாம்


பல நூற்ருண்டுகளுக்கு முன் அரேபியர் இலங்கைக்கு வர்த்தகஞ் செய்வதற்காக வந்தனர். இப்போது இலங்கையில் அநேக முஸ்லீங்கள் இருக்கிருர்கள். இவர்களுடைய சமயம் இஸ்லாம் என்று சொல்லப்படும். அரேபியரும் ஒரு பெரிய சாம்ராசசியத்தைத் தாபித்துத் தங்கள் செல்வாக்கையும் மதக்கொள்கையையும் பரப்பியிருக்கிருர்கள். உலகத்திலுள்ள பல சமயங்களில் இஸ்லாமும் ஒன்ருகும். ஆகையால் அதைப்பற்றி அறிதல்வேண்டும்.

செங்கடலிலிருந்து ஏறக்குறைய ஐம்பது மைலுக்கப்பாலுள்ள மெக்கா என்ற பட்டணத்தில் கி. பி. 571-ல் முகம்மது நபி பிறந்தார். அவர் வறுமைப்பட்ட உயர்ந்த குடியைச் சேர்ந்தவர். இவர் பிறப்பதற்கு முன்னரே தந்தையார் இறந்துவிட்டார். இவரது சிறு பராயத்தில் தாயாரும் தேகவியோகமாஞர். இவர் தனது பாட்டஞராலும் மாமஞராலும் வளர்க்கப்பட்டார். இவர் தனது இருபத்தைந்தாவது வயதில் ஒரு விதவையான அம்மையாரின்கீழ் வியாபாரம் நடத்தும் வேலையாளாக அமர்ந்தார். வியாபாரக் கூட்டத்தாருக்குத் தலைவராக அமர்ந்து அவர்களை வெவ்வேறு தேசங்களுக்குக் கூட்டிச்செல்வர். அவருடைய சிறந்த குணங்களைக் கண்டு மகிழ்ந்த அந்த அம்மையார் அவரை மணந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புதுச் சமயத்தைத் தாபிக்கவேண்டுமென்று தனக்கு ஒரு ஆஞ்ஞை கடவுளிடமிருந்து பிறந்தது என்று முகம்மது நபி கூறிக்கொள்வார். அவர் அந்த ஆஞ்ஞையை நிறைவேற்றச் சித்தங்கொண்டபொழுது அவருக்கு வயது நாற்பதாகும். அவர் ஆபிரகாம், மோசேஸ், கிறீஸ்து என்பவர்கள் தீர்க்கதரிசிகளென்று ஏற்றுக்கொண்டார். ஆனல், தான் எல்லோரிலும் பார்க்கப் பெரிய தீர்க்கதரிசியென வெளிப்படுத்தினர். கடவுள் ஒருவரே யென்ற உண்




முகமதியர் இராச்சியம்

மையைப் போதித்தார். அவர் விக்கிரகாராதனையைக் கண்டித்தார். அவர் தன்னைப் பின்பற்றியவர்களுக்கு வாழ்க்கைக்குரிய சில விதிகளை விதித்தார். நாளொன்றுக்கு எத்தனைமுறை கடவுள் வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு செய்யவேண்டுமென்றும், மக்கள் ஒருவர்க் கொருவர் நேர்மையான முறையில் நடக்கவேண்டு மென்றும், மெலிந்தவர்களுக்கு ஆதரவளிக்கவேண்டு மென்றும், கடவுளுக்குப் பயந்து நடக்கவேண்டு மென்றும் போதித்தார். அவர் போதித்த சமயம் இஸ்லாம் எனப்படும். ''கடவுளுக்கு அடங்கி வாழ் வது'' என்பதே அதன் பொருளாகும். உலகத்திற் சம்பவிப்பதெல்லாம் அல்லாவின் (கடவுள்) எண் ணப்படி நடக்கின்றன என்பது முகமதியருடைய கொள்கை.

மெக்காவிலுள்ள சனங்கள் முகம்மது நபியினு டைய போதனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. விக் கிரகாராதனை செய்த அவர்கள் அவரை வெறுத்துக் கொலை செய்ய எண்ணினர். கி. பி. 622-ல் மெக் காவை விட்டு மெதீனாவுக்கு ஓடினார். அவர் ஓடிய தினம் ஹிஜ்ராவை எனப்படும். அந்தத் தினத் தைக் கொண்டே முஸ்லீம்கள் தங்கள் வருடத் தைக் கணக்கிடுகிறார்கள். எட்டு வருடங்களின் பின்பு மெக்காவைக் கைப்பற்றுவதற்காகப் பெருஞ் சேனையுடன் மெதீனாவிலிருந்து வந்தார். மெக்கா வைத் தாக்கிய காலந்தொட்டு முகம்மது சமயம் பரவத்தொடங்கியது.

சமயத்துக்காகச் சண்டையிட்டுச் சண்டையிலி றப்பது மோக்ஷத்துக்குப் போவதற்கு அறிகுறி யென்று முகமதியர் எண்ணுவர். முகம்மது நபியின் வழித்தோன்றலிலுள்ளவர்கள் எல்லாத் திசைகளி லும் வெற்றிபெற்றனர், சீரியாவைக் கைப்பற்றிய பின் கொன்ஸ்தாந்தைன் நோப்பிளையும் தாக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்து, வட ஆபிரிக்கா, பார்சியா, இந்தியா முதலிய இடங்களிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். கி. பி. 700-ல் ஸ்பானியாவைத் தம் வசமாக்கிப் பிரினீஸ் மலைகளையுங் கடந்துசென்றனர். 762-ல் சாள்ஸ் ஹமர் என்பவரால் வடக்குப் பிரான்சில் தோற்கடிக்கப்பட்டனர். ஸ்பானியாவுக்குத் திரும்பி வந்து அங்கே ஓர் இராச்சியத்தை நிறுவினர்.

முகம்மதுநபி 632-ல் இறந்தார். அவர் இறந்த தன்பின் அவருக்குத் தெய்வீகமாகக் கிடைத்த உண்மைகள் 'குர் ஆன்' என்றவேதமாகத் தொகுக்கப்பட்டது. அது அரேபியபாஷையில் எழுதப்பட்டிருந்தது. நாளொன்றுக்கு 5 முறை கடவுளைத் தொழவேண்டுமென்றும், மதுபானம் அருந்தக் கூடாதென்றும், பன்றியிறைச்சியை உண்ணக்கூடாதென்றும், வறியவர்களுக்குப் பிச்சை கொடுக்க வேண்டுமென்றும், ரம்ஸான் மாசத்தில் விரதமிருக்க வேண்டுமென்றும், மெக்காவுக்கு யாத்திரை செய்ய வேண்டுமென்றும் முகம்மது சமயம் போதிக்கிறது. முகம்மதியர் தொழுகின்ற இடம் பள்ளிவாசல் அல்லது மசூதி என்று சொல்லப்படும். அங்கே படங்களாவது விக்கிரகங்களாவது கிடையாது.

அரேபியர், கணிதம், வைத்தியம் முதலிய கலைகளிற் திறமை வாய்ந்தவர்கள். கணிதத்தில் உபயோகிக்கப்படும் இலக்கங்கள் அரேபியருடையதாகும். முகம்மது நபிக்குப்பின் ஆட்சி நடத்திய கலீபாக்களுள் அரூன்—அல்—ராசிட்(கி. பி. 786—809) ஓர் பிரசித்தி பெற்றவன். இவனது இராச்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பானியாவிலுள்ள ஜிப்ரோல்டர் தொடக்கம் இந்திய - சீனு வரைக்கும் பரந்ததொன்ருகும். "அரேபியக் கதைகள்" என்பன இவனைப்பற்றிக் கூறப்பட்டு வந்த கதைகளாகும். அவன் கல்வியில் விருப்பமுடையவனுதலால் அவனது அவையிற் பல புலவர்களும், அறிஞர்களும் கூடி இருந்தார்கள். ஐரோப்பியர் கிரேக்க நூல்களைப் படியாது புறக்கணித்த போது அவற்றையெல்லாம் அரேபிய பாஷையில் மொழிபெயர்த்து வைத்தான்.

## வினுக்கள்

1. முகம்மது நபி எங்கே பிறந்தார்? எப்போ பிறந்தார்?
2. அவர் யாரால் வளர்க்கப்பட்டார்?
3. ஆரம்பத்தில் என்ன தொழில் செய்தார்?
4. அவர் யாரை விவாகஞ்செய்தார்?
5. அவருக்குக் கடவுளிடமிருந்து பிறந்த ஆஞ்ஞை என்ன?
6. அவர் யாரைப்பற்றிப் போதித்தார்? எவற்றைக் கண்டித்தார்?
7. முகம்மது நபியினுடைய போதனைகள் யாவை?
8. அவர் மெக்காவை விட்டு ஓடியதற்கு நியாயமென்ன?
9. முஸ்லீங்கள் எதைக்கொணடு தங்கள் வருடத்தைக் கணக்கிடுகிருர்கள் ?
10. எப்போ முகம்மது சமயம் பரவத்தொடங்கியது?
11. அவருடைய போதனைகள் கொண்டுள்ள நூல் யாது? அதிற் பிரதானமாக என்ன கூறப்பட்டிருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அரேபியர் எதிற் திறமைவாய்ந்தவர்கள்? அரேபியரிட மிருந்து எதை நாம் கற்றுக்கொண்டோம்?

13. முகம்மது நபியைப்பற்றி அறிந்தவற்றைக் கூறுக.

14. இஸ்லாம் சமயம் பரவிய வரலாற்றை விபரிக்குக.

15. அருன் — அல் ராசிட் என்பவன் யார்? அவனைப்பற்றி அறிந்தவற்றைக் கூறுக.

16. ஐரோப்பா, ஆசியாப் படங்கள் வரைந்து அதில் முக மதிய இராச்சியத்தையும், மெக்கா, மெதீனவையுங் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாம் பாடம்

# சிலுவை யுத்தங்கள்

கிறீஸ்தவர்களாற் புண்ணிய ஷேத்திரமெனக் கருதப்பட்ட எருசலேம் போன்ற பல இடங்கள் பலஸ்தீனுவிலுண்டு. இங்கு யாத்திரைக்கு வந்த கிறீஸ்தவர்களுக்கு இஸ்லாமிய அரசர்கள் பல வசதிகளையும் கொடுத்துதவினர். ஆனல், பதினோராம் நூற்ருண்டில் எருசலேமை அரேபியரிலிருந்து துருக்கியர் கைப்பற்றினர். அவர்கள் காலத்து வந்த யாத்திரிகர்களுக்குப் பல கொடுமைகளைச் செய்தனர். கி. பி. 1095-ல் இரண்டாம் ஏர்பன் என்ற பாப்பாண்டவர், கிறீஸ்த திருச்சபைக்குத் தலைவராயிருந்தார். அவர் ஐரோப்பிய அரசர்களைப் பரிசுத்த பூமியாகிய பலஸ்தீனுவைத் துருக்கியரிடமிருந்து கைப்பற்றுமாறு தூண்டினுர். இதைவிடப் பீற்றர் என்றொரு சந்நியாசி ஐரோப்பிய அரசரை அதிக ஆர்வத்தோடு பலஸ்தீனுவை விடுதலையாக்குமாறு உற்சாகப்படுத்தினுர். கிறீஸ்து பிறந்து இறந்த நாட்டுக்கு அநேக அரசர்கள் கிளம்பினர். அப்போது நடந்த யுத்தங்களே சிலுவை யுத்தங்களெனப்படும்.

பல்லாயிரம் சனங்கள் பீற்றர் சந்நியாசியோடு ஐரோப்பாவைக் கடந்து பலஸ்தீனுவுக்குச் சென்றனர். பலர் சண்டைசெய்து மடிந்தனர். பின்பு 1096-ல் தேவையான ஆயுதங்களோடு கொன்ஸ்தாந்தைன்நோபிளைத் தாண்டிச் சிலுவை யுத்தஞ் செய்வதற்காக ஐரோப்பியர் சிலர் புறப்பட்டு எருசலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக் கைப்பற்றினர். சிறிது காலத்திற்குள் சுல்தான் சலாஹுத்தீனின் தலைமையில் முஸ்லீங்கள் போர்செய்து எருசலேமை மீண்டும் திருப்பிப் பிடித்தனர். மூன்ருவது சிலுவை யுத்தம் 1187-ல் நடைபெற்றது. அதிற் பிரடெறிக் சக்கரவர்த்தி பிரான்சிய அரசன், இங்கிலாந்துக்கு அரசனுகிய முதலாம் றிச்சேட் பங்குபற்றினர். இதிலும் எருசலேமை அவர்கள் கைப்பற்றவில்லை. இவ்வண்ணமாகப் பல சிலுவை யுத்தங்கள் நடைபெற்றன. ஏழாவது சிலுவையுத்தத்தைப் பதினெராம் லூயி நடத்தினர்.

இனிச் சிலுவையுத்தங்களாலேற்பட்ட விளைவை ஆராயவேண்டும். இதுவரையில் மேற்கு ஐரோப்பியர் வெளிநாடுகளின் தொடர்பைப் பெருது சிறிது சிறிதாக நாகரிகமடைந்து வந்தனர். சிலுவை யுத்தம் நடைபெற்ற காலத்தில் கீழைத் தேசங்களுக்குச் சென்று அங்கே பல நகரங்களையுங் கண்ணுற்றனர். இவைகளெல்லாம் பல மாற்றங்களை உண்டாக்கின. மேன்மக்கள் கல்வீடுகளைக் கட்டத் தொடங்கினர். நாகரிகமான உடை, உணவு முதலியவைகளை மேற்கொண்டனர். மேலைத் தேசங்களுக்கும் கீழைத்தேசங்களுக்குமிடையில் வியாபாரம் விருத்தியடைந்தது. மத்தித்தரைக்கடலுக் கணித்தாயுள்ள வெனீஸ், ஜெனேவா முதலிய நகரங்கள் வர்த்தக தலங்களாக விளங்கின. அந்நகரங்களின் வர்த்தகர்களிடம் அநேக வர்த்தகக் கப்பல்களிருந்தன.

ஐரோப்பா முழுதும் நகரவாழ்க்கை ஏற்பட்டது. மேன்மக்கள் சிலுவை யுத்தங்களுக்கு ஆயத்தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்குப் பணம் தேவையாயிருந்தது. ஆகை யால் அவர்களுடைய நிலங்களிற் குடியிருந்த மக் களிடமிருந்து பணவுதவி பெற்றபடியால் அநேகர் தங்கள் சுதந்திரத்தைப் பெற்று சுயாதீனமான வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தனர். வர்த்தக மும் செல்வமும் அதிகரித்ததன் பயனாக மேல் வகுப்பினரையும், பயிரிடுவோரையுந் தவிர்ந்த வர்த் தகர், அல்லது மத்திய வகுப்பினரென்ற புது வகுப்பினர் பிரபலமடைந்தனர். கடைசியாக, சிலுவை யுத்தங்களால் மேற்கு ஐரோப்பாவிலுள் ளோர் பரந்த சிந்தையும் விரிந்த மனப்பான்மையு முடையோராயினர். மக்களிடையே உண்டான புதுக் கொள்கைகள் கல்வியின் மறுமலர்ச்சிக்கு வேண்டிய அத்திபாரமானது என்றே சொல்லலாம்.

## வினாக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழு துக.

(i) ——— அநேக கிறீஸ்தவர்கள் யாத்திரை செய்வ தற்காகப் போவது வழக்கம். யாத்திரிகர்களுக்குத் ——— பல கொடுமைகளைத் துருக்கியர் செய்தனர். ——— பலஸ்தீனுவைக் கைப்பற்றும்படி தூண்டி னர். ——— என்ற சந்நியாசியும் ——— கைப்பற்று வதற்காகப் பல முயற்சிகள் செய்தார்.

(ii) மூன்றுவது சிலுவை யுத்தம் ——— நடைபெற்றது. அதிற் பங்குபற்றிய நாடுகள் ——— என்பனவாம்.

2. சிலுவை யுத்தங்கள் என்ன காரணம் பற்றி நடை பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சிலுவை யுத்தங்களிற் பங்குபற்றிய பெரியார்கள் யார்?

4. சிலுவை யுத்தங்களால் ஐரோப்பாவிலேற்பட்ட விசேஷ மாற்றங்களென்ன?

5. மேற்கு ஐரோப்பாவிலும் பார்க்க கீழைத் தேசங்கள் நாகரிகத்தில் முன்னேறியிருந்தன வென்பதற்கு என்ன சான்றுகள் உள?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராம் பாடம்

# உலக யாத்திரிகர்களும் பிரபல இரு அரசர்களும்

வெனீஸ் நகரத்தில் 1254-ம் ஆண்டு மார்க்கோ போலோ என்ற யாத்திரிகர் பிறந்தார். மார்க்கோபோலோ பிறந்து சில காலத்தின்பின் அவனுடைய தந்தையாகிய நிக்கோலோபோலோ வியாபாரஞ் செய்வதற்காகக் கீழைத் தேசங்கட்குப் பிரயாணஞ் செய்தார். சீனு தேசத்துக்குச் சென்றபோது அவ்வூர்ச் சக்கரவர்த்தியால் நன்கு உபசரிக்கப்பட்டார். அச் சக்கரவர்த்தி கிறீஸ்து மதத்தைத் தன் தேசத்தவர்களுக்குப் போதிப்பதற்காக நூறு பாதிரிமார்களை அனுப்பும்படி நிக்கோலோபோலோ மூலம் பாப்பாண்டவருக்கு விண்ணப்பஞ் செய்தார்.

தாய் நாட்டுக்குத் திரும்பி வந்த நிக்கோலோ போலோ 1271-ல் மறுபடியும் சீனுவுக்குச் செல்வதற்குப் புறப்பட்டார். பதினுறு வயதாயிருந்த மார்க்கோபோலோவும் தந்தையுடன் சென்றுன். அவர்கள் அயாஸ் என்ற இடம் வரைக்கும் கடல் மார்க்கமாகச் சென்று அவ்விடங்களிலிருந்து ஓர்மஸ் வரைக்கும் தரைமார்க்கமாகச் சென்றுர்கள். அங்கேயிருந்து பாரசீகத்துக் கூடாகச்சென்று ஆப்கானிஸ்தானைக் கடந்து சீன தேசத்துட் புகுந்தனர். இப் பிரயாணத்தைச் செய்வதற்கு மூன்றரை வருடகாலம் செலவழித்தார்கள். அக்காலத்திற் பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாணஞ் செய்வதற்குப் பல கஷ்டங்களிருந்தன. குளிர்காலத்திற் பனி உறைவதனல் வாகனஞ் செல்வதற்குக் கஷ்டமாயிருந்தது. மழையும் புயலும் ஆறுகளும் தடையாயிருந்தன.

மார்க்கோபோலோ 17 வருடமாகச் சீனச் சக்கரவர்த்தியின் அரசசபையிலிருந்தான். குப்ளாகான் என்ற சீனச் சக்கரவர்த்தி இவனுடைய மதி நுட்பத்தையும் பல மொழித் தேர்ச்சியையுங் கண்டு வியந்து, அந்நியநாடுகளுக்கு அவன் மூலம் தூதனுப்பினன். அவ்வமயங்களில் பல நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ள அவனுக்குச் சந்தர்ப்பங் கிடைத்தது. சீனவிலிருந்து தன் நாட்டுக்குத் திரும்பும்போது கடல் மார்க்கமாகப் பிரயாணஞ் செய்தான். வழியில் இலங்கையிலுஞ் சிலகாலஞ் செலவழித்தான். கீழ் நாடுகளுக்கு வந்து 25 வருடங்களாயின. அதன்பின் தன் தாய் நாடு சென்றபொழுது அவனது சுற்றத்தார் அவனை இன்னரெனக் கண்டுபிடிக்க மாட்டாமற் கஷ்டப் பட்டார்கள்.

அக்காலத்தில் வெனிசுக்கும் ஜெனேவாவுக்குமிடையில் நடந்த போரின் காரணமாக அவன் கைதுசெய்யப்பட்டு ஜெனேவாவுக்குக் கொண்டு போகப்பட்டான். சிறைச்சாலையில் இவனுடன் இருந்த ஒருவன் மார்க்கோபோலோ கூறிய யாத்திரையின் வரலாறுகளை எழுதிவைத்தான். 1295-ல் எழுதிய இவ்வரலாறுகள் ஐரோப்பியரைப் பல நாடுகளுக்குச் செல்லத்தக்கதாகத் தூண்டிவிட்டன; இவர்களுள் கொலம்பஸ் ஒருவராவர். அடுத்த நூற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருண்டில் புதிய தேசங்களைக் கண்டு பிடிப்பதற்குத் தூண்டுகோலாக இவருடைய வரலாறுகள் இருந்தனவெனலாம்.

மார்க்கோபோலோவைப் போல இபின் பட்டூட்டா என்பவரும் ஒரு வர்த்தக குலத்தைச் சேர்ந்தவர். அவர் 1304-ம் ஆண்டு மொரக்கோவிற் தாங்கியர் என்னுமிடத்திற் பிறந்தார். இளமையில் அதிக திறமையுடன் கல்வி கற்றுப் பின் இஸ்லாமிய சமய சாஸ்திரத்தை நன்ருய்ப் படித்திருந்தார். இவர் தனது இருபத்தோராவது வயதில் மக்கத்திற்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார். அக்காலத்தில் நீண்ட யாத்திரைகள் செய்வது கஷ்டமாயிருந்தபடியால் யாத்திரிகர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்ருர்கள். போர்வீரர்களும் அவர்களோடு செல்வது வழக்கம். வழிகளிலமைக்கப்பட்டிருந்த விடுதிகளில் யாத்திரிகர்களுக்கு இலவசமாக உணவு அளிக்கப்பட்டது. முஸ்லீங்கள் சாதி வித்தியாசம் பாராட்டாதபடியால் யாத்திரிகர்கள் எல்லோரும் ஒரே மாதிரி உபசரிக்கப்பட்டனர். விடுதிகளைச் செவ்வனே நடத்துவதற்குத் தனவந்தர்கள் தேவையான பொருளைக் கொடுத்து உதவினர். இபின் பட்டூட்டா வியாபாரக் கூட்டங்களோடு சேர்ந்து எகிப்து, சீரியா முதலிய தேசங்களைக் கடந்து மக்கத்துக்குச் சென்ருர். அங்கிருந்து சின்ன ஆசியா, இந்தியா, இலங்கை, மாலைதீவுகள், சீன, மேற்காபிரிக்கா, ஸ்பானியா முதலிய இடங்களுக்குச் சென்ருர். இவர் ஏறக்குறைய எழுபத்தையாயிரம் மைல் யாத்திரை செய்திருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனொளிபாதமலையைத் தரிசிப்பதற்காக அவர் இலங்கைக்கு வந்தார். இம்மலையிலிருக்கின்ற பாதச்சுவடு ஆதாமுடையதென முஸ்லீங்கள் கருதுகின்றனர். இவர் இலங்கைக்கு வந்தபொழுது யாழ்ப்பாண இராச்சியத்தில் வந்திறங்கினார். அக்காலத்தில் புத்தளம் யாழ்ப்பாண இராச்சியத்துக்குத் தலைநகராயிருந்தது. யாழ்ப்பாணத்து அரசனுக்குப் பாரஸீகப்பாஷை தெரிந்திருந்தபடியால் இபின்பட்டூட்டா, அரசனுடன் அப்பாஷையில் சம்பாஷித்தான். சிவனொளிபாதமலை செல்வதற்கு இவருக்குப் பல்லக்கும், மற்றும் வசதிகளும் அரசன் அளித்தானென்று இபின்பட்டூட்டா கூறியிருக்கிறார். சிவனொளிபாதமலைக்குச் செல்வதற்கு இரு பாதைகளிருந்தனவெனவும், இலங்கையில் ஏராளமான இரத்தினங்கள் இருந்தனவெனவும் இபின் பட்டூட்டா கூறியிருக்கிறார். இவர் இலங்கையில் கொழும்பு, காலி, தேவிநுவரை முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கிறார். தேவிநுவரையிலிருந்த இந்து தேவாலயத்திற் தங்க விக்கிரகம் இருந்ததென்றுங் கூறுகின்றார்.

பன்னிரண்டாவது நூற்றாண்டில், மொங்கோலியர், ஜெங்கிஸ்கான் (1162—1227) என்ற வீரன் தலைமையின்கீழ், சீனா முழுவதையும் மேற்கே ருஷ்யா வரைக்கும் கைப்பற்றினார்கள். இவன் கீழமைந்த மொங்கோலிய இராச்சியம் ஐரோப்பியருக்குச் சீனாவோடு தொடர்புறவுங் கீழைத்தேசங்களோடு வியாபாரஞ் செய்யவும் துணைபுரிந்தது. இதனால் ஐரோப்பியர் வெடிமருந்தை உபயோகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் முறையையும், அச்சுவித்தையையும், திசையறி கருவியின் உபயோகத்தையும் சீனரிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

ஜெங்கிஸ்கானுடைய பேரனே கீர்த்திவாய்ந்த குப்ளாகான் என்றவரசனுகும் (1266—1294). இவனுடனேயே மார்க்கோபோலோ 17 வருடகாலம் கழித்திருந்தான். தனது பேரன் வெற்றி பெற்ற நாடுகளெல்லாவற்றையும் குப்ளாகான் ஆண்டுவந்தான். மார்க்கோபோலோ குப்ளாகானைப் பற்றிக் கூறுமிடத்து அவன் அழகுவாய்ந்தவனென்றும், நடுத்தர உயரமுடையவனென்றும் கூறியிருக்கிருர். பீக்கின் நகரை இவ்வரசனே நிறுவினுன். அந்நகரில் போக்குவரவுக்கேற்ற வசதிகளும், மாளிகைகளும், வீடுகளும் காணப்பட்டன. தனது பரந்த இராச்சியத்தில் உள்ளவர்களுக்குக் குப்ளாகான் விருந்துகள் அளித்தான். நாற்பதினுயிரத்துக்கு மேற்பட்ட சனங்கள் இவ்விருந்துகளிற் பங்குபற்றினர். அவ்விருந்துகள் நடைபெறுகின்ற நேரங்களில் அரசன் உயர்வான இடத்திலும், சனங்கள் அவன் கால்மட்டத்துக்குக் கீழிருக்கக் கூடியதாக ஆசனம் போடப்பட்டிருக்கும். குப்ளாகானுடைய இராச்சியம் அதிக விஸ்தீரணமுடையதாகையால் அரசியல் நிர்வாகத்தைச் செவ்வனே நடத்துவதற்குச் சில கஷ்டங்களிருந்தன. ஆகையால் அவன் 3 மைலுக்கொரு கிராமத்தை அமைத்து ஒவ்வொன்றிலும் நாற்பது குடிகள் வரையிலிருத்தினுன். ஒவ்வொரு கிராமத்திலும் அரசனுடைய ஓலை நிருபத்தைக்கொண்டு செல்ல ஒற்றர்களிருந்தார்கள். ஒரு கிராமத்திலுள்ள ஒற்றன் ஓலையைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் அடுத்த கிராமத்திலிருக்கும் ஒற்றனிடம் கொடுப்பான். இவ்வாருக ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஒற்றர்கள் அந்நிருபங்களைச் சேரவேண்டிய இடத்திற் சேர்ப்பர். ஒற்றர்கள் மணிகள் பூட்டப்பட்ட வளையங்களை அணிந்திருந்தார்கள். அதனுல் அம்மணிகளின் ஒலியிலிருந்து அவர்களுடைய வரவை தூரத்திலிருந்தே அறிந்துகொள்ள முடியும். இவ்வண்ணம் நடைபெற்ற தபால் போக்குவரத்துமூலம் இராச்சியத்தின் எல்லாப் பாகங்களிலும் நடைபெற்ற விஷயங்களையும் அறிந்து கொண்டான்.

குப்ளாகான் மார்க்க விஷயங்களிலும் அதிகம் ஆர்வமுடையவன். பாப்பாண்டவருக்கு எழுதிக் கிறீஸ்தவ பாதிரிமாரைச் சீனுவுக்கு அழைப்பித்தான். இலங்கையிலிருந்து பௌத்ததாதுவை எடுப்பித்தான் என்றும் மார்க்கோபோலோ குறிப்பிட்டிருக்கிருர்.

முஸ்லீம் அரசர்கள் பலவிடங்களையுங் கைப்பற்றிய காலத்தில் இந்தியாவில் சிந்துமாகாணமொன்றையே தங்களாட்சிக்குள் கொண்டுவந்தனர். ஆனுல் பன்னிரண்டாவது நூற்ருண்டில் வட இந்தியாவைக் கைப்பற்றத் தொடங்கினர். அலாவுதீன் (1296—1316) என்ற முஸ்லீம் அரசன் வட இந்தியாவோடு திருப்தியுருமல் தென் இந்தியாவையும் கைப்பற்ற முயன்ருன். அந்நோக்கத்துடன் தனது சேனுதிபதியாகிய மல்லிக்கபூரை அனுப்பினுன். தமிழ் அரசர்மீது படையெடுத்துப் பாண்டி இராச்சியத்துக்கு முடிவுசெய்தான். இந்தத் துருக்கிய அரசருள் கடைசியரசன் முகமது இபின் துக்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1325—1351) என்பவனுவான். இவன் தென் இந்தியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினுன். இவனுடைய சில துர்ச்செய்கைகளால் பிரசைகள் அவனை வெறுக்கத் தொடங்கினர். கொடையிலும், மனிதரை வதைப்பதிலும் முகம்மது இபின் விருப்பமுடையவனென இபின்பட்டூட்டா கூறியிருக்கின்ருர். என்றும் அவனுடைய வாசலில் இரப்போரையும் இறப்போரையுங் காணலாமென்றுங் கூறியுள்ளார். இரவலர்க்குப் போதிய பொருள் கொடுத்துதவுவது போல மக்களுக்கு அதிக கொடுமைகளையும் செய்தான். தனது சகோதரனுகிய மசூத் என்பவனிற் சந்தேகங் கொண்டு அவனைச் சிரச்சேதஞ் செய்வித்தான்.

## வினுக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

(i) ———, ——— என்ற உலக யாத்திரிகர்கள் இருவர் இலங்கைக்கு வந்தனர்.

(ii) ——— குப்ளாகானுடைய அரச சபையில் ——— வருடகாலஞ் செலவழித்தான்.

(iii) மார்க்கோபோலோவினுடைய யாத்திரை வரலாறுகள் ——— எழுதப்பட்டன.

(iv) இபின்பட்டூட்டா ——— சென்ருர். இவர் ஏறக்குறைய ——— மைல் யாத்திரை செய்திருக்கிருர்.

(v) ——— என்ற அரசனே ——— நகரை நிறுவினுன்.

(vi) குப்ளாகான் ——— மூலம் தூது அனுப்பினுன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vii) தென் இந்தியாவிலும் தன் அதிகாரத்தை நிலை நாட்டிய அரசன் ——— என்பான்.

(viii) ——— என்ற அரசனுடைய வாசலில் ———, ——— காணலாம்.

2. பழைய காலத்தில் யாத்திரிகர்களுக்கு வழிகளில் என்ன இடர்ப்பாடுகளிருந்தன.

3. மார்க்கோபோலோ செய்த யாத்திரையைப்பற்றி விபரிக்குக.

4. இபின்பட்டுட்டா இலங்கைக்கு வந்த வரலாற்றைப் பற்றி எழுதுக.

5. குப்ளாகான் தனது பரந்த இராச்சியத்தை எவ்வாறு ஆட்சி புரிந்தார்?

6. ஐரோப்பிய நாடுகளுக்கும் கீழைத்தேச நாடுகளுக்கும் பழைய காலத்திலேற்பட்ட தொடர்புகள் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாம் பாடம்

# இங்கிலாந்து தேசம்

பல சாதியினருங் காலத்துக்குக் காலம் இங்கிலாந்தைப் படையெடுத்த வரலாறே இங்கிலாந்தின் பூர்வீக சரித்திரமாகும். கி. மு. 600 தொடக்கம் கெல்ட்ஸ் என்ற சாதியினர் இங்கிலாந்திற் குடியேறினர். அச்சாதியார் பயங்கரமான சண்டை செய்வோராயும், கிராமங்களில் வசிப்போராயும், சாதி அபிமானமற்றவர்களாயுங் காணப்பட்டனர். இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொத்துலாந்து ஆகிய பகுதிகளில் வசித்த மக்கள் ஒரே பாஷையையே பேசினர். கி. மு. 500ன் பின் இரும்பின் உபயோகங் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிலாந்தின் தென்கிழக்குச் சமபூமியில் சனங்கள் தானியங்களை பயிரிட்டார்கள்.

கி. மு. 55ல் யூலியஸ்சீசர் இங்கிலாந்துக்குச் சென்று சில நாட்கள் அங்கே செலவழித்துப் பின் திரும்பினர். அடுத்த ஆண்டில் பெரிய படையுடன் சென்று அங்கிருந்த சில தலைவர்களை அடக்கிவிட்டுப் பின் திரும்பினர். கி. பி. முதலாம் நூற்றாண்டில் இங்கிலாந்து உரோம இராச்சியத்தின் ஒரு மாகாணமாக்கப்பட்டது. நாலாவது நூற்றாண்டு முடியும் வரையும் உரோமர் ஆதிக்கம் அங்கே நிலவியது. ஐந்தாவது நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்து உரோமர் நீங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் சாக்ஸன்ஸ் என்ற ஜேர்மன்சாதியினர் இங்கிலாந்திலுள்ள கெல்ட் ஸ்-சாதியினருடன் போர்செய்து வென்றனர். இச்சாதியாருடன் ஆங்கிலர் என்ற ஒரு சாதியினரும் வாழ்ந்தனர். ஆகையால் அந்த நாட்டிற்கு அப்பெயரையிட்டு வழங்கினூர்கள். கி. பி. 787 தொடங்கி டென்மார்க்கு, நோர்வே, சுவீடன் ஆகிய தேசங்களிலிருந்து தேனியர் என்ற சாதியரார் இங்கிலாந்துக்குப் படையெடுத்து வந்தனர். அல்பிரட் என்ற ஆங்கில அரசன் அவர்கள் வரவைத் தடுத்து வைத்தான். கி. பி. 900 வரையில் இங்கிலாந்து முழுவதும் தேனியருடைய ஆட்சியின்கீழ் அடங்கியது. கடைசியாக கி.பி. 1066-ல் பிரான்சு தேசத்திலிருந்து நோர்மானியர் என்ற சாதியினர் வெற்றி வில்லியத்தின் தலைமையில் படையெடுத்துச் சென்று சாக்ஸன் அரசரிடமிருந்து இங்கிலாந்தைக் கைப்பற்றினர். அச்சாதியினர் ஐரோப்பா முழுவதும் அச்சத்தை உண்டாக்கினர். வடக்கிலிருந்து வருபவர்களுடைய கோபாவேசத்திலிருந்து தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று சனங்கள் ஆண்டவனை மன்ருடினூர்கள்.

அக்காலத்தில் அடிக்கடி ஏற்பட்ட படையெழுச்சிகளைத் தடுப்பதற்குத் தகுந்த வலிமையுள்ள அரசனும் முறையான அரசாங்கமும் இல்லை. ஆகையாற் சனங்கள் வலிமையுள்ள அதிகாரிகளின் பாதுகாப்பைத் தேடினர். குடிகள் அப்பாதுகாப்பைப் பெறுவதற்காக ஊழியஞ் செய்வதுடன் போர்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுங் காலங்களில் படைத்துணையுங் கொடுத்துதவி னர். இவைகளைச் செய்ய இணங்காத குடிகளை அதிகாரிகள் துரத்தி விடுதலுமுண்டு. மக்கள் அதிகாரிகளுக்கு ஊழியஞ் செய்வதோடு தாங்கள் குடியிருக்கும் நிலங்களின் விளைவில் ஒருபகுதியையும் அதிகாரிகளுக்குக் கொடுத்தனர். மானியமாக நிலத்தைப் பெற்று வாழ்ந்த முறை மானியமுறையென ஐரோப்பாவில் வழங்கியது.

நிலங்கள் முழுவதும் அரசனுக்கு உரியன. அந் நிலங்களை அதிகாரிகளுக்கு அரசன் ஈந்து, சண்டை செய்யுங் காலத்து அதிகாரிகளிடம் படைத்துணையைப் பெற்ருன். சிலகாலங்களில் அந்தக் குறுநில மன்னர்கள் தங்களுடைய படைத்துணையைக் கொண்டு அரசனுக்கெதிரே தங்கள் அதிகாரத்தைக் காட்டுவதுமுண்டு. அரசனிலும் பார்க்கச் சில குறுநில மன்னர்கள் அதிக செல்வாக்கும் அதிகாரமுமுடையவராயிருந்தனர். அரசன் அவர்களை அடக்கித் தன் அதிகாரத்தைச் செலுத்த வெகுகாலமெடுத்தான். ஆங்கிலக் குறுநில மன்னர்கள் மதில்கள் சூழ்ந்த கோட்டைகளைக் கட்டி வசித்தனர்.

இங்கிலாந்திலிருந்த குறுநில மன்னர்கள் அடிக்கடி தங்கள் அரசனுக்கெதிராகச் சண்டையிடுவதும், மாருகக் கிளர்ச்சி உண்டுபண்ணுவதுமுண்டு. இங்கிலாந்தை ஆண்ட ஜோன் என்ற அரசனுக்கு (1199—1216) எதிராகக் குறுநில மன்னர்கள் எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோரும் எழுந்து மகா உரிமை உறுதி என்ற ஒரு சாதனத்தில் கையொப்பமிடச் செய்தார்கள். ஜோனின் மகனுன மூன்ருவது ஹென்றியும் அந்த உரிமை உறுதியின்படி ஒழுகவேண்டுமென்ற வாக்கை அவர்கள் அவரிடமிருந்து பெற்றனர். சைமன் டி மொன்போட் என்ற குறுநில மன்னன் ஒருவன் அரசனைக் கைதுசெய்தான்.

## வினுக்கள்

1. கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற பதங்கள் வைத்து எழுதுக.

   (i) கி. மு. 600 தொடக்கம் ——— (கெல்டஸ், நோர் மானியர்) என்ற சாதியினர் இங்கிலாந்திற் குடியேறினர்.

   (ii) இங்கிலாந்தின் ——— (தென்கிழக்கு, மேற்கு) பகுதியிற் குடியேறியவர்கள் ——— பயிரிட்டார்கள்.

   (iii) ——— (கி. மு. 55-ல்) யூலியஸ்சீசர் இங்கிலாந்துக்குச் சென்ருர்.

   (iv) கி. பி. முதலாம் நூற்ருண்டில் இங்கிலாந்து ——— (உரோம இராச்சியத்தின், பிரான்சு தேசத்தின்) ஒரு மாகாணமாக்கப்பட்டது.

   (v) கி. பி. 787 வரையில் ——— (சாக்ஸன்ஸ், தேனியர்) என்ற சாதியார் இங்கிலாந்துக்குப் படையெடுத்துச் சென்றனர்.

   (vi) அடிக்கடி ஏற்பட்ட படை எழுச்சியினுற் சனங்கள் வலிமையுள்ள ——— (அரசரின், அதிகாரிகளின்) பாதுகாப்பைத் தேடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vii) குறுநில மன்னர்களிடமிருந்து நிலங்களைப்பெற்று வாழும்முறை, ——— (மானியமுறை, ஊழியமுறை) என வழங்கியது.

(viii) ஜோன் என்ற ஆங்கில அரசன் கையொப்பமிட்ட சாதனம் ——— (மகா உரிமை உறுதி, மக்களின் உறுதி) எனப்படும்.

2. இங்கிலாந்தைக் கைப்பற்றச் சென்ற சாதியார் யார்? எச்சாதியினர்கள் வெற்றி பெற்றனர்?

3. அடிக்கடி படை எழுச்சிகள் ஏற்பட்டதற்குக் காரணங்கள் யாவை?

4. குறுநில மன்னர்களைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறுக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர் எழுதிய நூல்கள்:

1. இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்
கி. பி. 1505 வரை
*முதலாம் பாகம் ரூபா. 2-25*

2. இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்
(1505-1796)
*இரண்டாம் பாகம் ரூபா. 2-25*

3. இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்
(1796-1948)
*மூன்றாம் பாகம் ரூபா. 2-25*

4. உலக சரித்திரம் (1505-1948)
G. C. E. வகுப்புக்குரியது.
*விலை ரூபா. 6-00*

5. இலங்கைச் சரித்திரம் (1505-1948)
G. C. E. வகுப்புக்குரியது.
*விலை ரூபா. 5-75*

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org